# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 2 புதன்கிழமை (16.03.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 110




02 வெளியேறுகிறது அயர்லாந்து


03 அதிர்ச்சி கொடுக்குமா கனடா?


16 தவறான கற்றலுக்கான வழிகாட்டல்


23 ஜப்பானிய கதிர்வீச்சு அபாயம்


கலைஞர் 25 ஸ்பெக்ட்ரம் ஊழலில் கலைஞர் ரி.வி.


# இலங்கையின் போர்க் குற்றங்கள் விசாரிக்கப்பட்டேயாக வேண்டும்

## செய்தவர் யாரெனினும் பரவாயில்லை எனக் கண்டிப்பு காட்டுகிறது அமெ.

நியூயோர்க், மார்ச் 16

**போரின் இறுதிக் கட்டத்தின் போது இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் விசாரிக்கப்பட்டே ஆகவேண்டும் என்று அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தி இருக்கிறது அமெரிக்கா. போர்க் குற்றங்களை யார் செய்தார்கள் என்பது பற்றிக் கவலையில்லை, செய்தவர்கள் அவற்றுக்குப் பொறுப்புச் சொல்லியே ஆகவேண்டும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.**

கடந்த இரண்டு வாரங்களுக்குள், இலங்கையின் போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்துவது இது இரண்டாவது தடவையாகும். இந்த விடயத்தில் அது இறுக்கமான போக்கைக் கடைப்பிடிக்கிறது என்பதையே இந்த அறிக்கைகள் காட்டுகின்றன என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பொறுப்புக் கூறுதல் என்பது மிக முக்கியமானது என்று தெரிவித்தார், தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக் (29ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளூராட்சி தேர்தல்களில் ஐ.தே.கட்சி பெரும்பான்மை சபைகளை கைப்பற்றும்

## திஸ்ஸ நம்பிக்கை



கொழும்பு, மார்ச் 16

நாளைஇடம்பெறும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பெரும்பான்மை சபைகளைக் கைப்பற்றி அமோக வெற்றிபெறும் என்று ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

எமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை நாம் வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளோம். அதிக எண்ணிக்கையிலான மக்கள் எமது தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொண்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

தேர்தல்கள் இடம்பெறும் 235 உள்ளூராட்சிச் சபைகளுள் பெரும்பான்மையான சபைகளை நாம் வெற்றிகொள்வோம். மக்கள் எம்முடனேயே இணைந்துள்ளனர்.

இதுவரை நாடளாவிய ரீதியில் தேர்தல் வன்முறைகள் 400 இடம்பெற்றுள்ளன. 3 மரணங்கள் சம்பவித்துள்ளன. 92 பேர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறாதவாறு தேர்தல்கள் ஆணையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் வாக்களிப்பதற்காக இரண்டு மணிநேரம் விடுமுறை வழங்கப்படவுள்ளது. இது போதாது. அவர்களுக்கு தேர்தல் தினத்தன்று ஒரு நாள் விடுமுறை வழங்கப்படவேண்டும். - என்றார்.

(உ-சி)

# உள்ளூராட்சி சபைத் தேர்தலில் உங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்துங்கள்

## ஐ.ம.சு. முன்னணி அழைப்பு

கொழும்பு, மார்ச் 16

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் மக்கள் அனைவரையும் தமது வாக்குரிமையைப் பயன்படுத்துமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அழைப்பு விடுத்துள்ளது. எந்தக் கட்சிக்கு வாக்களித்தாலும் ஜனநாயக உரிமைகளில் ஒன்றான வாக்குரிமையைப் பயன்படுத்தத் தவறவேண்டாம் என்று இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும நேற்றுக் கேட்டுக்கொண்டார்.

கொழும்பு, மகாவலி கேந்திர நிலையத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் அரசு நிச்சயம் வெற்றிபெறும். அதேவேளை, பலமான எதிர்க்கட்சியும் தேவை. கடந்த தேர்தல் களில் தோல்விகளைச் சந்தித்த



ஐக்கிய தேசியக் கட்சி, தோல்வியை மூடிமறைப்பதற்கும், சமாளிப்பதற்கும் தேர்தல்கள் ஆணையாளர் மீது குற்றஞ் சுமத்தி வந்தது.

இவ்வாறான தந்திரங்களை எதிர்வரும் 18ஆம் திகதி கையாளாமல் தோல்விக்கான அடிப்படைக் காரணத்தை ஆராயுமாறு ஐக்கிய தேசியக் கட்சியிடம் நாம் மிகக்கௌரவத்துடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படி அவர் தெரிவித்தார். (சி)

# தேர்தல்களில் ஆளும் கட்சி அமோக வெற்றிபெறும்

## அமைச்சர் சுசில் நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 16

உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமோக வெற்றிபெறும். தேர்தலின் பின்னர் தேர்தல் நடத்தப்பட்ட விதம் குறித்தும், தேர்தல் ஆணையாளர் தொடர்பிலும் குறை கூறுவதை ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பியும் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

- இப்படி பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்றுக் கேட்டுக்கொண்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர (29ஆம் பக்கம் பார்க்க)

# சைக்கிள்களில் சமாந்தரமாகச் சவாரி; நேற்று 80 பேர் பொலிஸாரிடம் சிக்கினர்

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ். நகர்ப்பகுதிகளில் போக்குவரத்து விதி முறைகளை மீறி வீதிகளில் சைக்கிள்களில் சமாந்தரமாகச் சென்ற 80 பேர் நேற்று பொலிஸாரிடம் வகையாக மாட்டிக்கொண்டனர்.

இவர்களில் மாணவர்கள் 50 பேரும், பொதுமக்கள் 30 பேரும் உள்ளடங்குவர். மாணவர்கள் பொலிஸாரால் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப் (29ஆம் பக்கம் பார்க்க)

# தீர்வு குறித்தே நாளைமறுதினம் அரசுடன் பேச்சு நடத்தப்படும்

## சுமந்திரன் எம்.பி. நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 16

கூட்டமைப்பு - அரசு மூன்றாம் கட்டப் பேச்சுகள் நாளைமறுதினம் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும் என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று 'உதயனு' க்குத் தெரிவித்தார்.

பேச்சுகளில் இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்தே பேசப்படும். அத்துடன் கடந்த மாதம் இடம்பெற்ற இரண்டாம் கட்ட பேச்சுகளில் அரசு உறுதியளித்தபடி தடுத்து வைக்கப்பட்டுள்ள புலிகள் இயக்க உறுப்பினர்களின் பெயர்கள் வவுனியா பயங்கரவாத புலனாய்வுத் திணைக்களத்தில் மக்களின் பார்வைக்கு (29ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பான் அணு உலையால் இலங்கைக்கு ஆபத்தில்லை

ஜப்பானிய அணுஉலை வெடிப்புகளால் எவ்வித ஆபத்தும் இலங்கைக்கு வராது என்று வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

அணுஉலையில் இருந்து வெளியான கதிர்வீச்சு இலங்கையில் பாதிப்பு ஏற்படும் என கைத்தொலைபேசிகள் மூலம் குறுந்தகவல் வதந்திகள் வெளியானதை அடுத்தே வைத்திய வட்டாரங்கள் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டன.

# நான்காவது அணு உலையும் ஜப்பானில் வெடித்துச் சிதறியது

## கதிர்வீச்சு அபாயம் உண்டென எச்சரிக்கை

டோக்கியோ, மார்ச் 16

ஜப்பானிலுள்ள நான்காவது அணு உலையில் நேற்று செவ்வாய்க்கிழமை வெடிப்பு ஏற்பட்டது. இதனால் தீச்சுவாலை எழும்பியது. இவ் வெடிப்பால் அணு கதிர்வீச்சு அபாயம் உண்டு என உடனடி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

முன்னர் வந்த செய்தி 23 ஆம் பக்கத்தில்

கடந்த வெள்ளிக்கிழமை பூகம்பம் ஏற்படுவதற்கு முன்னரே, இந்த நான்காவது அணுஉலையின் (29ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



காலிறுதிக்குள் நுழைந்துவிட்டோம்...





ஆட்டநாயகன் டுமினியின் அதிரடி

# முதல் சுற்றுடன் வெளியேறுகிறது அயர்லாந்து

- டிலீப் -

வாய்ப்புக்கள் தவறியது. முடிவு இதனால் சோகமாகியது. பலமான அணிகளையும் கலங்கடித்த அயர்லாந்து சொதப்பியது நேற்று. முதல் சுற்றுடன் வெளியேறுவது அவர்களின் முடிவாகியது. டுமினியால் தப்பிப் பிழைத்தது தென்னாபிரிக்கா.

எட்டிக் கொண்டிருக்கின்றது முடிவை முதல் சுற்று ஆட்டங்கள். பத்தாவது உலகக் கிண்ணத்தில் முப்பத்தினான்காவது ஆட்டம் கொல்கத்தாவில் நேற்று. முக்கிய ஆட்டம் மோதிய இரு அணிகளுக்கும். முதலில் நடந்தது நாணய சுழற்சி. வெற்றி பெற்றது அயர் லாந்து. தீர்மானம் களத்தடுப்பு.

களமிறங்கியது தென்னாபிரிக்கர்களின் ஆரம்ப ஜோடி. அம்லா-ஸ்மித் ஆட்டத்தை ஆரம்பித்தனர். ஆரம்ப ஓவர்கள் அமைதியாய் தொடங்கியது. அடுத்த ஓவர்களிலேயே காட்டினார் அம்லா அதிரடியை. விடவில்லை அயர்லாந்து. வெளியேற்றியது அம்லாவை. 24 ஓட்டங்கள் பெற்றிருந்தது ஆபிரிக்கா. ரன்கின் பந்தில் சரிந்தது முதல் விக்கெட். ஸ்மித் நிதானம் தொடர்ந்தது. வன்விக் இணைந்தார் அவருடன்.

அதிரடியாய் ஆட்டத்தின் போக்கு மாற்றம். வன்விக் முதலாவது 'பவர்பிளேயை' முழுதாய் பயன்படுத்தினார். ஏறியது ஆபிரிக்காவின் ஓட்ட வேகம். எட்டியது அரைச்சதம் ஆபிரிக்கா. அயர்லாந்து தவறவிட்டது வன்விக்கின் பிடிகளை. களத் தடுப்பில் அயர்லாந்து சொதப்பியது. சாதகமாகியது வன்விக் அதிரடிக்கு. சந்தர்ப்பம் மீண்டும் கிடைத்தது அயர்லாந்துக்கு. ஸ்மித் இந்த முறை அயர்லாந்திடம் அகப்பட்டவர். தேவையற்ற ஓட்டம் எடுப்பதற்கு முயன்றதால் ரன் அவுட். சரிசெய்தது இதுவரை விட்ட சொதப்பல்களை. மூணியின் நேரடி எறியில் விக்கெட் தகர்ந்து 'ரன்அவுட்' ஆனார்.

விக்கெட் வீழ்ந்தும் தளரவில்லை வன்விக் அதிரடி. தொடர்ந்தது அவரது அதிரடி. துவம்சம் செய்தார் அயர்லாந்தின் பந்து வீச்சை. பவுண்டரிகள், சிக்சர்கள் தொடர்ந்தன. அயர்லாந்து முடிவுகட்டியது வன்விக் ஆட்டத்துக்கு. சுழல் பந்து வீச்சை அழைத்தது அயர்லாந்து. எடுத்தது வன்விக் விக்கெட்டை. 84 ஓட்டங்கள் மூன்று விக்கெட் இழப்பு. கலிஸ் வந்தார். தென்னாபிரிக்காவின் சரிவை மீட்பார் எதிர்பார்ப்பு. இறுதியாட்டம் இந்தியாவுக்கு எதிராய் அபாரமாய் ஆடியவர். தவிடுபொடியாக்கவில்லை எதிர்பார்ப்புக்களை. ஆடினார் அமைதியாய். துரதிஷ்டம் துரத்தியது அவரை. அசத்தியது அயர்லாந்தின் களத்தடுப்பு. அடுத்து ஆட்டமிழந்தார் கலிஸ். ரன் அவுட்டில் அவரது வெளியேற்றம். பிளெஸிஸ் நீண்ட நேரம் களத்தில் நின்றாடவில்லை. 117/5 தென்னாபிரிக்காவின் நிலைமை. அயர்லாந்துக்கு வெற்றிச் சாத்தியம். மாற்றியமைத்தது டுமினி-இங்கிராம் ஜோடி. அமைதியாய் தொடங்கியது இணைப்பு. விக்கெட் இழப்பால் ஏற்பட்ட சரிவை மீட்டது இந்த ஜோடி. அயர்லாந்து பந்து வீச்சை சமாளித்தது இந்த ஜோடி. மெதுவாய் தொடங்கிய இணைப்பு மாறியது பின்னர் அதிரடிக்கு. தாக்குதல் தொடுத்தது டுமினி-இங்கிராம் ஜோடி. சமாளிக்க முடியாது திண்டாட்டம் அயர்லாந்துக்கு.

அரைச்சதம் கடந்தது இவர்களின் இணைப்பு. பிரிப்பதற்கான அயர்லாந்தின் போராட்டம் வீண். டுமினி கடந்தார் அரைச்சதம். இங்கிராம் ஆட்டம் அதிரடி. 87 ஓட்டங்கள் பகிர்ந்தது ஜோடி. முடிவு கட்டினார் ஜோன்ஸ்ரன். பிரித்தார் இணைப்பை. 43 பந்தில் 46 ஓட்டங்கள் பெற்றார். தவறியது அவர் அரைச் சதம் நான்கு ஓட்டங்களால்.

நிலைத்து நின்று தாக்குதல் தொடர்ந்தார் டுமினி. போத்தா அவருடன் இணைந்து தொடுத்தார் தாக்குதல். எட்டியது ஆட்டம் இறுதிக்கட்டத்தை. தடுமாறாமல் தொடர்ந்தது இவர்களின் ஆட்டம். 'பட்டிங் பவர் பிளேயில்' தாக்குதல் 'ஜெட்' வேகத்தில் நடத்தி உயர்த்தியது ஓட்டவேகத்தை. ஆட்டத்தின் இறுதி ஓவர். டுமினி சதத்தை முத்தமிடும் தருணத்தில் தட்டிப் பறித்தது அயர்லாந்து. தவறியது ஓர் ஓட்டம் டுமினியின் சதத்துக்கு. அணிக்காய் போராடியதால் சதம் தவறியது அவருக்கு. முடிந்தது ஐம்பது ஓவர்கள். 272 ஓட்டங்கள் பெற்றுக்கொண்டது தென்னாபிரிக்கா. இழந்தது ஏழு விக்கெட்டுக்கள். பெயர் சொல்லும் படியாய் வீசவில்லை பந்துவீச்சு யாரும்.

தொலைதூர இலக்கை விரட்டத் தொடங்கியது அயர்லாந்து. எட்ட வேண்டும் இந்த இலக்கை காலிறுதிக்குள் நுழைவதற்கு. போட்டபீல்ட்-ஸ்ரிறிலிங் ஆபிரிக்க பந்து வீச்சை சிதறிக்க களம் கண்ட அயர்லாந்தின் ஆரம்ப வீரர்கள். ஆரம்பித்தது அதிரடியுடன் ஆட்டம். அடங்கியது அடுத்த கணமே ஆபிரிக்க பந்து வீச்சில். வேகத்தில் அசத்தினார் மோர்க்கல். பவிலியனுக்கு அனுப்பினார் போட்டபீல்ட்டை. எட்டு ஓட்டங்களில் சரிந்தது முதல் விக்கெட். சுதாகரிக்க கொடுக்கவில்லை இடம். 19 ஓட்டங்களில் சரிந்தது அடுத்த விக்கெட். நீடித்து நிலைக்க முயன்றது அயர்லாந்து. அதற்காய் நடத்தியது நீண்டதொரு போராட்டம். கலிஸின் வேகத்தில் என்.ஓ பிரெய்ன் வெளியேற்றம். 35 ஓட்டங்களை தொடுவதற்குள் மூன்று விக்கெட்டுக்கள் இழப்பு. சுழலில் கலக்கினர் போத்தா - பீற்றர்ஸன். மத்திய வரிசை துடுப்பாட்டம் சரிந்தது அவர்களின் பந்தில். இங்கிலாந்துடன் கலக்கிய கெவின் ஓ பிரெய்ன் ஏமாற்றினார் இந்த முறையும். சோபிக்கவில்லை அயர்லாந்தின் துடுப்பாட்டம். வேகமாய் சரிந்தது அயர்லாந்தின் விக்கெட்டுக்கள். முடிவுக்கு விரைவாய் வந்தது ஆட் டம். பதினேழு ஓவர்கள் இருந்தது எஞ்சி. 141 ஓட் டங்களுக்குள் முடிந்தது ஆட்டம். வேகத்தில் மோர்கல் கலக்க, சுழலில் சுத்தினார் பீற்றர்ஸன். மூன்று விக்கெட்டுக்கள் இழந்தது இருவருக்கும். [illegible] ஆட்ட நாயகன் விருது.

## அணிகளின் நிலைகள்

| பிரிவு A | M | W | L | T | N/R | Pt | Net/R |
|---|---|---|---|---|---|---|---|
| நியூஸிலாந்து | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | +1.957 |
| பாகிஸ்தான் | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | +0.729 |
| இலங்கை | 5 | 3 | 1 | 0 | 1 | 7 | +2.705 |
| ஆஸ்திரேலியா | 4 | 3 | 0 | 0 | 1 | 7 | +1.645 |
| சிம்பாப்வே | 5 | 1 | 4 | 0 | 0 | 2 | -0.669 |
| கனடா | 5 | 1 | 4 | 0 | 0 | 2 | -2.046 |
| கென்யா | 5 | 0 | 5 | 0 | 0 | 0 | -3.005 |

| பிரிவு B | M | W | L | T | N/R | Pt | Net/R |
|---|---|---|---|---|---|---|---|
| தென்னாபிரிக்கா | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | +1.606 |
| இந்தியா | 5 | 3 | 1 | 1 | 0 | 7 | +0.768 |
| மே.தீவுகள் | 4 | 3 | 1 | 0 | 0 | 6 | +2.206 |
| பங்களாதேஷ் | 5 | 3 | 2 | 0 | 0 | 6 | -0.765 |
| இங்கிலாந்து | 5 | 2 | 2 | 1 | 0 | 5 | +0.013 |
| அயர்லாந்து | 5 | 1 | 4 | 0 | 0 | 2 | -0.881 |
| நெதர்லாந்து | 5 | 0 | 5 | 0 | 0 | 0 | -2.386 |

M போட்டி L தோல்வி Net/R சராசரி T சமனிலை
W வெற்றி Pt புள்ளிகள் N/R முடிவுறா ஆட்டம்

## 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண முப்பத்தி நான்காவது ஆட்டம்

ஆட்டம்: தென்னாபிரிக்கா Vs அயர்லாந்து — நாணயச் சுழற்சி: அயர்லாந்து
முடிவு: 131 ஓட்டங்களால் தெ.ஆபிரிக்கா வெற்றி — ஆட்டநாயகன்: டுமினி

தென்னாபிரிக்கா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| அம்லா | c டொக்ரெல் b ரன்கின் | 18 | 17 | 1 | 1 |
| ஸ்மித் | run out( மூணி) | 07 | 18 | 0 | 0 |
| வன்விக் | b டொக்ரெல் | 42 | 41 | 7 | 1 |
| கலிஸ் | run out( போட்டர்பீல்ட்) | 19 | 31 | 3 | 0 |
| டுமினி | c கே.ஓ.பிரெய்ன் b மூணி | 99 | 103 | 6 | 1 |
| பிளெஸிஸ் | c ஜோன்ஸ்ரன் b ஸ்ரிறிலிங் | 11 | 19 | 0 | 0 |
| இங்கிராம் | b ஜோன்ஸ்ரன் | 46 | 43 | 7 | 0 |
| போத்தா | ஆட்டமிழப்பில்லை | 21 | 28 | 1 | 0 |
| பீற்றர்ஸன் | ஆட்டமிழப்பில்லை | 00 | 00 | 0 | 0 |
| மோர்க்கல் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ஸ்ரெய்ன் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (lb 3,w 4, b 2) | 09 | | | |

TOTAL - 272/7 (50)

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ரான்கின் | 10 | 59 | 1 | 0 |
| ஜோன்ஸ்ரன் | 10 | 76 | 1 | 0 |
| மூணி | 08 | 36 | 1 | 0 |
| டொக்ரெல் | 10 | 37 | 1 | 0 |
| ஸ்ரிறிலிங் | 10 | 45 | 1 | 0 |
| குசாக் | 02 | 14 | 0 | 0 |

1-24 (அம்லா), 2-52 (ஸ்மித்), 3-84 (வன்விக்), 4-95 (கலிஸ்), 5-117 (பிளெஸிஸ்), 6-204 (இங்கிராம்), 7-269 (டுமினி)

அயர்லாந்து

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| போட்டபீல்ட் | c ஸ்மித் b மோர்க்கல் | 06 | 08 | 1 | 0 |
| ஸ்ரிறிலிங் | c கலிஸ் b மோர்க்கல் | 10 | 11 | 2 | 0 |
| ஜொய்ஸ் | lbw b போத்தா | 12 | 24 | 2 | 0 |
| என்.ஓ பிரெய்ன் | c வன்விக் b கலிஸ் | 10 | 16 | 0 | 1 |
| வில்ஸன் | lbw b பீற்றர்ஸன் | 31 | 48 | 4 | 1 |
| கே.ஓ பிரெய்ன் | c அம்லா b பீற்றர்ஸன் | 19 | 24 | 2 | 0 |
| குசாக் | c ஸ்மித் b பீற்றர்ஸன் | 07 | 11 | 1 | 0 |
| மூணி | c வன்விக் b கலிஸ் | 14 | 28 | 1 | 0 |
| ஜோன்ஸ்ரன் | c வன்விக் b டுமினி | 12 | 16 | 0 | 1 |
| டொக்ரெல் | c வன்விக் b மோர்க்கல் | 16 | 12 | 3 | 0 |
| ரான்கின் | ஆட்டமிழப்பில்லை | 00 | 02 | 0 | 0 |
| உதிரிகள் | (w 4) | 04 | | | |

TOTAL - 141/10(33.2)

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஸ்ரெய்ன் | 4 | 13 | 0 | 1 |
| மோர்க்கல் | 5.2 | 33 | 3 | 0 |
| கலிஸ் | 6 | 20 | 2 | 1 |
| போத்தா | 8 | 32 | 1 | 0 |
| பீற்றர்ஸன் | 8 | 32 | 3 | 0 |
| டுமினி | 2 | 11 | 1 | 0 |

1-8 (போட்டபீல்ட்), 2-19 (ஸ்ரிறிலிங்), 3-35 (என்.ஓ பிரெய்ன்), 4-51 (ஜொய்ஸ்), 5-92(கே.ஓ.பிரெய்ன்), 6-92(வில்ஸன்), 7-107(குசாக்), 8-123(ஜோன்ஸ்ரன்), 9-137(மூணி), 10-141(டொக்ரெல்)

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

உங்கள் இல்லங்களுக்குத் தேவையான அனைத்துவகையான இலத்திரனியல் சாதனங்களை குறைந்த விலையில் பெற்றிட இன்றே நாடுங்கள்
Midea Electro Mart
No: 1-1, 1-H, Stanley Road, Jaffna, SriLanka.
T.P: 021 222 4566, Fax:021 222 1646.
Authorized Dealer for Abans Ltd
e-mail: midea21@gmail.com
(48,19,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெரிவாகிய அணிகளும் தெரிவாகப்போகும் அணிகளின் குழப்பங்களும்

- அருண்மொழி -

உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் காலிறுதியில் நுழையப்போகும் அணிகள் குறித்து பெரும் ஆர்வமேற்பட்டுள்ளது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் திங்கட்கிழமைவரை 33 லீக் ஆட்டங்கள் முடிந்து விட்டன. 'ஏ' பிரிவிலிருந்து காலிறுதிக்கு முன்னேறும் 4 அணிகள் ஏறக்குறையை இறுதி செய்யப்பட்டு விட்டன. புள்ளிப் பட்டியலில் முதல் 4 இடங்கள் வகிக்கும் இலங்கை, நியூஸிலாந்து, ஆஸ்திரேலிய, பாகிஸ்தான் அணிகள் காலிறுதிச் சுற்றை எட்டிவிட்டன. சிம்பாப்வே, கனடா, கென்யா அணிகள் இந்தப் பிரிவில் வெளியேறுகின்றன.

ஆனால், 'பி' பிரிவில்தான் சிக்கல் நீடிக்கின்றது. இந்தியா 5 ஆட்டங்களில் பங்கேற்று 3 வெற்றி, ஒரு தோல்வி, ஒரு சமநிலையுடன் 7 புள்ளிகளுடன் தனது பிரிவில் முதலிடம் வகிக்கிறது. இன்னும் ஓர் ஆட்டத்தில் இந்தியா மோத உள்ளளது. மேற்கிந்தியத்தீவுகளுடனேயே அந்த மோதல் இடம்பெற இருக்கின்றது. அந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றால் இந்தியாவின் காலிறுதி வாய்ப்பு உறுதியாகிவிடும். மேற்கிந்தியத்தீவுகளுடன் தோற்கும் பட்சத்தில் ஏனைய அணிகளின் வெற்றி தோல்வியில் இந்திய அணி தங்கியிருக்க வேண்டிவரும்.

அதாவது பங்களாதேஷ் அணி தென்னாபிரிக்க அணியினை வெற்றி கொள்ளவேண்டும். இங்கிலாந்து மேற்கிந்தியத்தீவுகளை அபார வெற்றி கொள்ள வேண்டும். இவையிரண்டும் நடந்தால் இந்தியா அடுத்த சுற்றை நினைத்துப்பார்க்க முடியாது.

அடுத்து தென்னாபிரிக்க அணி பங்களாதேஷ் அணியுடன் மோத இருக்கின்றது. இதுவரை ஆடிய 5 ஆட்டங்களில் 4 ஆட்டங்களில் வெற்றி பெற்று 8 புள்ளிகளுடன் உள்ளது. இதன் மூலம் தென்னாபிரிக்கஅணி தனது காலிறுதி வாய்ப்பினை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளது. பங்களாதேஷுடனான ஆட்டத்தில் வெற்றிபெற்றாலும் சரி தோல்வியடைந்தாலும் சரி தென்னாபிரிக்க அணிக்கு எந்த வித பாதிப்பும் இல்லை.

மேற்கிந்தியத்தீவுகளும் காலிறுதி வாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்குப் போராட வேண்டியிருக்கின்றது. அந்த அணி இதுவரை நான்கு ஆட்டங்களில் விளையாடி மூன்று ஆட்டங்களில் வெற்றி பெற்று 6 புள்ளிகளுடன் இருக்கின்றது. அந்த அணியின் நிகர ஓட்ட சராசரி ஏனைய அணிகளைவிட உயர்வாக இருக்கின்றது. அடுத்து வரும் இரு ஆட்டங்களும் இங்கிலாந்து, இந்திய அணிக்கு எதிராகவே இடம்பெற இருக்கின்றன. இதில் ஓர் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி பெற்றாலே அந்த அணியின் காலிறுதி வாய்ப்பு உறுதியாகிவிடும். இரு ஆட்டங்களிலும் வெற்றிபெறத் தவறும்பட்சத்தில் காலிறுதிக்கான வாய்ப்பு குறைவடையுமே தவிர அற்றுப்போகாது. அந்த அணியின் நிகர ஓட்ட சராசரி வேகம் ஏனைய அணிகளைவிட உயர்வாக இருப்பதனால் மேற்கிந்தியத்தீவுகள் தப்பித்துவிடும்.

பங்களாதேஷ் அணியைப் பொறுத்தவரை ஐந்து ஆட்டங்களில் விளையாடியுள்ள அந்த அணி மூன்று ஆட்டங்களில் வெற்றி பெற்று 6 புள்ளிகளுடன் உள்ளது. எஞ்சியுள்ள ஓர் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணியை எதிர்கொள்ள இருக்கின்றது. அந்த ஆட்டத்தில் தோல்வியடையும் பட்சத்தில் ஏனைய அணிகளின் வெற்றி தோல்வி பங்களாதேஷின் காலிறுதி வாய்ப்பை தீர்மானிக்கும். அதவாது இங்கிலாந்து அணி மேற்கிந்தியத்தீவுகளுடன் அதிக வித்தியாசத்தில் தோல்வியடைய வேண்டும்.

இங்கிலாந்து அணியினைப் பொறுத்தவரையில் அடுத்ததாக சந்திக்கவுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணியினை வெற்றிகொண்டால் கூட காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறுவதற்கு பங்களாதேஷ் அணியின் ஆட்டம் பங்களிப்பை செலுத்தும். பங்களாதேஷ் அணி தென்னாபிரிக்க அணியை வெற்றி கொண்டால் 8 புள்ளிகளைப் பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறிவிடும். பங்களாதேஷ் தோல்வியடைவதுடன் மேற்கிந்தியத்தீவுகளையும் இங்கிலாந்து வீழ்த்த வேண்டும்.

அயர்லாந்து,நெதர்லாந்து அணிகள் முதல் சுற்றுடனேயே எதுவித பிரச்சினையும் இல்லாமல் வெளியேறி விட்டன.

எனவே இனிவரும் ஆட்டங்கள் சுவாரஸியமானவையாக இருப்பதுடன் பரபரப்புக்கும் குறைவில்லாமல் இருக்கும்.

# ஆஸிக்கு அதிர்ச்சி கொடுக்குமா கனடா?

கனடா அணி ஆஸ்திரேலிய அணியை பெங்களூர் சின்னச்சாமி மைதானத்தில் இன்று சந்திக்கின்றது. இதுவரை கனடா அணி தான் விளையாடிய ஐந்து ஆட்டங்களில் ஓர் ஆட்டத்தில் மாத்திரமே வெற்றி கண்டிருக்கின்றது. அதுவும் கென்ய அணிக்கு எதிராகவே அந்த வெற்றியைப் பதிவு செய்தது கனடா. இந்த நிலையில் நடப்புச் சம்பியன் ஆஸ்திரேலியாவை கனேடிய அணி வீழ்த்துவதென்பது 'நாய் வாலை நிமிர்த்துவதற்கு ஒப்பான விடயம்'.

கனேடிய அணியில் இதுவரை விளையாடிய ஆட்டங்களில் இரண்டு ஆட்டங்களில் மாத்திரமே கடுமையான போராட்டத்தை வெளிப்படுத்தியிருந்தது. பாகிஸ்தான், கென்யா அணிகளுக்கு எதிராகவே தனது உச்சக்கட்ட போராட்டத்தை இறுதிவரை வெளிப்படுத்தியிருந்தது. இதில் யாருமே எதிர்பார்க்காத வகையில் பாகிஸ்தான் அணியை 184 ஓட்டங்களுக்குள் மட்டுப்படுத்தியிருந்தது.

இந்த இலகுவான இலக்கை விரட்டிய கனேடிய வீரர்கள் பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சின் முன்னால் திக்குமுக்காடிப் போய் இறுதியில் தோல்வியைத் தழுவினார்கள். இருந்தும் அந்த ஆட்டத்தில் வெற்றிபெறுவதற்காக கடுமையான எதிர்ப்பை பாகிஸ்தானுக்கு வழங்கியிருந்தார்கள். மற்றையது கென்ய அணிக்கு எதிராக சிறப்பாகச் செயற்பட்டு 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றியும் கண்டிருந்தார்கள். இதை தவிர கனேடிய அணி வேறு எந்த வகையிலும் சிறப்பாகச் செயற்படவில்லை.

மறுபுறம் ஆஸ்திரேலிய அணி தொடர்ச்சியாக வெற்றிநடை பயின்று வருகின்றது. அந்த அணி இந்த முறை உலகக் கிண்ண ஆட்டங்களில் 4 ஆட்டங்களில் விளையாடி 3 ஆட்டங்களில் வெற்றி பெற்றிருக்கின்றது. இதில் இலங்கையுடனான ஆட்டம் கைவிடப்பட்டிருக்கின்றது. மற்றைய மூன்று ஆட்டங்களில் இரண்டு ஆட்டங்கள் கத்துக்குட்டி அணிகளான கென்யா, சிம்பாப்வே அணிக்கு எதிராகவே வெற்றியைப் பதிவு செய்திருக்கின்றது. ஒரேயொரு வெற்றி மாத்திரமே காலிறுதிக்கு தெரிவாகியுள்ள நியூஸிலாந்துடன் விளையாடி வெற்றி கண்டிருக்கின்றது.

இதில் விசேடம் யாதெனில் கத்துக்குட்டி அணிகள் இரண்டுடனான ஆட்டத்திலும் ஆஸ்திரேலியா வெற்றிக்காக கடுமையாகப் போராடியது. இருந்தும் அந்த அணிகளின் சிறு தவறுகள் ஆஸிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தன. இந்த நிலையில் இன்றைய ஆட்டத்திலும் சில வேளைகளில் ஆஸி, கனேடிய அணியுடனும் போராடி வெற்றி பெறவேண்டி வரலாம். இல்லை கனேடிய அணி இதுவரை எந்த ஆச்சரியத்தையும் கொடுக்காததினால் இன்று ஏதாவது ஆச்சரியம் கொடுக்குமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.




**PRINCESS OF WALES NURSING HOME**
132, Kachcheri Nallur Road, Jaffna.
T.P.: 0214 922589 Fax: 0212 226180

- பொது சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர்
- இருதய நோய் சிகிச்சை வைத்திய நிபுணர்
- மகப்பேற்று சிகிச்சை வைத்திய நிபுணர்
- நீரிழிவு சிகிச்சை வைத்திய நிபுணர்
- கண் சிகிச்சை வைத்திய நிபுணர்
- முறிவு நெறிவு சிகிச்சை வைத்திய நிபுணர்
- குழந்தை சிகிச்சை வைத்திய நிபுணர்
- தோல் சிகிச்சை வைத்திய நிபுணர்
- காது, மூக்கு, தொண்டை (ENT) சிகிச்சை வைத்திய நிபுணர்.

போன்ற அனைத்துச் சிகிச்சைகளுக் கான வைத்திய நிபுணர்களும் எமது வைத்திய சாலைக்கு வருகை தந்து நோயாளர்களைப் பார்வையிடுகின்றனர் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

**தேவை தேவை தேவை**

**வரவேற்பாளர்** (Receptionist)
இரு மொழியும் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.

**மருத்துவ இணைப்பாளர்** (Medical Cordinator)
➜ அனுபவம் மிக்க தாதி உத்தியோகத்தர்கள் (ஆங்கில அறிவு விரும்பத்தக்கது)
➜ இரவு, பகல் கடமையாற்றுவதற்கு
... தரவும்

**இறுதிப் போட்டிக்கான சிறப்பு பரிசு**
EUROSTAR ®
Live your life®
CONSUMER ELECTRONICS, HOME & KITCHEN APPLIANCE
வழங்கும் 32" TV LCD



**மாபெரும் இறுதிப் போட்டி**

உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?
...........................................
போட்டியின் தொடர் ஆட்ட நாயகன் யார்?
...........................................

பெயர் : ..................................
தே.அ.இல. : ..............................
முகவரி : .................................
...........................................

போட்டி முடிவுத் திகதி
25.03.2011

| அதிகூடிய ஓட்டங்கள் | M | R | 50'S | 100'S | H.S | Avg. |
|---|---|---|---|---|---|---|
| சேவாக் (இந்தியா) | 05 | 327 | 01 | 01 | 175 | 65.40 |
| டெண்டுல்கார் (இந்தியா) | 05 | 324 | 00 | 02 | 120 | 64.80 |
| வில்லியர்ஸ் (தெ.ஆபிரிக்கா) | 04 | 318 | 01 | 02 | 134 | 106.00 |

| அதிகூடிய விக்கெட்டுக்கள் | M | W | Best |
|---|---|---|---|
| அப்ரிடி (பாகிஸ்தான்) | 05 | 16 | 05/16 |
| பென்(மே.தீவுகள்) | 04 | 12 | 04/18 |
| சகீர்கான் (இந்தியா) | 05 | 12 | 03/20 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# தேசத்துக்காக விளையாடுங்கள்

### - டோனியின் 'அட்வைஸ்'

மைதானத்தில் இருக்கும் ரசிகர்களுக்காக விளையாடுவதை விட்டுவிடுங்கள். தேசத்துக்காக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, அணியின் வெற்றிக்கு உதவவேண்டும். இவ்வாறு இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர்கள் மீது அணித்தலைவர் டோனி தாக்குதல் தொடுத்துள்ளார்.

உலகக் கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான லீக் ஆட்டத்தில், இந்திய அணி 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இந்த ஆட்டத்தில் ஒரு கட்டத்தில் ஒரு விக்கெட்டுக்கு 267 ஓட்டங்கள் என்ற வலுவான நிலையில் இருந்த இந்திய அணி, அடுத்து 29 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 9 விக்கெட்டுக்களை இழந்து 296 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. இதனால் அணியின் தோல்வி உறுதியானது. இது குறித்து இந்திய அணித் தலைவர் டோனி கூறியதாவது:

மைதானத்தில் இருக்கும் ரசிகர்கள் எப்போதும் சிக்சர்கள், பவுண்ரிகளைத் தான் விரும்புவார்கள். இவர்களுக்காக விளையாட வேண்டி இருந்தால், கடைசியில் தோற்கத்தான் நேரிடும். எப்போது ரசிகர்களுக்காக பெரிதாய் அதிரடியாய் ஆட வேண்டும் என்று நினைக்கின்றீர்களோ, அப்போது தேசத்துக்காக விளையாடுகிறோம் என்பது மறந்து விடும்.

சிலர் அணிக்காக விளையாடாமல், மைதானத்தில் உள்ள ரசிர்களுக்காக விளையாடினர். இதனால் 20 ஓட்டங்கள் கூடுதலாக அடிக்க ஆசைப்பட்டதில், 40 ஓட்டங்கள் அணிக்குப் பற்றாக்குறையாகப் போய்விட்டது.

சில நேரங்களில் கண்ணில் தெரியும் பந்துகளை எல்லாம் அடிக்க வேண்டும் என்ற உந்துதல் இருக்கும். ஆனால் அணியில் இருக்கும் ஒவ்வொரு வீரருக்கும் ஒரு பொறுப்பு உள்ளது. 50 ஓவர்களும் முழுமையாகத் துடுப்பெடுத்தாட வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

சூழ்நிலைக்குத் தகுந்து என்ன தேவையோ அதை தர வேண்டும். நமது குறைந்த பட்ச இலக்கை எட்டிவிட்டால் அடுத்து 350 அல்லது 360 என்று இலக்கை நிர்ணயிக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் இன்னும் அதிக ஓட்டங்களை எடுத்திருக்கலாம். தவிர, துடுப்பாட்டத்தில் 'பவர்பிளேயை' நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இதில் 30 ஓட்டங்கள் மட்டும் எடுத்தோம்.

களத்தடுப்பைப் பொறுத்தவரையில், தென்னாபிரிக்க அணியினர் சிறப்பாகத் தடுத்தனர். 38 ஓவர்கள் வரை நாம்தான் ஆதிக்கம் செலுத்தினோம் என்றாலும், களத்தடுப்பில் தடுத்த 15 முதல் 20 வரையிலான ஓட்டங்கள்தான், அவர்களுக்குப் பெரும் நன்மையாகப் போய்விட்டது.

யூசுப்பதான் திறமையான வீரர். தென்னாபிரிக்காவுக்கு எதிராக இரண்டு அல்லது மூன்று ஓவர்கள் நின்றிருந்தால், அதிக ஓட்டங்கள் எடுத்திருப்பார். இதனால்தான், அவரை முன்னதாகக் களமிறக்க, துடுப்பாட்ட வரிசையில் சில மாற்றங்கள் செய்து பார்த்தேன். ஆனால் அது பயனளிக்கவில்லை.

கடைசிக் கட்ட நேரங்களில் நெஹ்ரா எப்போதும் அசத்தலான பந்து வீச்சை வெளிப்படுத்துவார். 'பவர் பிளே'. ஓவர்களில் இவர்தான் முக்கிய பந்துவீச்சாளர். இதனால்தான் அவரை இறுதி ஓவரை வீசச் செய்தேன். ஆனால் தென்னாபிரிக்க அணிக்கு எதிராக அது எடுபடவில்லை - என்றார். (15)





# ஊருக்கு உபதேசம் உனக்கில்லையடி கண்ணே...

### - டோனிக்கு 'அட்வைஸ்'

இந்திய அணித் தலைவர் டோனி துடுப்பாட்டத்தில் தொடர்ந்து சொதப்புகிறார். கடந்த 10 ஆட்டங்களில் ஒரு அரைசதம் கூட அடிக்கவில்லை என்றால் நீங்களே அவரது துடுப்பாட்டத்தின் திறமையைப் பார்த்துக் கொள்ளுங்கள். சக வீரர்கள் ரசிகர்களுக்காக அல்லாமல் தேசத்துக்காக விளையாட வேண்டும் என ''அட்வைஸ்' செய்துள்ள இவர், முதலில் தனது ஆட்டத்தில் கூடுதல் அக்கறை செலுத்த வேண்டும்.

பத்தாவது உலகக் கிண்ணத் தொடர் இந்திய துணைக் கண்டத்தில் நடக்கிறது. இதில் இந்திய அணி கிண்ணம் வெல்லும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அணியில் சமீபத்திய செயற்பாடுகள் திருப்தி அளிக்கவில்லை. வெற்றி பெற வேண்டிய ஆட்டங்களில் எல்லாம் வீணாக வீழ்ச்சியைச் சந்திக்கிறது. இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தைச் சமனிலை செய்தது. அடுத்து தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் தோல்வியைச் சந்தித்தது. இதற்கு அணித்தலைவர் டோனியின் தவறான உத்திகள் முக்கிய காரணம். துடுப்பாட்ட வரிசையை மாற்றியது, ஹர்பஜனுக்குப் பதில் நெஹ்ராவிடம் கடைசி ஓவரை வீசச் சொன்னது என நிறைய தவறுகள் செய்தார். தவிர இவரது துடுப்பாட்டமும் இப்போது எடுபடுவதில்லை.

இந்திய அணியில் அறிமுகமான காலத்தில் டோனி அதிரடியாகத் துடுப்பாட்டம் செய்தார். கொஞ்சம் கூட கருணை காட்டாமல் எதிரணியின் பந்து வீச்சை அடித்து நொருக்கினார். உதாரணமாக தனது 5ஆவது ஒரு நாள் ஆட்டத்திலேயே பாகிஸ்தானுக்கு எதிராக 123 பந்துகளில் 148 ஓட்டங்கள் விளாசினார். பின் 2005ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக 145 பந்துகளில் 183 ஓட்டங்கள் எடுத்தார். விக்கெட் காப்பிலும் அசத்த இந்தியாவின் ''கில் கிறிஸ்டாக'' போற்றப்பட்டார். தொடர்ந்து திறமைகாட்ட அணியின் தலைமைப் பொறுப்புக்கு உயர்ந்தார். 2007இல் இந்திய அணிக்கு ''ரி-20' உலகக் கிண்ணம் பெற்றுக் கொடுத்தார். டெஸ்ட் அரங்கில் அணியை "நம்பர்-1' இடத்துக்குக் கொண்டு சென்றார்.

இப்படி அசுர வளர்ச்சி கண்ட இவர் சமீப காலமாக துடுப்பாட்டத்தில் ஏமாற்றுகிறார். இவரது பழைய ஆட்டத்தை தற்போது காண முடியவில்லை. தனது துடுப்பாட்ட ''ஸ்டைலையே'' மாற்றி விட்டார். பந்தை அங்கும் இங்கும் தட்டி விட்டு ஒன்று இரண்டு ஓட்டங்களாக எடுக்கிறார். கடந்த 10 ஒரு நாள் ஆட்டங்களில் ஒரு முறை கூட அரை சதம் கடக்கவில்லை. கடைசியாக, கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் இலங்கைக்கு எதிராக தம்புள்ளவில் நடந்த ஆட்டத்தில் 67 ஓட்டங்கள் எடுத்தார். விக்கெட் காப்பைப் பொறுத்த வரை பெரிதாகக் குறை சொல்ல முடியாது. கடந்த ஒரு ஆண்டில் 28 ஆட்டங்களில் 28 பிடிகள், 8 'ஸ்ரொம்' செய்து திறமையை நிரூபித்துள்ளார்.

இந்தமுறை உலகக் கிண்ணத் தொடரில் டோனி அதிரடியாக ஆட வேண்டும் என இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் கபில்தேவ் கேட்டுக் கொண்டிருந்தார். இதனைப் பின்பற்றி மீண்டும் துடுப்பாட்டத்தில் கலக்க வேண்டும். இவர் சுதாரித்திருந்தால் தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய அணியின் துடுப்பாட்டச் சரிவை ஓரளவுக்குத் தடுத்திருக்கலாம். இனிவரும் ஆட்டங்களில் டோனி வாணவேடிக்கை காட்ட வேண்டும். அணி கிண்ணம் வெல்ல வேண்டும் என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. இதற்கேற்ப வரும் 20ஆம் திகதி சென்னையில் நடக்க உள்ள மேற்கிந்தியத்தீவுகள் எதிரான போட்டியில் டோனி அசத்துவார் என நம்புவோம். கடந்த பத்து ஆட்டங்களில் டோனி 171 ஓட்டங்கள் மட்டுமே எடுத்துள்ளார். இதன் விபரம்:

தென்னாபிரிக்கா 25
தென்னாபிரிக்கா 38
தென்னாபிரிக்கா 5
தென்னாபிரிக்கா 2
தென்னாபிரிக்கா 5
வங்கதேசம் துடுப்பாட்டம் செய்யவில்லை
இங்கிலாந்து 31
அயர்லாந்து 34
நெதர்லாந்து 19*
தென்னாபிரிக்கா 12*

## பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில் சேர்க்கலாம்

துர்க்கா புத்தகசாலை
சுன்னாகம்.

ரூபன் பல்பொருள்
அளவெட்டி.

இணுவில் பத்திரிகை
முகவர்
இணுவில்.

இந்திரா பல்பொருள்
வாணிபம்
வேலணை.

அம்பாள் பல்பொருள் வாணிபம்
புங்குடுதீவு.

கந்தசாமி கடை
காரைநகர்.

சிறிமுருகன் களஞ்சியம்
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை

மலர் கடை
இளவாலை.

நகுலேந்திரன் பல்பொருள்
வாணிபம்.
முழங்காவில்.

அன்பரசன் புத்தகசாலை
ஒட்டுசுட்டான்.

மதுரா ரெயிலர் கடை
நாச்சிக்குடாச் சந்தி
முன்பாக, நாச்சிக்குடா.

உதயன் அலுவலகம்
கரடிப்போக்குச் சந்தி.

சூரியா பார்மஸி.
அச்சுவேலி.

கிருபா போட்டோ
மல்லாகம்.

**பருத்தித்துறையில்**

கண்ணன் போட்டோ
கவிதா [illegible]

**நெல்லியடியில்**

மொடோன் ஸ்ரோர்ஸ்
ராஜலக்சுமி புத்தகசாலை
சதா பொன்ஸ்

**மந்திகையில்**

நாவலர் புத்தகசாலை

**உடுப்பிட்டியில்**

ரஜினி பீடா

**வல்வெட்டித்துறையில்**

கலைச்சோலை பான்சி கவுஸ்

**தென்மராட்சியில்**

அருள்நாயகி புத்தகசாலை

மணியம் ஸ்ரோர்ஸ்
ஸ்ரீ கருணா மல்ரி சொப்
சுஜனன் மல்ரி சேர்விஸ் சென்ரர்
அல்லாரை ஆர்.டி.
உதயன் காரியாலயம்
சிறீராம் மல்ரி சென்ரர்

**கிளிநொச்சியில்**

பிள்ளையார் புத்தகசாலை
அறிவுமதி புத்தகசாலை
சோமசுந்தரம் மல்ரி சென்ரர்
புவனேஸ்வரி புத்தகசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூசுப், நெஹ்ரா அவுட்?



சென்னை,மார்ச் 16

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி கடைசி லீக் ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகளை எதிர்வரும் 20 ஆம் திகதி எதிர் கொள்கின்றது.

இந்த ஆட்டம் சென்னை சேப்பாக் கம் மைதானத்தில் நடக்கின்றது. இந்த ஆட்டத்திற்கான இந்திய அணியில் சில மாற்றம் இருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

ஒரு துடுப்பாட்ட வீரர், ஒரு பந்து வீச்சாளர் மாற்றப்படலாம். சென்னை ஆட்டத்தில் இந்தியா 2 வேகப்பந்து வீச்சாளர், 2 சுழற்பந்து வீச்சாளருடன் களம் இறக்கப்படலாம்.

இதனால் முனாப் பட்டேல் அல்லது நெஹ்ரா ஆகியோரில் ஒருவர் நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக உள்ளூர் வீரரான அஸ்வின் இடம்பெறலாம். நெஹ்ராவே நீக்கப்பட வாய்ப்பு உள்ளது.

துடுப்பாட்ட வீரர்களில் யூசுப்பதான், விராட் ஹோக்லி கடந்த 2 ஆட்டங்களில் சரி யாக ஆடவில்லை. இதனால் இந்த இருவரில் ஒருவர் நீக்கப்படலாம். அது யார் என்பது உறுதியாகத் தெரியவில்லை.

யூசுப்பதான் நீக்கப்பட வாய்ப்புக்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அவருக்குப் பதிலாக ரெய்னா இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (15)

# காலியாகியிருந்த மைதானம்

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் அதிகளவான கிரிக்கெட் ரசிகர்களைக் கொள்ளும் மைதானமாகக் கருதப்படும் ஈடன் கார்டனில் நேற்று நடைபெற்ற தென்னாபிரிக்கா- அயர்லாந்து ஆட்டத்திற்கு ரசிகர்கள் மத்தியில் எந்தவித உற்சாகமும் இல்லை. டிக்கெட்டுக்களை வாங்க ஆளில்லை.

இந்த ஆட்டத்துக்காக 2,400 டிக்கெட்டுகளே விற்கப்பட்டுள்ளன. 90,000 ரசிகர்கள் அமர்ந்து பார்க்கும் 'ஸ்ரேடியத்தில்' 2,400 பேர்தான் இருந்து பார்த்தார்கள் என்றால் அது காலியான 'ஸ்ரேடியம்' என்பதில் ஐயமில்லை.

இந்தியா, இங்கிலாந்து ஆட்டம் அங்கு ரத்துச் செய்யப்பட்டதிலிருந்தே ரசிகர்கள் அங்கு நடக்கவிருக்கும் போட்டிகளுக்கு ஆர்வம் எதையும் காட்ட விரும்பவில்லை என்று தெரிகிறது.

அயர்லாந்து-நெதர்லாந்து ஆட்டமும் சிம்பாப்வே-கென்யா ஆட்டமும்,அங்கு நடைபெற்றன. இது போன்ற முக்கியத்துவமற்ற ஆட்டங்களை கொல்கத்தாவுக்கு வழங்கி ஐ.சி.சி.யில் உள்ள சரத் பவார் கொல்கத்தா ரசிகர்களுக்கு துரோகம் செய்துள்ளதாக டால்மியா ஏற்கனவே குற்றம்சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (15)

அடுத்த வர்ணப் படத்தில் அதிரடி நாயகர்கள் சேவாக். பீற்றர்ஸன். எப்போது வரும்? இணைந்திருங்கள் உதயனுடன்...





வரவேற்பு: இந்திய – மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான ஆட்டம் சென்னையில் இடம்பெறவுள்ளது. இதற்காக இந்திய அணித்தலைவர் டோனி சென்னை விமான நிலையத்துக்கு வந்தபோது.....

## இன்றைய ஆட்டம்

ஆஸ்திரேலியா – கனடா

பெங்களூர் பி.ப. 2.30




தினமொரு பரிசுப் போட்டி

இங்கிலாந்து - மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான நாளைய (17.03.2011) ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி எது?

..........................................

பெயர் : ..................................................

தே.அ.இல : ..................................................

முகவரி : ..................................................

..................................................

இந்தக் கேள்விக்கான விடையை இந்தக் கூப்பனில் எழுதி நாளை (17.03.2011) பிற்பகல் 2 மணிக்கு முன் தினமொரு பரிசு, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குத் தபாலிலோ அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியிலோ சேர்க்கவும்.

பங்குபற்றுங்கள் போட்டிகளில் வென்றுகொள்ளுங்கள் பணப்பரிசில்களை

உதயன் வழங்கும்

வெல்லுங்கள் 1 1/2 லட்சம் ரூபா பணப் பரிசு

1ஆம் பரிசு

2ஆம் பரிசு 1 லட்சம் ரூபா பணப் பரிசு

உங்களுக்காகவே காத்திருக்கின்றன லட்சங்கள்.

எட்டமுடியாத லட்சங்கள் உங்களுக்காக

CliCT GATEWAY CENTRE JAFFNA வழங்கும் 4 1/2 லட்சம் ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன்கள்

48 பேருக்கு தலா 9 ஆயிரம் ரூபா பெறுமதியானவை

காலிறுதிப் போட்டிக்கான பரிசில்கள்

கம்ப்யூட்டர் ருடே வழங்கும்

தினமும் வெல்லும் ஒருவருக்கு ஒரு வருடத்துக்கான கம்ப்யூட்டர் ருடே இலவச சந்தா

உதயன் வழங்கும் தலா 10 ஆயிரம் வீதம் 5 பேருக்கு.

மாபெரும் இறுதிப் போட்டி

உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

..................................................

போட்டியின் தொடர் ஆட்ட நாயகன் யார்?

..................................................

பெயர் : ..................................................

தே.அ.இல. : ..................................................

முகவரி : ..................................................

..................................................

போட்டி முடிவுத் திகதி 25.03.2011

போட்டி விதிகள்

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. தே.அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் தே.அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம். உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்களோ அவர்களது குடும்பத்தவர்களோ போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி உதயனில் அறிவிக்கப்படும். சகல போட்டிகளுக்குமான பெயர்களை இடது மேல் மூலையில் குறிப்பிட்டு உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் சேர்க்கவும்.

மாபெரும் இறுதிப் போட்டி 10 ஆறுதல் பரிசுகள்

அள்ளுங்கள் ஆறுதல் பரிசில்களை

SINGER PLUS
No.01 STANLY ROAD JAFFNA. வழங்கும் EGG BEATER

SINGER
HOSPITAL ROAD JAFFNA. வழங்கும் FAN

SINGER PLUS
CHUNNAKAM. வழங்கும் FAN

SINGER PLUS
NELLIYADEY. வழங்கும் FAN

SINGER PLUS
CHAVAKACHCHERI. வழங்கும் TOASTER

PC SOLUTION
KASTHURIYAR ROAD JAFFNA. வழங்கும் COLOUR PRINTER

PC POWER UNIT
LUXAN PLAZA KASTHURIYAR ROAD. வழங்கும் Rs. 5000 GIFT VOUCHER

BARANABAS
247, Stanly Road, Jaffna. வழங்கும் SINSUNG DVD PLAYER

சரவணா ரெக்ஸ்
770, 772, கே.கே.எஸ் வீதி, குட்டாதெருச் சந்தி யாழ்ப்பாணம்.
Rs. 5000 GIFT VOUCHER

கிருபா லேணர்ஸ்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Rs. 5000 GIFT VOUCHER


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானிய அணு உலை வெடிப்புக்களால் இலங்கைக்கு அபாயம் ஏதும் இல்லை

கொழும்பு,மார்ச்16

ஜப்பானிய அணு உலை வெடிப்புகளால் இலங்கையில் கதிர்வீச்சுப் பாதிப்பு ஏற்பட வாய்ப்புகள் இல்லை என்று இலங்கையின் வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது.

ஜப்பானில் ஏற்பட்ட புவிய திர்வு மற்றும் சுனாமியை அடுத்து அங்குள்ள புகுசிமா அணு உலையில் அடுத்தடுத்து வெடிப்புகள் ஏற்பட்டன.

இதனால் கதிர்வீச்சுத் தாக்கம் ஏற்படும் என்ற அச்சத்தில் லட்சக்கணக்கான மக்களை ஜப்பான் அந்தப் பகுதியில் இருந்து வெளியேற்றி வருகிறது.

இந்தநிலையில் உலகில் பல்வேறு நாடுகளிலும் இந்தக் கதிர்வீச்சுப் பாதிப்புப் பற்றிய வதந்திகள் பரவத் தொடங்கியுள்ளன.

நேற்றுமுன்தினம் பிலிப்பைன்சில் அமில மழை பெய்யவுள்ளதாக கைத்தொலைபேசிகள் மூலம் குறுந்தகவல் வதந்திகள் பரவியுள்ளன.

இதனால் அங்குள்ள மக்கள் பெரும் அச்சமடைந்தனர்.

இந்தநிலையிலேயே இலங்கைக்கு கதிர்வீச்சுப் பாதிப்பு ஏற்பட வாய்ப்புகள் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான தூரம் மிக அதிகம். அத்துடன் ஜப்பானில் இருந்து காற்று கிழக்குப் புறமாகவே வீசும்.

எனவே இலங்கைக்கு இதனால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று இலங்கையின் வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (204)

# சட்டவிரோத கடன் வழங்கல்; இலங்கையருக்கு எதிராக வழக்கு

லண்டனில் சட்டவிரோதமான முறையில் கடன் வழங்கும் தொழில் செய்துவந்த இலங்கையர் ஒருவர், அதன் மூலம் சுமார் 500,000 பவுணிலும் கூடுதலான பணம் சேகரித்துள்ளார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

பிரித்தானியாவின் ஈஸ்ட்ஹாம் பிரதேசத்தைச் சேர்ந்த 68 வயதான க.நடராஜா என்பவரே இந்தச் சட்டவிரோத கடன்வழங்கல் தொழிலில் ஈடுபட்டவரென குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர் ஆவார். இவர் தங்க நகைகளைப் பொறுப்பாகப் பெற்றுக்கொண்டே கடன்களை வழங்கினாரென நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இவருக்கு உதவியாக வே.ஜெகந்திரபோஸ் என்பவரும் செயற்பட்டுள்ளார் என்றும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. நடராஜாவிடம் கடன் வாங்கிய ஜனகமோகன் என்பவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இவர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சட்டவிரோத கடன் குழுவும் பொலிஸாரும் நடராஜாவின் வீட்டை சோதனையிட்டபோது ஏராளமான தங்க நகைகளும் சட்டவிரோத கடன்கள் பற்றிய விவரங்களும் கைப்பற்றப்பட்டன. சட்டவிரோதமாக கடன் வழங்கியமை, குற்ற வழியில் பணம் சேர்த்தமையென இரண்டு குற்றச் சாட்டுகள் நடராஜா மீது சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (204)

# உலகில் மிகப் பெரிய புத்தர் சிலையை வவுனியாவில் அமைக்க அரசு ஏற்பாடு

கொழும்பு,மார்ச்16

உலகில் மிகப்பெரிய புத்தர் சிலையை இலங்கை அரசு வவுனியாவில் அமைக்கவுள்ளது.

சமாதி நிலையில் அமையவுள்ள இந்த புத்தர் சிலையை கல்வி, பண்பாடு, சமூக சேவைகளுக்கான அனைத்துலக நட்புறவு சங்கத்தின் உதவியுடன் இலங்கை அரசு நிறுவவுள்ளது.

இலங்கையின் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் சேனாரத் திசநாயக்கவின் துணையுடன் இந்தப் பெரிய புத்தர் சிலையை அமைக்கவுள்ளதாக கல்வி, பண்பாடு, சமூக சேவைகளுக்கான அனைத்துலக நட்புறவு சங்கத்தின் நிறுவுனர் பிலப்பிட்டிய பஞ்ஞதிஸ்ஸதேரர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் பங்கேற்ற இலங்கைப் படைவீரர்களைப் போற்றிக் கௌரவிக்கும் வகையிலேயே இந்தப் புத்தர்சிலை அமைக்கப் படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த புத்தர் சிலை அமைக்கும் திட்டத்துக்கு 1000 மில்லியன் ரூபா செலவிடப்பட் வுள்ளது.

522 அடி உயரம் கொண்டதாக அமையவுள்ள இந்தப் புத்தர் சிலை உலகிலேயே அதிக உயரம் கொண்ட புத்தர் சிலையாக இருக்கும்.

சீனாவின் லுசான் பகுதியில் அமைந்துள்ள 420 அடி உயரப் புத்தர் சிலையே தற்போது உலகில் மிக உயர்ந்த புத்தர் சிலை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த புத்தர் சிலை அமைந்துள்ள பீடத்துடன் சேர்த்து 502 அடி உயரமானது.

இலங்கையில் மிக உயர்ந்த புத்தர் சிலை குருநாகலில் உள்ளது. இது 88 அடி உயரம் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பௌத்த மதத்தை பின்பற்றாத, தமிழர்கள் அதிகம் வாழும்-தமிழரின் பாரம்பரிய பிரதேசமான வவுனியாவில் இந்தப் புத்தர் சிலையை இலங்கை அரசு அமைக்கவுள்ளது.

இது தமிழர் பகுதிகளில் பௌத்த மேலாதிக்கத்தை உருவாக்குவதற்கான இலங்கை அரசின் திட்டமிட்ட முயற்சி என்றே கருதப்படுகிறது. (204)

# இறைவரி ஊழியர்களின் பகிஷ்கரிப்பால் அலுவலகங்களில் பணிகள் ஸ்தம்பிதம்


கொழும்பு,மார்ச் 16

இறைவரித் திணைக்கள ஊழியர்கள் நேற்று முன்தினம் மேற்கொண்ட சுகயீன விடுமுறைப் போராட்டத்தால் அத்திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தினதும் பிரதேச அலுவலகங்களினதும் நாளாந்தப் பணிகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

376 மாகாணசபை இறைவரி ஊழியர்களை திணைக்களத்துடன் இணைத்துக் கொள்வதற்கு அரசு மேற்கொண்ட தீர்மானத்தைக் கண்டிக்கும் நோக்கமாகவே இந்தச் சுகயீன விடுமுறைப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டதாகத் தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தச் சுகயீனப் போராட்டத்தால் திணைக்களத்தின் அன்றாடப் பணிகளான வரிப்பணம் அறவிடல், புதிய கோப்புகளைத் திறத்தல், சுங்கத் திணைக்களத்துக்கு வரி இலக்கங்களை வழங்கல் போன்றவை முற்றாகப் பாதிக்கப்பட்டதுடன்கொழும்பு சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையிலுள்ள திணைக்களத்தின் தலைமையகமும் வெறிச்சோடிக் காணப்பட்டது.

இந்தத் திணைக்களத்தின் 17 பிரதேச காரியாலயங்களில் இரத்தினபுரிக் காரியாலயத்தை தவிர ஏனையவை மூடப்பட்டிருந்தன. (204-5)



உ

## குருவான திருவேநீர் எங்கு மறைந்தீர்?

மாவை மண்ணின் மைந்த னெனப்புகழ்
மறையவர் குலமுதலே
மறையொடு ஆகம விளக்கமும் நெஞ்சில்
பேணியொ ளிர்ந்தவரே!
சிவைமகிழ் செல்வன் காங்கேயன் பணியில்
உள்ளம் குளிர்ந்திடவே
திசையுக்கிர சோழன் மகள்மா ருதப்புர
வல்லிதன் ஆணைவழி
இசையுறு கோயிற் பூசைகள் தடையற
ஆற்றுதல் அறமெனவே
இயம்பிடும் மறைமொழி அறிந்தவ் வழியினில்
இயற்றிய மகிமையினால்
ஆசைய றுத்தவன் ஆரண நாயகன்
மைந்தனு முமையழைக்க
ஐம்புல னொடுக்கி அவ்வழி சென்றீர்
அங்கை கூப்புகின்றோம்

மாவைக் கந்தன் தொண்டர் சபை, அடியவர்கள்.

## அமரர் மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள் அவர்களின் ஆத்மசாந்தி வேண்டி நிகழும் பிரார்த்தனை அழைப்பு

மாவை ஆதின குருமுதல்வர் அமரர் மஹாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று (16.03.2011) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நிகழ இருப்பதால் அத்தருணம் மாவைக் கந்தனின் மீளா அடியவர்கள், தொண்டர்கள், அபிமானிகள் யாவரும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் அதேவேளை அன்று நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

மாவைக் கந்தன் தொண்டர் சபையினர்.

(1238) (38,21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சுதந்திரமான தேர்தல் தேவை

நாட்டில் உள்ள 235 உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் நாளை நடைபெறவுள்ளது. அவற்றில் மூன்று மாநகர சபைகளும் 30 நகர சபைகளும் 202 பிரதேச சபைகளும் அடங்குகின்றன. தேர்தல் நடைபெற வேண்டிய 64 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடைபெறமாட்டாது. அவை தொடர்பாக நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதால் அவற்றுக்கான தேர்தல்களை ஆணையாளர் ஒத்திவைத்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் 28 உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள் நாளை நடைபெறமாட்டா. யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் ஒட்டுமொத்தமாகப் பத்தொன்பது உள்ளூராட்சிச் சபைகளுக்கு (3 நகர சபைகள் 16 பிரதேச சபைகள்) தேர்தல் இல்லை என்றாகிவிட்டது.

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் அடங்கிய வன்னி தேர்தல் மாவட்டத்தில் ஒரு நகர சபைக்கும் 12 பிரதேச சபைகளுக்கும் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய மக்கள் வாக்களிப்பர். (அங்கும் 3 பிரதேச சபைகளில் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.)

கிழக்கு மாகாணத்தில், திருகோணமலைத் தேர்தல் மாவட்டத்தில் இரண்டு நகர சபைகளுக்கும் 11 பிரதேச சபைகளுக்கும் நாளை தேர்தல் நடைபெறுகின்றது. (நான்கு பிரதேச சபைகளின் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது).

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று பிரதேச சபைகளுக்கும், அம்பாறை மாவட்டத்தில் ஒரு நகர சபைக்கும் 8 பிரதேச சபைகளுக்கும் தேர்தல் நடைபெறவுள்ளது. (இரண்டு பிரதேச சபைகளின் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.)

மலையகத்தில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளான கண்டி, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி தேர்தல் மாவட்டங்களிலும் வாக்குப் பதிவு நடைபெறும்.

மக்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தி தத்தமது பிரதேசங்களில் உள்ளூராட்சி சபைகளுக்குத் தமக்கு விருப்பமான அங்கத்தவர்களைத் தெரிவு செய்வது ஜனநாயக ஆட்சியின் ஒரு பிரதான அம்சமாகும். ஆகையால் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் குறைத்து மதிப்பிடக்கூடிய ஒன்றல்ல. மக்கள் தமது பிரதேசங்களின் அபிவிருத்திக்கும் வளத்துக்கும் நல்வாழ்வுக்கும் உழைக்கப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்வதற்கு உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஆரம்பக் களமாக விளங்குகிறது.

வெளிநாடுகள் பலவற்றில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வென்று மக்கள் சேவையை ஆரம்பித்தவர்கள் பின்னர் உயர் ஆட்சி மன்றமான நாடாளுமன்றத்துக்குத் தெரிவாவது வழக்கம்.

இலங்கையிலும் உள்ளூராட்சி மன்றங்களில் உறுப்பினராகத் தெரிவாகி அரசியல் ''படித்து'' மக்கள் ஆதரவைப் பெருக்கி, நாடாளுமன்றம் சென்று பிரபலமானவர்களும் உள்ளனர்.

ஆகையால், நாளை நடைபெறும் தேர்தல் முக்கியமானது. அந்தந்தப் பிரதேச முன்னேற்றத்துக்கு, மக்கள் வாழ்க்கை மேம்பாட்டுக்கு உறுதியான அடித்தளம் இடும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் முடிவுகள், மக்கள் ஆதரவு எந்தக் கட்சியின் பக்கம் உயர்ந்து நிற்கின்றது என்பதற்கான ஒரு சுட்டெண்ணாகவும் அமையும்.

ஆகையால், நாளைய தேர்தலில் மோசடிகள், வன்செயல்கள் நடைபெறாமல் கண்காணித்துக் கொள்வதும் உறுதி செய்வதும் அரசாங்கத்தினது தலையாய கடமையாகும். அரசின் அங்கங்களான தேர்தல் திணைக்களத்தினரும் பொலிஸாரும் பக்கச் சார்பின்றி நேர்மையுடன் செயற்படவேண்டும்.

இம்மாதம் 13ஆம் திகதிவரை-

தேர்தலுக்கு முந்திய வன்செயல்கள் நூற்றுக்கணக்கில் நடைபெற்றுள்ளன. இச்சூழ்நிலை நாளைய வாக்களிப்பில் தேர்தல் மோசடிகள் பெரும் எண்ணிக்கையில் நடைபெறுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

நீதியான தேர்தல் நடைபெறும் பொருட்டு விசேட பாதுகாப்பு வழங்கவென ஐம்பதினாயிரம் பொலிஸாரும் அவர்களுக்கு உதவுவதற்கென விசேட பொலிஸ் படையணியினரும் இராணுவத்தினரும் (மொத்தம் 20,000 பேர்) பணிக்கு அமர்த்தப்படுகின்றனர். இந்த ஏற்பாடு உள்ளூராட்சித் தேர்தல் நீதியாகவும், வன்செயல்கள் இன்றியும் நடைபெற வேண்டும் என்பதில் அரசுக்கு உள்ள அக்கறையைப் புலப்படுத்துகின்றது.

வாக்காளர்கள் தமது விருப்பத்துக்கு உரிய வேட்பாளருக்கு வாக்களிப்பதற்கான உரிமையையும் அதற்கான சகல வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பெரும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. தேர்தல் - வாக்குப்பதிவு - மோசடிகளைத் தடுக்கத் தவறினால் வாக்களிப்பு அர்த்தமற்றது ஆகிவிடும். ஜனநாயகத் தேர்தல் கேலிக்குரியதாகிவிடும்.

நாடாளுமன்றத் தேர்தலும் மற்றும் ஜனாதிபதித் தேர்தலும் நடைபெற்றுவிட்டன. உள்ளூராட்சித் தேர்தலிலும் அமோக வெற்றி பெற்றுவிட்டால் நாடு முழுவதிலும் ஒரே கட்சி ஆட்சியும் அதன் வழியான ஜனநாயகப் பிறழ்வுகளும் உண்டாகும் வாய்ப்பு அதிகம்.

எதிர்க்கட்சிகள் தரப்பில் உட்கட்சிப் பூசல்களும், உயர் பதவிகளுக்கான போட்டிகளும் மலிந்துள்ளதால் அவற்றுக்கு மக்கள் பலம் குறைவடைந்து வருவதாகவும் நோக்கர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அந்தந்தக் கட்சிக்குக் கிடைக்கும் வெற்றி தோல்வி, நாடாளுமன்றில் உள்ள அரசியல் கட்சிகளின் ஆதரவை, செல்வாக்கைப் பிரதிபலிக்கும். ஆகையால் நாளைய தேர்தல், இலங்கை அரசியலின், அரசியல் கட்சிகளின் மக்கள் ஆதரவைக் காட்டும் அளவுமாணியாக விளங்கும். அதனைக் கருத்தில் எடுத்து அந்ததந்தப் பிரதேச மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க வகை செய்யப்பட வேண்டும்.

# வாக்குகள் எண்ணப்படும் இடங்களிலேயே பெறுபேறுகள் கட்சிகளுக்கு வழங்கப்படும்

கொழும்பு, மார்ச் 16

உள்ளூராட்சித் தேர்தலில் வாக்குகளை எண்ணும் நிலையங்களில் வாக்குகள் எண்ணப்படும் அனைத்து இடங்களிலும் தேர்தல் பெறுபேறுகள் வெவ்வேறாகக் குறிப்பிட்டு அவற்றின் பிரதிகளை அரசியல் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்கும் வழங்குவதற்குத் தேர்தல்கள் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

இதற்கமைய வாக்குகள் எண்ணப்படும் அனைத்து இடங்களிலும் வாக்குகள் எண்ணும் பணி முடிவுற்றதும் ஒவ்வொரு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் பெற்றுள்ள வாக்குகளின் எண்ணிக்கையும், விருப்புவாக்குகளின் எண்ணிக்கையும் கணக்கிடப்பட்ட பின்னர் ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுள்ள விருப்புவாக்குகளின் எண்ணிக்கையும் வெவ்வேறாக ஆவணப் படுத்தப்பட்டு அரசியல் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்கும் வழங்கபடவுள்ளதாக தேர்தல் செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக மேற்படி பெறுபேறுகளை உள்ளடக்கியுள்ள ஆவணங்களின் பிரதிகளும் வாக்குகள் எண்ணப்படும் இடங்களில் காட்சிப்படுத்தப்படவுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

வாக்குகள் எண்ணும் நிலையத்தில் வாக்குகள் எண்ணப்படும் பல இடங்கள் இருப்பதுடன் அவ்விதம் வாக்கு எண்ணப்படும் இடமொன்றில் 12 ஆயிரம் வாக்குகள் வரை அல்லது அதற்குக் கிட்டிய எண்ணிக்கை, எண்ணிக்கணக்கிடப் படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வாக்குகள் எண்ணப்படும் இடமொன்றிலிருந்து பெறுபேறுகளைக் குறிக்கும் ஆவணங்களைப் பெறுவதற்குக் கட்சிகளின் அல்லது சுயேச்சைக் குழுக்களின் செயலாளர்களால் முன்கூட்டியே பிரதிநதியொருவரின் பெயர் முன்வைக்கபடவேண்டும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த 11 ஆம் திகதி அரசியல் கட்சி களின் செயலாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலொன்றிலும் இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள் ளமை பற்றி தேர்தல் கள் ஆணையாளர்தெரியப்படுத்தியுள்ளார். (த-22)

# மாவட்ட கால்நடை வைத்தியசாலைக்கு நிரந்தர கட்டடம் இல்லாமையால் சிரமம்

அச்சுவேலி, மார்ச் 16

யாழ். மாவட்டக் கால்நடை வைத்தியசாலை இடம்பெயர் நிலையில் கோப்பாய் கால் நடை வைத்திய அதிகாரி அலுவலகப் பண்ணையாளர் பயிற்சி நிலையத்தில் செயற்படுகின்றது. வைத்தியசாலைக்கு இதுவரை நிரந்தரக் கட்டடம் அமைக்கப் படாமையால் பெரும் சிரமங்கள் ஏற்படு வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்ட கால்நடை வைத்தியசாலை, யாழ். பிறவுண் வீதியில் செயற்பட்டு வந்தது. தனியார் கட்டடத்தில் செயற்பட்டு வந்த கால்நடை வைத்திய சாலையின் செயற்பாடுகளை நிறுத்தி கட்டடத்தை அதன் உரிமையாளர் திருப்பிப்பெற்றுக் கொண்டார்.

வைத்தியசாலைக்கு பொருத்தமான கட்டடம் ஒன்றை அரச திணைக்கள கட்டுப்பாட்டு வாடகைக்கு அமைய பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் யாழ். நகரில் பொருத்தமான இடத்தில் வைத்தியசாலையை செயற்படவைக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது.

தற்பொழுது கால்நடை வைத்தியசாலை, கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி வளவில் அமைந்துள்ள் பண்ணையாளர் பயிற்சி நிலையத்தில் உரியமுறையில் செயற்பட முடியாமல் சிரமங்களுடன் இயங்குகிறது.

வைத்தியசாலையை இதுவரைகாலமும் பயன்படுத்தி வந்த பண்ணையாளர்கள், கால்நடை வளர்ப்போர் உரிய முறையில் வைத்தியசாலையின் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் தனியார் மிருக வைத்தியர்களை நாடி பெருமளவு பணச் செலவில் தமது கால்நடைகளுக்கு வைத்தியம் செய்து வருவதாகக் கூறப்படு கின்றது.

பெரும்பான்மை இனத்தை சேர்ந்த இரண்டு கால்நடை வைத்தியர்கள் மற்றும் ஒரு கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர், இரண்டு பணியாளர் உட்பட ஐந்து பேர் பொருத்தமான முறையில் தமது கடமைகளைச் செய்யமுடியாமல் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

கோப்பாயில் இடம்பெயர் நிலையில் முடங்கிக்கிடக்கும் கால்நடை வைத்தியசாலை, இனி எப்போது வழமையான நிலையில் செயற்படும், அதுவரை நாம் காத்திருந்து கால்நடைகளின் நோய்களுக்கு சிகிச்சைபெற வேண்டுமா? என பண்ணையாளர்கள் கால்நடை வளர்ப்போர் கேள்வி எழுப்புகின்றனர்.

கால்நடை வைத்தியசாலையின் பணியாளர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்-

கடந்த சனிக்கிழமை வைத்தியசாலையின் உபகரணங்கள், தளபாடங்கள் கோப்பாய் பண்ணையாளர் பயிற்சி நிலையக் கட்டடத்தில் இறக்கப்பட்டுள்ளன. வைத்தியசாலையில் கடமைபுரியும் இரண்டு வைத்தியர் உட்பட ஐந்து பணியாளர்களும் உரிய முறையில் எந்தப்பணியையும் மேற்கொள்ள முடியாமல் யார் வைத்தியசாலைக்கு வருவார்கள் என எதிர்பார்த்து காத்திருக்கின்றோம். செவ்வாய்க்கிழமை மலை வரை எந்த கால்நடை வளர்ப்போரும் வைத்திய சாலையின் சேவையை நாடி வந்துசேரவில்லை எனக் கூறினார்.

(த-11)



## தவக்காலச் சிந்தனை



## உளச் சுமைக்கு ஆறுதலே மருந்து

வரி வசூலிப்பவரான லேவி என்பவரை இயேசு 'என்னைப் பின்பற்றி வா என அழைத்தார். அவரும் இயேசுவை தன் வீட்டில் ஏற்று விருந்தளித்தார். அநீதமான முறையில் மக்களைத் துன்புறுத்தி வரிசேர்க்கும் போக்கை கைவிட்டு மனம் மாறினார்.

அப்போது தம்மை நீதிமான்கள் என்று கூறிக் கொள்ளும் சிலர், இயேசு, பாவிகள் வீட் டில் உண்பதைக் கண்டித்தனர். அதற்கு இயசே நோயற்றவருக்கு அன்று, நோயுற்றவருக்குகே மருத்துவர் தேவை. பாவிகளையே மனம்மாற அழைக்க வந்தேன் என்றார் (லூக் 5:31-32)

ஆன்மீக வழி நடத்தலற்றோரும், சுமைகளில் இருந்து மீளமுடியாது மன உளைச்சலுக்கு உட்பட்டோரும் நோயாளிகளே. வறுமை, இழப்பு, தனிமை, புறக்கணிப்பு, ஒடுக்குமுறை, விரக்தி என்பன மனித மனங்களை சாகடிக்கும் கொடிய நோய்களே. இவற்றை மருந்து மாத்திரைகள் குணப்படுத்துமா? பிறரிடம் இருந்து வரும் அன்பும், அரவணைப்பும், கனிந்தமொழிகளும், உதவிகளும், சுதந்திர உரிமை, கரிசனை என்பவையே உளக்காயங்களுக்கு சிறந்த மருந்தாகும்.

இந்த விலை மதிப்பில்லா மருத்துவக் களிம்பு அனைவருக்குள்ளும் புதைந்து கிடக்கிறது. அவற்றைத் தட்டி எழுப்பி வெளிக்கொணர்ந்து அவரவர்களுக்குத் தேவைப்படும் விதத்தில் வெந்த உள்ளங்களில் பூசி உளவள ஆற்றுகையுடன் கூடிய அனைத்து உதவிகளையும் வழங்குவோம்.

(எஸ். யேசுதாஸ்)
கொழும்புத்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
16 மார்ச் 2011 புதன்கிழமை

# மாநகர சபையின் அனுமதியின்றி யாழ்.நகரப் பகுதியில் 3 கடைகள்

## எவ்வாறு முளைத்தது என்கிறார் உறுப்பினர் பரஞ்சோதி


யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ்.மாநகர சபையின் அனுமதியின்றி யாழ். பெரியகடைப் பகுதியில் மின்சார நிலைய வீதியில், யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அண்மையில் 3 கடைகள் நேற்று முன்தினம் இரவோடு இரவாக அமைக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாநகரசபை உறுப்பினர் அ.பரஞ்சோதி குற்றஞ் சாட்டியுள்ளார்.

சபையின் அனுமதியின்றி எவ்வாறு இந்தக் கடைகள் அமைக்கப்பட்டன எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

யாழ்.மாநகர சபையின் எந்த விதமான அங்கீகாரமுமின்றி யாழ். பெரியகடைப் பகுதியில் போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் 3 கடைகள் நேற்று முன்தினம் இரவு கட்டப்பட்டுள்ளன.



இதன் சூத்திரதாரிகள் யாரெனத் தெரியவில்லை. யாழ்.நகரசபையில் இதற்கான தீர்மானமெதுவும் எடுக்கப்படவில்லை. விதிகளை மீறிய இந்தச் செயற்பாட்டினால் மாநகர சபைக்குப் பல மில்லியன் ரூபா நட்டமேற்பட்டுள்ளது.

மாநகர வருமானப் பகுதி இதனைக் கண்டும் காணாதது போல் செயற்படுகின்றது. இதற்கு முன்னரும் பெரிய கடைப் பகுதியில் பல கடைகள் மாநகரசபைக் காணியில் கட்டப்பட்டமையும் அது சம்பந்தமாக மாநகரசபைக்குத் தெரியப்படுத்தியும் அதை நிறுத்தவோ அகற்றவோ நடவடிக்கையெதுவும் வருமானப் பகுதியால் எடுக்கப்படவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

மாநகர சபை முதல்வரும் ஏனையோரும் சபை நிலங்களைத் தமது சொந்தக் காணி போலப் பாவித்து இத்தகைய செயல்களில் ஈடுபடுவதானது லட்சங்கள் பல அவர்களுக்குக் கைமாறியிருக்கலாமென்ற சந்தேகத்தை ஏற்படுத்தலாம் என்பதும் தவிர்க்க முடியாதது.

ஆகவே சம்பந்தப்பட்டோர் நடவடிக்கையில் இறங்கி இதைச் சீர்செய்வதன்மூலம் தம்மைத் தூய்மைப்படுத்துவதோடு தம்மையும் தூய்மையானவர்களாகக் காட்ட முயற்சிக்கவேண்டுமென்பது வரியிறுப்பாளர்களதும் சபையின் எதிரணி உறுப்பினர்களதும் வேண்டுகோள் - என்றார். (த)

## மாற்றுவலுவுள்ளோர் தேவை மதிப்பீடு

நாவற்குழி, மார்ச் 16

யாழ்.மாவட்டத்திலுள்ள மாற்றுவலுவுள்ளோருக்குரிய தேவை மதிப்பீட்டுப் பணிகள் தற்போது இடம்பெறுகின்றன.

மிக அண்மையில் நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவில் இம் மதிப்பீடு நடைபெற்றன.

ஏனைய பிரதே செயலர் பிரிவுகளுக்குரிய தேவை மதிப்பீடுகள் மிகவிரைவில் நடைபெறவுள்ளன. மாற்றுவலுவுள்ளோரை சந்தித்து அவர்களுக்கு என்னென்ன வகையான தேவைகள் உள்ளது. எந்நெதந்த வகையான உதவிகளை வழங்கமுடியுமென ஆராயப்பட்டுத் தகவல்கள் பெறப்படுகின்றன. (த-121)

## சிவன் கோயிலில் சப்பறம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில் நடைபெற்றுவரும் பெருந்திருவிழாவில் இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு பெரிய சப்பற உற்சவம் இடம்பெறும்.

நாளை பிற்பகல் 3 மணிக்கு பிஷாடனர் உற்சவமும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குப் பஞ்சரதோற்சவமும் இடம்பெறும். (ஐ)

## சொந்தக்காலில் நிற்பதற்காக...



நாம் தயார்: வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.பிரதேச செயலர் பிரிவில் மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்திய தையல், மனையியல், அழகியல் கண்காட்சி யாழ். அடைக்கலநாயகி ஆலயத் தையல் பயிற்சி நிலையத்தில் நேற்று நடைபெற்றது.
இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தபின் அதனைப் பார்வையிடுகின்றார்.
(த-313)

## கைதடிப் பாடசாலையில் கலைவாணி சிலை திறப்பு

நாவற்குழி, மார்ச் 16

கைதடி கலைவாணி வித்தியாசாலையில் நிர்மாணிக்கப்பட்ட கலைவாணி சிலையைத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

புனரமைக்கப்பட்ட பாடசாலைக் கட்டடத்தைப் பாடசாலை வேலைகள் பொறியியலாளர் க.சிவபாலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

இந்த இரு நிகழ்வுகளுக்கும் பாடசாலை முதல்வர் ப.செல்லத்துரை தலைமை வகித்தார்.

அதனைத் தொடர்ந்து பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டிகளில் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (த-121)

## பெற்றோரை இழந்து வாழும் பிள்ளைகளுக்கு பண உதவி

சங்கானை, மார்ச் 16

வண்ணியுத்தத்தில் தாய், தந்தை, உறவினர்களை இழந்து அநாதையாக வாழ்ந்து வருகின்ற 20 பிள்ளைகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் எதிர்காலத்துக்காக சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பைச் சேர்ந்த கிறிஸ்தோப்பர் பங்கிராஸ் என்பவர் சங்கானை தேசிய சேமிப்பு வங்கிக் கிளையில் தலா 5ஆயிரம் ரூபா வீதம் ஒரு லட்சம் ரூபாவை நிரந்தர வைப்பிலிட்ட நிகழ்வு ஒன்று அண்மையில் இந்த வங்கியில் இடம் பெற்றுள்ளது.

10 வயதுக்கும் குறைந்த 20 பிள்ளைகள் வங்கிக்குச் சமுகமளித்து இந்த உதவியைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (த)

## வாதரவத்தை ஊடான பஸ்சேவை 5 மாதங்களாக இடம்பெறவில்லை

நாவற்குழி, மார்ச் 16

வாதரவத்தை கிராமம் ஊடாகச் செல்லும் இ.போ.ச. பஸ் சேவை கடந்த 5 மாதங்களாக இடம்பெறவில்லை என அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

பஸ் வந்து செல்வதற்கு வீதி வளைவுகள் தடையாக உள்ளன எனப் பஸ் சேவை இடம் பெறாமைக்குக் காரணம் கூறப்பட்டது.

உடனேயே பொதுமக்கள் தமது வேலிகளை வெட்டி மரங்களைத் தறித்து வீதியை அகலமாக்கிவிட்டனர்.

இது நடந்து 5 மாதங்களாகின்றது. ஆயினும் புத்தூர்-மீசாலை வீதியூடாகச் செல் லும் பஸ் இந்தக் கிராமத்தை இதுவரை எட்டிப்பார்க்கவில்லை.

இதனால் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மக்கள் அதிகம் வாழும் வாதரவத்தைப் பிரதேசத்தவர்கள் அதிக பணம் கொடுத்து ஓட்டோவில் அல்லது 2 கிலோ மீற்றர் நடந்து சென்று வெளியிடப் பயணங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மீண்டும் தமது பிரதேசத்துக்கு பஸ்சேவையை நடத்துமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-121)

## வலி.தென்மேற்கில் கொல்களம் இல்லை இறைச்சிக்கடை உரிமையாளர்கள் சிரமம்

சண்டிலிப்பாய், மார்ச் 16

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் கொல்களம் அமைக்கப்படாததனால் இந்தப் பிரதேசத்தில் மாட்டிறைச்சிக் கடைகள் வைத்திருக்கும் உரிமையாளர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல கிலோ மீற்றர் தூரத்துக்கு மாட்டைக் கொண்டு சென்று வெட்டவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள இவர்கள் இந்தப் பிரதேசத்தில் ஒரு கொல்களம் அமைத்துத் தருமாறு பிரதேச சபைச் செயலாளரைக் கோரியுள்ளனர்.

காக்கைதீவுக் கடற்கரையில் அமைக்கப்பட்டிருந்த கொல்களத்தில் வைத்துப் பல வருடங்களாக மாடுகள் வெட்டப்பட்டு வந்தன. நாட்டில் ஏற்பட்ட போர்க் காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து பாதுகாப்புக் காரணங்களுக்காக அங்குவைத்து மாடு வெட்டுவதற்குப் பாதுகாப்புப் படையினர் அனுமதி மறுத்திருந்தனர்.

இதனால் இந்தப் பிரதேசத்திலுள்ள மாட்டிறைச்சிக் கடைகளுக்குத் தேவையான மாடுகள் வலிகாமம் மேற்குப் பிரதேசத்திலுள்ள கொல்களத்தில் வைத்து வெட்டப்பட்டு வருகின்றன. பல கிலோ மீற்றர் தூரத்துக்கு மாடுகளைக் கொண்டு செல்வது குறித்துக் கவலையடைந்துள்ள கடை உரிமையாளர்கள் நாட்டில் சமாதானம் ஏற்பட்டுள்ளதால் பழைய இடத்தில் மாடுகளை வெட்டுவதற்கு ஒழுங்குகளைச் செய்துதருமாறு அல்லது இந்தப் பிரதேசத்தில் ஒரு பொருத்தமான இடத்தில் கொல்களத்தை அமைத்துத் தருமாறு பிரதேச சபைச் செயலாளரிடம் கோரியுள்ளனர். (த-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தை அழகாக புனரமைத்த இந்திய மீனவர்கள்

## இரகசியமாக நடந்தது இந்தப் பணி

நெடுந்தீவு, மார்ச் 16

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தை இந்திய மீனவர்கள் இம்முறை மிகவும் அழகாகப் புனரமைத்துள்ளனர். மிகவும் இரகசியமான முறையில் இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆலய உற்சவம் 19 எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாவதை முன்னிட்டு ஆலயச் சுற்றாடலைத் துப்புரவு செய்வதற்காக நெடுந்தீவுப் பங்குத் தந்தை தலைமையிலான குழு அண்மையில் அங்கு சென்ற போதே இந்த விடயம் தெரியவந்தது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அங்கு சென்ற இந்திய மீனவர்கள் ஆலயத்தை மிகச் சிறப்பாகப் புனரமைத்துள்ளனர்.

ஆலயத்தின் சுவர்களில் காணப்பட்ட சேதங்கள் திருத்தியமைக்கப்பட்டு வெள்ளை நிறம் பூசப்பட்டு அது அழகாகக் கட்சியளிக்கின்றது.

இதேவேளை -

19ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள உற்சவ ஏற்பாடுகளைக் கவனிக்கும் பொருட்டும், சுகாதார சேவைகளை மேற்கொள்ளும் முகமாகவும் நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனை ஊழியர்கள் செஞ்சிலுவைச் சங்கநெடுந்தீவுப் பிரிவுத் தொண்டர்கள், நெடுந்தீவுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் ஆகியோர் நேற்று செவ்வாய்க்கிழமை நெடுந்தீவில் இருந்து கச்சதீவுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

இம்முறை 19 ஆம் திகதி ஆரம்பிக்கும் உற்சவம் மறுநாள் 20ஆம் திகதியுடன் நிறைவு பெறுகிறது. இதில் இந்திய பக்தர்களும் பெருமளவில் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-11)

# மீளக்குடியமரும் மக்களுக்காக 100 அரை நிரந்தர வீடுகள்

## யு.என்.எச்.சி.ஆர் அமைக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 16

வலி.வடக்கில் மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் 100 அரை நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு அகதிகளுக்கான ஐ.நா நிறுவனம் (யு.என்.எச்.சி.ஆர்) முன்வந்துள்ளது.

வலி.வடக்குப் பிரதேச செயலக அதிகாரியொருவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார். வலி.வடக்கில் கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட வித்தகபுரம், இளவாலை வடக்கு, இளைவாலை வட மேற்கு ஆகிய பகுதிகளில் இது வரை 70 குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளன.

இங்கு மீள்குடியமர்ந்த மக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதன் பிரகாரம் 100 அரை நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு அகதிகளுக்கான ஐ.நா நிறுவனம் கொள்கையளவில் இணங்கியுள்ளது.

பெரும்பாலும் அடுத்த மாத நடுப்பகுதியில் இந்த அரை நிரந்தர வீட்டுத்திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று அந்த அதிகாரி கூறினார். (த-9)

# வலி.கிழக்கு வீதிகளில் மின்விளக்குகள் இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 16

வலி.கிழக்குப் பகுதியில் பிரதான வீதிகள் சிலவற்றில் வீதி மின்விளக்குகள் பொருத்தப்படாமையால் அந்த வீதிகள் ஊடாக இரவில் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். - பருத்தித்துறை வீதியில் இருபாலைச் சந்தியிலிருந்து பருத்தித்துறை நோக்கிச் செல்லும் வீதியில் இரவில் மின்விளக்குகள் ஒளிர்வதில்லை. அதேபோன்று முடமாவடிச் சந்தியில் இருந்து ஆரம்பமாகும் இராச வீதியிலும் மின் விளக்குகள் ஒளிர்வதில்லை.

இந்த இரு வீதிகளும் வலி.கிழக்குப் பகுதியின் பிரதான வீதிகளாக உள்ளன.

இந்த இரு வீதிகளிலும் இரவில் மின்விளக்குகள் ஒளிர்வதில்லை. இதனால் இந்த வீதிகள் ஊடாகப் பயணம் செய்பவர்கள் விபத்துக்குள்ளாகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அத்துடன் இந்த வீதிகளில் இரவில் பயணம் செய்பவர்களிடம் வழிப்பறிக் கொள்ளைகளும் இடம்பெறுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதனால் இரவில் இந்த வீதியூடாக அச்சத்துடன் பயணிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே உரிய தரப்பினர் இந்த வீதிகளுக்கு விரைவில் மின்விளக்குகளை ஒளிரவிட நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-26)

## நிர்வாகம் சீர் செய்வதற்கு...



புதிய முயற்சி: யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபையின் ஏற்பாட்டில் இலங்கைக் கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் இ.சுப்பிரமணியம் எழுதிய 'நவீன விஞ்ஞான முகாமைத்துவம்' என்னும் நூல்வெளியீட்டு விழா அண்மையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக் கலந்துக் கொண்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் நூலை வெளியீட்டு வைக்க முதற்பிரதியை யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் பணிப்பாளர் நா.சுந்தரலிங்கம் பெற்றுக்கொள்கிறார். (த-311)

# உலக காசநோய் தின நிகழ்வு வலி.தென்மேற்கில் வெள்ளியன்று

சண்டிலிப்பாய், மார்ச் 16

உலக காசநோய் தினம் வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட மார்பு நோய்த் தடுப்புச் சிகிச்சை நிலையமும் சண்டிலிப்பாய் பிரதேச வைத்திய அதிகாரி பணிமனையும் இணைந்து நடத்தும் இந்த நிகழ்வில் "காசநோய் சமூக அணுகுதல்" பதிப்பு-2 மலரும் வெளியிடப்படவுள்ளது.

வலி.தென் மேற்குப் பிரதேச சபையின் மானிப்பாய் கலாசார மண்டபத்தில் காலை 9 மணிக்கு யாழ்.மாவட்ட காசநோய்த் தடுப்புச் சிகிச்சைநிலையப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி சி.எஸ்.யமுனானந்தா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர்.அ.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வலி.தென் மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் திருமதி.பு. சிவலிங்கம், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்.பிராந்திய தொற்றுநோய்த் தடுப்பு வைத்திய அதிகாரி எஸ்.சிவகணேசன், தாய் சேய் நல வைத்திய அதிகாரி திருமதி ஜெ.தி.சிவசங்கர், சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டப்பணிப்பாளர் சிகந்தசாமி ஆகியோர் கலந்து கொள்வார்கள். (த-115)

# உதவி ஆணையாளர் உட்பட 4 பேர் தேர்தல் கடமைக்காக மன்னாருக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 16

நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் கடமையாற்றுவதற்காக யாழ். தேர்தல் திணைக்கள உதவி ஆணையாளர் பொ.குகநாதன் உட்பட 4 உத்தியோகத்தர்கள் அங்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் நடைபெறவுள்ளன.

இதனையடுத்து யாழ்.தேர்தல் திணைக்கள உதவி ஆணையாளர் உட்பட நான்கு பேரை மன்னார் மாவட்டத்தில் தேர்தல் கடமைகளில் ஈடுபடுமாறு தேர்தல் திணைக்களம் அழைப்பு விடுத்துள்ளது.

அத்துடன் யாழ்.செயலகத்தில் உள்ள தேர்தல் திணைக்களத்துக்குச் சொந்தமான வாகனங்களும் புத்தளம் மாவட்டத்தில் தேர்தல் பணிகளுக்காக அனுப்பப்பட்டுள்ளதாகத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (த-9)

# மரக்காலையில் நின்றவர்களை தாக்கியது 7பேர் கொண்ட கும்பல்

## படையினர் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைப்பு

தென்மராட்சி, மார்ச் 16

வாகனத்தில் வந்த ஏழு பேர் கொண்ட கும்பல் மரக்காலையில் கதைத்துக் கொண்டிருந்த இருவரை மோசமாகத் தாக்கினர்.

இந்தச் சம்பவம் கடந்த 12ஆம் திகதி மாலை 6 மணியளவில் சாவகச்சேரி முத்துமாரி அம்பாள் மரக்காலையில் இடம் பெற்றது.

தாக்குதல் நடத்தியவர்கள் இருவரையும் வாகனத்தில் ஏற்றிச் செல்ல முற்பட்ட வேளையில் அந்தப் பகுதிக்கு வந்த படையினர் அவர்களைத் தடுத்து வைத்துப் பொலிஸாரை அழைத்துக் கையளித்தனர்.

தாக்குதலுக்கு இலக்கான சாவகச்சேரி கற்குழியைச் சேர்ந்த சின்னத்தம்பி சண்முகராசா (வயது-42) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சரசாலையைச் சேர்ந்த மற்றவர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-207)

# வலி.வடக்கில் அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் இதுவரை 70 குடும்பங்களே மீள்குடியமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 16

வலி.வடக்கில் மீளக்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் இதுவரை 70 குடும்பங்களே மீள்குடியேறியுள்ளனர் என்று வலி.வடக்குப் பிரதேச செயலக அதிகாரியொருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

வலி.வடக்கில் வித்தகபுரம், இளவாலை வடக்கு, இளவாலை வடமேற்கு ஆகிய பகுதிகளில் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டனர்.

அனுமதி வழங்கப்பட்ட பகுதிகளில் பற்றைகளைத் துப்புரவு செய்வதிலும் தமக்குரிய பாதைகளைச் சீர்செய்வதிலும் ஈடுபட்டிருந்த மக்கள் தற்போது மெல்லமெல்ல மீள்குடியேறி வருகின்றனர்.

இதன்போது மாவை கலட்டியில் 50 குடும்பங்கள் குடியேறியுள்ளனர். இவர்களுக்குத் தேவையான தகரம், சிமெந்து என்பன வழங்கப்பட்டு அதன்மூலம் தற்காலிக வீடுகளை அமைத்து அவர்கள் குடியேறியுள்ளனர்.

இங்கு 8 மலசல கூடங்களைக் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் அமைத்து வருகின்றது. இளவாலை வடமேற்கில் வலித்தூண்டல் பகுதியில் 15 குடும்பங்களும் வித்தகபுரத்தில் 5 குடும்பங்களும் இதுவரை மீள்குடியேறியுள்ளன.

இங்கு மீள்குடியேறியுள்ள மக்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்தப் பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன - என்றார் அந்த அதிகாரி. (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தின் பின்னர் வன்னியில் மீள்குடியமர்ந்த மக்களின் வாழ்வில் ஒளிவீசுவது எப்போது?

ஓங்கி வளர்ந்த காடுகள், நீர் நிறைந்த குளங்கள், சலசலத்து ஓடும் காட்டாறுகள், பச்சைப் பசேலென்ற வயல்கள், கூட்டம் கூட்டமாகச் சுதந்திரமாக உலாவித்திரியும் கால்நடைகள், இனிய ஓசை எழுப்பும் பறவையினங்கள், வளமான மண், குறைவில்லாத நீர்வளம், நெல்லும் காய் கறிகளும் கனி வகைகளும் பாலும் இறைச்சியும் மீனும் தேனும் குறைவின்றிக் கிடைப்பதால் பசியே அறியாத முகங்கள் இதுதான் அன்றைய செழிப்பான வன்னி மண்ணின் தோற்றம்.

தன்னை நாடிவருவோர்க்கு எல்லாம் வாழ்வு தந்த வன்னி மண் தானே இன்று வாழ்விழந்து, பொலிவிழந்து, முகவ்ரியிழந்து, சின்னா பின்னமாகிய கொடுமை எழுத்தில் வடிக்க முடியாத ஒரு சோககாவியம்.

கொடிய யுத்தமொன்றுக்கு முகம் கொடுத்து ஈவு இரக்கமற்ற முறையில் அழிக்கப்பட்ட வன்னிப் பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து அரசினால் அமைக்கப்பட்ட முகாம்களில் பல்வேறு நெருக்கடிகளுக்கும், வசதியீனங்களுக்குமிடையில் அடைக்கப்பட்டிருந்த மக்கள் மீள்குடியமர்வு என்ற பெயரில் அவர்களது பிரதேசங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் எதுவும் அங்கிருக்கவில்லை. இடிந்து, அழிந்து போன இல்லிடங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், ஆலயங்கள் இவைதான் மீள்குடியமர்ந்த மக்களை வரவேற்கக் காத்திருந்தன. தமக்கு வழங்கப்பட்ட தறப்பாள் மற்றும் தகரங்களால் அமைக்கப்பட்ட இல்லிடங்களே அவர்களுக்குத் தஞ்சமளித்தன. இவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொருள்களைப் பாதுகாப்பதற்குக்கூட அங்கு இடம் இருக்கவில்லையென்பது வேறுவிடயம்.

இந்தநிலையில் அரசு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியது. இலங்கையிலே இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு சிறப்பாக நடைபெறுவதாகச் சில உலக நாடுகள் புகழாரம் சூட்டின. வெளிநாட்டு உதவிகளும் குவிந்தன. வன்னிப் போரில் முக்கிய பங்கு வகித்த இந்தியாவும் தனது பங்குக்குச் சில உதவித் திட்டங்களை அறிவித்தது. இதுவொரு பிராயச்சித்தம் தேடும் நடவடிக்கையாகவும் இருக்கலாம். மீள்குடியமர்ந்த மக்களின் வாழ்வில் மெல்ல மெல்ல நம்பிக்கை துளிர்விடத் தொடங்கியது.

ஆனால் செயற்பாடுகள் தான் ஆமை வேகத்தில் நகர்ந்து செல்கின்றன. இந்தியாவின் 50 ஆயிரம் வீட்டுத் திட்டம் கிணற்றில் போட்ட கல்லாக நகராமல் நிற்கின்றது. இந்த வீட்டுத் திட்டத்தில் மலையகத்தைச் சேர்ந்த மக்களும் வடபகுதியிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களும் பங்கு கேட்பது புதுமையான விடயம். சிலவேளை குரங்கொன்று அப்பத்தைப் பகிர்ந்த கதையாகவும் இது முடியலாம்.

ஆனால் ஒன்றைமட்டும் எவராலும் தட்டிக் கழித்துவிட முடியாது. மீள்குடியமர்ந்த மக்களுக்கான வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுதான் அது. வெறும் தறப்பாள் மற்றும் தகரக் குடிசைகளில் இவர்கள் எவ்வளவு காலத்துக்குத்தான் தமது வாழ்நாளைக் கழிக்க முடியும்?

அண்மையில் பெய்த கடும் மழை இவர்களுக்கான வீட்டுத் தேவையின் அவசியத்தை விரைவாக்கியுள்ளது. வெள்ள நீரில் இவர்கள் அனுபவித்த அவலங்கள் சொல்லிலடங்காதவை. யுத்தத்தின் கொடுமை, இடப்பெயர்வு, மீள்குடியமர்வு ஆகிய பல்வேறு வடிவங்களால் அலைக்கழிக்கப்பட்ட இந்த அப்பாவி மக்கள் தமக்கென ஒரு நிரந்தர இல்லிடம் கிடைத்து அதில் நிம்மதியாக உறங்கவே விரும்புகின்றனர். சுகபோக வாழ்வை அவர்கள் ஒருபோதும் யாசிக்கவில்லை.

ஆனால் இவர்களின் இந்தக் குறைந்த பட்சக் கோரிக்கை கூட நிறைவேற்றப்படுமா என்பதில் தான் சந்தேகம் நிலவுகின்றது.

அரசின் நிரந்தர வீட்டுத் திட்டம், பகுதி வீட்டுத் திட்டம் என்பவற்றில் பயன்பெற வேண்டுமாயின் சொந்தமாகக் காணிகள் இருக்கவேண்டுமென்ற நிபந்தனையால் மீள்குடியமர்ந்த பலர் நிர்க்கதியான நிலையில் உள்ளனர். இவர்கள் யுத்தத்துக்கு முன்னர் குடியிருந்த காணிகளுக்கான உரிமைப் பத்திரங்கள் எதுவும் இவர்களிடம் இல்லை.

ஆகவே இவர்களின் அவல நிலையைப் போக்குவது அரசின் முக்கிய பணியாக உருவெடுத்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணம் 6 மாதங்களுக்கே வழங்கப்படுமென்ற அரசின் அறிவிப்புவேறு இந்த மக்களின் வயிற்றில் புளியைக் கரைத்துள்ளது. ஏற்கனவே அரை வயிறு கால்வயிறெனக் காலத்தையோட்டியவர்கள் முழுவயிற்றையும் காயவைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ராஜராஜன்

எனவே பாதிக்கப்பட்ட இந்த மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பும்வரை இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் வழங்குதல் அவசியமாகும்.

வன்னிப் போரின்போது சாவுகளையும், உடைமைகளையும் இழந்து ஏதோவொரு விதத்தில் தமது உயிர்களை மட்டுமே தக்கவைத்துக் கொண்டிருக்கும் இந்த மக்கள் நடைப் பிணங்களாக வெறும் கைகளோடு தமது வாழ்விடங்களில் மீள்குடியமர்ந்துள்ள நிலையில் உள்ளனர்.

(தொடரும்)

## தரம் 5 முன்னோடித் தேர்வு

கிளிநொச்சி, மார்ச் 16

கிளிநொச்சிக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் வலயமட்டத்திலான தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முன்னோடித் தேர்வின் 3 ஆவது பரீட்சை கடந்த 11 ஆம் திகதி சகல பாடசாலைகளிலும் மு.ப.9 மணிக்கு நடைபெற்றது.

இந்தப் பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பீட்டுப்பணிகள் கடந்த 12 ஆம் திகதி கோட்ட மட்டத்தில் நடைபெற்றன.

இந்த மதிப்பீட்டுப் பணியில் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் தரம்-5 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் இருந்து இந்தவருடம் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்குக் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில் தரம்-4 இல் நிலையறி பரீட்சை நடைபெற்றதுடன் தற்போது முன்னோடிப் பரீட்சையும் நடைபெற்று வருகின்றது.

தொடர்ந்தும் இந்த முன்னோடிப் பரீட்சை நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் மாணவர்கள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்படும்.

(க-405)

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

முருகேசு செந்தில்குமார்

(ஆசிரியர், சிவநகர் அ.த.க. பாடசாலை, உருத்திரபுரம், கிளிநொச்சி)

திதி: துவாதசி (16.03.2011)



ஆண்டுகள் பல கடந்து போனாலும் எம் மனதில்
உம் நினைவு எந்நாளும் நீங்காது
வைகறையும் அஸ்தமனமும் மாறிமாறி வருவது போல்
எம் மனதில் உம் நினைவு வந்து வந்து போகுதடா
வாழ்விழந்து போன தென்னி உன் அன்னை உறவுகள்
எண்ணித்தினம் புலம்பிறமே! இறக்கும் தருணம் அதில்
உதவும் உன் குணம் கண்டு கணம் தோறும்
கண்கள் கண்ணீர் வடிக்குதடா
இறப்பும் பிறப்பும் இயற்கை நியதி என்றுணர்ந்தும்
உன் பிரிவு எம்மைத் துன்பத்தில் ஆழ்த்துதடா
பண்பாய் பேசி அன்பாய் அரவணைக்கும்
பண்பாளன் நீயென்று பலரும் பகர்ந்திடவே நாம் கேட்டோம்
கணக்கின் மகத்துவம் இம் மாநிலம் அறியும்
கணக்கறிவித்த நீ காலம் கடந்தும் வாழ்வாயடா

தோற்றம் 30.04.1976 மறைவு 08.03.2009

உம் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முதலாம் கட்டை,
மானிப்பாய் வீதி, உடுவில். (1628) (49,20,27)

துயருறும்:
குடும்பத்தினர்.

மண்ணில்: 12.10.1950
விண்ணில்: 14.02.2011

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
சிவபாதம் கமலாதேவி

(48,20,27)

கடந்த 14.02.2011 அன்று அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவி அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தும் பல வழிகளிலும் இதயபூர்வமாக உதவிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் நினைவஞ்சலி வெளியிட்ட பாடசாலை நண்பர்கள், உறவினர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைக் கூறி நிற்கின்றோம். இன்று (16.03.2011) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

துரை வீதி, தாவடிவடக்கு, இணுவில். குடும்பத்தினர்

**விற்பனைக்கு**

Bajaj M 80 4 Stroke மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0217210217, 0771727941

**தேவை**

மருந்துப் பொருள்களில் அனுபவமுள்ள, படித்த ஆர்வமுள்ள ஆண்கள்/ பெண்கள் உடனடியாகத் தேவை.

(யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்புக்கு: 0771183374, 021 2229288.

**பெண் பிள்ளைகள் தேவை**

யாழ். பல்கலைக்கழக சூழலில் இயங்கும் தொலைத்தொடர்பு/ போட்டோ கொப்பி நிறுவனத்துக்கு இரு பெண் பிள்ளைகள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். தேவையானவிடத்து சாப்பாடு, தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்.

தொடர்பு- 0774206675

31ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
ரதிமலர் பாஸ்கரதேவன்

மலர்வு: 21.03.1931
உதிர்வு: 15.02.2011



அன்பின் திருவுருவே! பாசத்தின் பிறப்பிடமே!
பண்பின் சிகரமே! அணையா விளக்கே!
விரைந்தோடி சென்றது ஓர் திங்கள்
புன்னகை மாறாத உங்கள் திருமுகம்
அன்பு மிகுநின் பாசம், பெருமைமிகுநின் குணம்
எம் நெஞ்சில் நித்தமும் நிலைத்திருக்கும்

எமது குடும்பத்தலைவியின் 31ஆம் நாள் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (17.03.2011) வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

(49,19,20)

28 5/1, மாதங்கொடவத்தை ஒழுங்கை,
கொழும்பு- 06.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
சகோதரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதிமுறைகளுக்கு மாறாக வவுனியா அரிசி ஆலைகள்

வவுனியா, மார்ச் 16

வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் அரிசி ஆலைகள் மற்றும் ஏனைய ஆலைகள், சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக இல்லாமல் காணப்படுவதால் அவற்றுக்கு உரிமம் வழங்குவதில் பல பிரச்சினைகள் ஏற்படுவதாக வவுனியா நகரசபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

மேலும் பல அரிசி ஆலைகளில் நெல்லைப் பல மணி நேரம் நீரில் ஊறவைத்து அவித்த பின்னர் கழிவுநீர் வெளியில் சென்று துர்நாற்றத்தை ஏற்படுத்துகின்றது.

அத்துடன் ஆலைகளில் இருந்து வெளியேறும் தூசிகள், சத்தம் என்பன தொடர்பாகப் பொதுமக்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கழிவு நீர் ஆலைகளின் சுற்றுப்புறத்தில் தேங்குவதால் ஈக்கள், நுளம்புகள் என்பன பெருகுவதுடன் துர்நாற்றம் வீசும் வாய்ப்பு உள்ளதாகவும் பல தொற்று நோய்களும் டெங்கு போன்ற நுளம்பு மூலம் பரவும் நோய்களும் ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளது.

அனேகமான ஆலைகள் பொதுமக்கள் நெருக்கமாகச் செறிந்து வாழும் பிரதேசங்களில் காணப்படுகின்றன எனவும் தெரிவித்தார்.

இதனால் இவற்றால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் கருத்தில் கொண்ட பின்புதான் ஆலைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கான உரிமம் வழங்குவதற்கு சிபார்சு செய்யப்படும் எனவும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சில பிரதேசங்களில் கோழிப்பண்ணைகளில் சேரும் கழிவுகளைத் துப்புரவு செய்யாது சுகாதார விதிமுறைகளுக்கு மாறாக நடப்பதனால் பொது மக்களுக்குப் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

இது தொடர்பிலும் தமக்கு முறைபாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-501)

# மணலைப் பெறமுடியாத அவலத்தில் கிளிநொச்சி பாரதிபுரம் மக்கள்

கிளிநொச்சி, மார்ச் 16

கிளிநொச்சி, பாரதிபுரம் கிராமத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தமது கட்டுமானப் பணிகளுக்கான மணலைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாகக் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தக் கிராமத்தில் 780 வரையான குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன. இவர்கள் தமது வீடுகளைப் புனரமைப்பது மற்றும் புதிய வீடுகளை நிர்மாணிப்பது போன்ற கட்டுமானப் பணிகளுக்கெனத் தேவையான மணலைப் பெற்றுக்கொள்வதில் என்றுமில்லாதவாறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முன்னர் தாங்கள் ரூபா 750 இற்குப் பெற்றுக்கொண்ட ஓர் உழவு இயந்திரத்தில் ஏற்றும் மணலைத் தற்பொழுது 4,500 ரூபாவுக்கு மேலாகப் பணத்தைக் கொடுத்துப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

தாங்கள் கடந்த காலங்களில் தமது கட்டுமானத்துக்குத் தேவையான மணலைப் பிரதேச சபையின் அனுமதியுடன் நேரடியாக ஆற்றுக்குச் சென்று எடுத்து வந்ததாகவும் தற்பொழுது மணல் ஏற்றும் ஆற்றைத் தென்னிலங்கை வியாபாரிகளுக்கு விற்பனை செய்துள்ளதால் தாம் அப்பகுதிகளுக்குச் செல்ல முடியாது எனவும் தெரிவிக்கின்றனர்.

இதனால் தமது கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான மணலை அதிகவிலை கொடுத்தே பெறவேண்டியுள்ளதாக மேலும் பிரதேச வாசிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

(க-6)

## வேடம் புனைதல் நிகழ்வு கிளிநொச்சியில்

கிளிநொச்சி, மார்ச் 16

கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலய தரம்-1 மாணவர்களின் வேடம் புனைதல் நிகழ்வு கடந்த 11 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கிளிநொச்சிக் கல்வி வலய ஆரம்பக்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பொ.விஜயநாதனும், சிறப்பு விருந்தினராகக் கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபர் திருமதி கெங்காதேவி ஜெயராஜும் கலந்து சிறப்பித்தனர்.

தரம்-1 இல் கல்வி கற்கும் 100 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்வேறு வேடங்களைத் தாங்கி வந்தமை பார்ப்போரின் மனங்களை வென்றன.

சிறார்கள் கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் இருந்து ஏ-9 வீதி வழியாக ஊர்வலமாக வந்து கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தைச் சென்றடைந்தனர். அங்கு விருந்தினர்களும் பார்வையாளர்களும் சிறார்களை வாழ்த்தினர். (க-405)

## எங்கும் எதிலும்...



விருந்தினரின் பார்வை: கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் கலந்து கொண்ட விருந்தினர்கள் மாணவர்களின் அணிநடையினைப் பார்வையிடுகின்றனர். (450)

## விளையாட்டுப் போட்டிகள்

முல்லைத்தீவு,மார்ச்16

கரைதுறைப்பற்றுப் பிரதேசத்துக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றுள்ளன.

கடந்த 26 ஆம் திகதி ஆரம்பமாகிய இந்தப் போட்டிகளில் பல விளையாட்டுக் கழகங்கள் ஆர்வத்துடன் பங்குபற்றின.

இதில் ஆண்களுக்கான துடுப்பாட்டத்தில் 11 கழகங்கள் பங்கு கொண்டன. இறுதியில் வளர்மதி விளையாட்டுக் கழகமும் வித்தியா விளையாட்டுக்கழகமும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின. போட்டியின் முடிவில் வித்தியா விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

இதைப்போன்று பெண்களுக்களுக்கான துடுப்பாட்டத்தில் ஐந்து அணிகள் பங்கு கொண்டன. இறுதிப் போட்டியில் வற்றாப்பளை அணியும் மாமூலை விண்ணொளி அணியும் போட்டியிட்டன. இதில் விண்ணொளி அணி வெற்றி பெற்றது. (க)

# எந்த உதவிகளும் கிடைக்காத கரைச்சி கிழக்குப் பகுதி மக்கள்

வட்டக்கச்சி, மார்ச் 16

கரைச்சி கிழக்குப் பகுதி மக்கள் மீள்குடியமர்வு செய்யப்பட்டு ஒன்பது மாதங்கள் கடந்த நிலையிலும் தமக்கு எந்த உதவிகளும் கிடைக்கவில்லையென விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நலன்புரி நிலையத்தில் இருந்து மீள்குடியமர்வு செய்யப்பட்ட கரைச்சி கிழக்குப்பகுதி மக்களுக்கு இதுவரை தகரமோ, சிமெந்தோ வழங்கப்படவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் தமக்கு வழங்க வேண்டிய 50 ஆயிரத்தில் 25 ஆயிரம் மட்டுமே வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர். தாம் இந்தப் பகுதிகளுக்கு மீள்குடியமர்வு செய்யப்பட்டதன் பின்னர் கரைச்சி மேற்குப் பகுதியில் மீள்குடியமர்வு செய்யப்பட்ட மக்களுக்குத் தகரங்கள் வழங்கப்பட்டுள்ளது எனக் கூறும் இவர்கள் இந்த விடயத்தில் கிராம சேவையாளர்களின் செயற்பாடா? அல்லது அரச அதிகாரிகளின் நடவடிக்கையின்மையா? எம்மைப் புறந்தள்ளி வைத்ததெனக் கேள்வியெழுப்பியுள்ளனர்.

மற்றவர்களைப்போல நாமும் யுத்தத்தால் உயிர்கள், உடைமைகள் யாவற்றையும் இழந்து மீண்டும் மீளக்குடியமர்ந்துள்ளோம் எனக் கூறும் இவர்கள் இனியாவது கரைச்சி கிழக்குப் பகுதியிலும் மக்கள் தான் வசித்து வருகின்றார்கள் என்பதை அரச அதிகாரிகள் நினைக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றனர்.

(க-450)

## மெய்வன்மைப் போட்டி

கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலை முதல்வர் க.திரவியம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கலந்து கொண்டு சிறப்பித்தார். இடைவேளை நிகழ்வின் போது இடம்பெற்ற மாணவிகளின் இசையும் அசைவும் நிகழ்வு பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தது. (க-450)

# புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் பண்டமெடுக்கும் நிகழ்வு ஐந்து வருடங்களின் பின் ஆரம்பம்

கிளிநொச்சி, மார்ச் 16

கிளிநொச்சி, கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழாவினை முன்னிட்டு பண்டமெடுக்கும் நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு கடந்த 12 ஆம் திகதி காலை ஆலயக் கதவு திறக்கும் நிகழ்வு இடம்பெற்று விளக்கு வைத்தல் பூசைகள் நடைபெற்றன. பூசைகள் நிறைவடைந்தவுடன் யாழ்ப்பாணம் தென்மராட்சி பிரதேசத்துக்கு மாட்டு வண்டிகளில் சென்று பண்டம் எடுத்துவரும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பண்டமெடுக்கும் நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய ஆலயப் பூசகர் சி.வேலாயுதம் இது தொடர்பாகத் தெரிவிக்கும் போது:

தொன்றுதொட்டு வருடாந்தம் பங்குனி மாதத்தில் வருகின்ற பௌர்ணமியுடன் கூடிய உத்தர நட்சத்திரத் தினத்தன்று பொங்கல் நடைபெறும்.

ஆலயத்தின் பாம்பும் இத்திதியிலேயே பிறந்ததாக நம்பப்படுகின்றது. பொங்கல் [illegible] ஒரு வாரத்துக்கு முன்னர் ஆலயத்துக்கென சேருகின்ற காசையும், தானியங்களையும் மாட்டு வண்டியில் யாழ்ப்பாணம், தென்மராட்சிக்கு எடுத்துச் சென்று அங்கிருந்து பொங்கலுக்குத் தேவையான பண்டங்கள் எடுத்து வரப்படும்.

அவ்வாறு எடுத்து வந்துதான் பொங்கல் விழா குறிப்பிட்ட திதியில் நடைபெறும்.

கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக பொங்கலுக்கான பண்டங்கள் எடுத்து வருகின்ற நிகழ்வு தடைப்பட்டது.

இந்த நிகழ்வு 2006 ஆம் ஆண்டு ஒரு தடவை நடைபெற்றது. ஐந்து வருடங்களின் பின்னர் இந்த வருடம் இந்த நிகழ்வு நடைபெறுவது மகிழ்ச்சியைத் தருகின்றது என்றார்.

புளியம் பொக்கணைக் கிராமத்தைச் சேர்ந்த பத்துக்கும் மேற்பட்ட மாட்டு வண்டிகள் இவ்வாறு பண்டமெடுக்கும் நிகழ்வுக்காகச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
16 மார்ச் 2011 புதன்கிழமை

# லுனுகலை பிரதேச சபையை கைப்பற்ற தமிழ் உணர்வுடன் வாக்களிக்க வேண்டும்

பதுளை,மார்ச்16

தமிழன் என்ற உணர்வுடன் வாக்களித்தால் லுனுகலை பிரதேச சபையின் ஆட்சியை மலையக மக்கள் முன்னணி கைப்பற்றும்.

-இவ்வாறு தெரிவித்தார் மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உபதலைவர் அ.அரவிந்குமார்.

கடந்த சனிக்கிழமை லுனுகலை சோலன்ஸ் தோட்ட மேற்பிரிவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

இதுவரை காலமும் பசறைத் தேர்தல் தொகுதியில் பசறை பிரதேசசபை என்ற ஒரு சபையே இயங்கி வந்தது. அது தற்போது இரு பிரதேச சபைகளாகப் பிரிக்கப்பட்டு லுனுகலை பிரதேச சபை என்ற ஒரு புதிய சபையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஒரே சபையாக இருந்தபோது பசறைத் தேர்தல் தொகுதியில் சுமார் 50சதவீதத்துக்கும் அதிகமான தமிழ் வாக்காளர்கள் இருந்தனர். அது இரு பிரிவுகளாக்கப்பட்டமையை அடுத்து பெரும்பான்மை சமூகத்தைச் சார்ந்த வாக்காளர்களின் எண்ணிக்கை பசறை பிரதேசசபைக்குள் அதிகரித்துள்ளது. லுனுகலை பிரதேசசபை எல்லைக்குள் தமிழ் வாக்காளர்களின் தொகை 60சதவீதத்தைத் தாண்டியுள்ளது.

சரியாகச் செயற்பட்டால் நாம் இந்த நிலைமையை எமக்குச் சாதகமாக்கிக்கொண்டு பல்வேறு அனுகூலங்களைப் பெறமுடியும். லுனுகலை பிரதேசசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள்விடுதலைமுன்னணி ஆகிய தேசியக் கட்சிகள் பேட்டியிடுகின்றன.

இந்தநிலையில் 60சதவீதத்துக்கும் அதிகமான தமிழ் வாக்காளர்களைக் கொண்ட இச்சபையின் ஆட்சியை நாம் கைப்பற்ற முடியும். இதை எமக்கு சாதகமாக்கிக்கொள்ள வேண்டுமாயின் லுனுகலை பிரதேசசபை வாழ் தமிழ் மக்கள் தமிழன் என்ற உணர்வோடு தமிழ்க் கட்சியான மலையக மக்கள் முன்னணிக்கு வாக்களிக்க வேண்டும்.

3 தேசியக் கட்சிகளும் பெரும்பான்மை சமூகத்தின் வாக்குகளைப் பிரித்துக்கொள்ளும்போது நாம் சமயோசிதமாகச் செயற்பட்டால் நம்மை நாமே ஆளும் நிலைமையை லுனுகலை பிரதேசசபையில் ஏற்படுத்த முடியும்.

நுவரெலியா மாவட்டத்துக்கு அடுத்தபடியாகத் தமிழ் மக்களுக்கு ஆட்சியைக் கைப்பற்றும் வாய்ப்பு பதுளை மாவட்டத்தில் லுனுகலை பிரதேசசபைக்கு மாத்திரமே உள்ளது- என்றார்.

## இரண்டு மாதச் சிசுவை மறைத்துவிட்டு 2 லட்சம் ரூபா கப்பம் கோரிய தந்தை

தனது மனைவியின் பெற்றோர்களிடம் 2 லட்சம் ரூபா கப்பத்தைப் பெறுவதற்காக தனது இரண்டு மாத ஆண் சிசுவை மறைத்து வைத்து நாடகமாடிய தந்தையை அநுராதபுரம் பொலிஸார் எச்சரித்து விடுதலை செய்தனர்.

மேசன் தொழில் புரியும் இவர் மதுவுக்கு அடிமையானவர். வரவுக்கு மீறிய செலவில் பணத் தட்டுப்பாட்டுக்கு உள்ளானார்.

அதிலிருந்து மீள்வதற்காகத் தங்களது இரண்டு மாத மகனை நண்பன் ஒருவனது வீட்டில் மறைத்துவைத்துவிட்டு, மனைவியின் பெற்றோர்களிடம் குழந்தையை விடுவிக்க இரண்டு லட்சம் ரூபா கப்பம் கோரியுள்ளார்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிந்து கொண்ட இவரது மனைவி அநுராதபுரம் பொலிஸில் தெரிவித்த முறைப்பாட்டையடுத்து சந்தேகநபர் கைதானதுடன், குழந்தையும் மீட்கப்பட்டது.

இது குடும்ப விடயம் எனவும் மேலதிக நடவடிக்கைகள் வேண்டாமெனவும் மனைவியும் அவரது பெற்றோர்களும் பொலிஸாரிடம் கேட்டுக் கொண்டனர்.

இதனையடுத்து, சந்தேக நபர் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

## பெற்றோரின் வேண்டுகோளால் தகுதிகாண் பரீட்சை ஒத்திவைப்பு

### உபவேந்தர் ரூபசிங்க விளக்கம்

பதுளை,மார்ச்16

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் விளையாட்டு, விஞ்ஞானம் மற்றும் உடற் பயிற்சிக் கல்விக்கான டிப்ளோமா பாடநெறிக்கான தகுதிகாண் பரீட்சை பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்கவே ஒருநாள் ஒத்திவைக்கப்பட்டது என உபவேந்தர் பேராசிரியர் மகிந்த எஸ்.ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

மார்ச் மாதம் 12ஆம் திகதி இந்தப்பரீட்யை நடத்த ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதேநாளில் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் தகுதிகாண் பரீட்சை ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததால் சப்ரகமுவ பரீட்சையை ஒத்திவைக்குமாறு பெற்றோர்கள் தன்னிடம் வேண்டுகோள் விடுத்தனர் எனவும் இதனையடுத்து அந்தப் பரீட்சை 13ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அதற்கான பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது எனவும் உபவேந்தர் தெரிவித்துள்ளார்.

பத்திரிகை அறிவித்தலைப் பார்க்கத் தவறிய நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் 12ஆம் திகதி பரீட்சைக்கு வந்துள்ளனர்.

அவர்களுக்கு அன்றைய தினம் தங்குமிட வசதிகள் வழங்கப்பட்டு 13ஆம் திகதி பரீட்சைக்கு சமுகமளிக்க வாய்ப்பளிக்கப்பட்டது என்றும் தெரிவித்த உபவேந்தர் 12ஆம் திகதி பரீட்சைக்கு வந்த மாணவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர் என்ற வதந்தியில் எவ்வித உண்மையும் இல்லையெனவும் தெரிவித்துள்ளார். (204-5)

TEGOSL

ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

அதியுயர் ஊடக விருதுகள் 2010

சிறந்த ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் 12 ஆவது வருட விருது வழங்கல் நிகழ்ச்சி

2010 ஆம் ஆண்டிற்கான அதியுயர் ஊடக விருது வழங்குவதற்காக இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் விண்ணப்பங்களைக் கோருகின்றது.

2010 ஆம் அண்டில் பத்திரிகைத்துறையில் பல்வேறு செயற்பாடுகளிலும் திறமைகளை வெளிப்படுத்தியவர்களுக்கு விருதுகளை வழங்குவதன் மூலம் அவர்களது தொழிலுக்கு அங்கீகாரத்தை வழங்குகின்றது. இலங்கையில் ஊடகத்துறையில் பணியாற்றும் எல்லா ஊடகவியலாளர்களும் இந்த விருதுகளுக்காக விண்ணப்பிப்பதை ஊக்குவிப்பதோடு மும்மொழிகளிலும் பின்வரும் பிரிவுகளிலான விருதுகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ஆண்டின் சிறந்த பத்திரிகையாளருக்கான மேர்வின் சில்வா ஞாபகார்த்த விருது
- ஆண்டின் சிறந்த தனித்துவ செய்திக்கான விருது
- ஆண்டின் சிறந்த புலனாய்வுக்கான விருது
- ஆண்டின் சிறந்த சூழலியல் செய்திக்கான விருது
- ஆண்டின் சிறந்த சமூக அபிவிருத்தி செய்தியாளருக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது
- ஆண்டின் சிறந்த விளையாட்டு செய்தியாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த இளம் செய்தியாளருக்கான டென்சில் பீரிஸ் விருது (26 வயதுக்கு கீழ்)
- ஆண்டின் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்திரிகை வடிவமைப்புக்கான விருது
- நெருக்கடி சூழலில் செய்தித் தேடலுக்கான பேராசிரியர் கைலாசபதி ஞாபகார்த்த விருது
- ஆண்டின் சிறந்த வணிக செய்தியாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த விவரண கட்டுரையாளருக்கான உப்பாலி விஜேவர்தன விருது
- ஆண்டின் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ. சிரிவர்தன விருது.



ஊடகத்துறையைச் சேர்ந்த சிறந்த அனுபவம்வாய்ந்த நடுவர் குழுவின் மூலம் விருதுகளுக்கு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இதற்கான விண்ணப்பங்களையும் அறிவுறுத்தல் கையேட்டையும் இல: 96, கிருல வீதி கொழும்பு 05 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும். அல்லது www.slpi.lk என்ற இணையத்தளத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித் தினம் 2011 மார்ச் மாதம் 31 ஆம் திகதி ஆகும்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
இராசகாரி கந்தசாமி
(ஓய்வுபெற்ற சாரதி, இ.போ.சபை, காரைநகர்)

அன்னை மடியில்
19.07.1942
ஆண்டவன் அடியில்
27.03.2010



திதி: துவாதசி (16.03.2011)

ஓராண்டு சென்றாலும்
அப்பா உங்கள் பிரிவை மறக்க
முடியாது தினமும் மனக் கண்முன்
நின்று எம்முடன் வாழ்ந்து
கொண்டிருக்கின்றீர்கள்.

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய். (49,20,22)

என்றும் நினைவில்:
குடும்பத்தினர்.

19ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
10 . 05 . 1926

மறைவு
15 . 03 . 1992

அமரர் காசிப்பிள்ளை சபாரத்தினம்

திதி: துவாதசி (16.03.2011)
கலையாத நினைவுகளுடன்
எம்மை விட்டு சென்ற பப்பாவே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

உங்களின் நினைவுகளுடன்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(49,20,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மாவட்ட தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை அனுமதிக்க முடியாது

## நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 16

மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ்ப் பிரதேசங்களில் ஏற்படுத்தப்படும் சிங்களக் குடியேற்றங்களை அனுமதிக்க முடியாது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு ஊத்துச்சேனை, வடமுனை ஆகிய கிராமங்களில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

மட்டக்களப்பு மாவட்டத்தில் 74.5 வீதமான தமிழ் மக்கள் வாழ்கின்றனர். இந்தமக்கள் இன்றுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களித்து அவர்களையே தமது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்து வருகின்றனர். அதனால் இந்தமாவட்டத்தின் பிரதிநிதித்துவத்தைப் பாதிக்கச் செய்யும் வகையிலும் சிங்களப் பிரதிநிதித்துவத்தை இந்தமாவட்டத்தில் உருவாக்கும் வகையிலும் அரசு பல திட்டங்களைத் தீட்டி செயற்படுத்தி வருகின்றது.

அரசு ஊத்துச்சேனை, வடமுனை ஆகிய பகுதிகளில் மதுரு ஓயா நீர்த்தேக்கத் திட்டத்தின் கீழ் தற்போது வெளியிடங்களில் உள்ள 100 சிங்கள மக்களுக்கு ஒருவருக்கு 50 ஏக்கர் என்ற வகையில் 5ஆயிரம் ஏக்கர் காணிகளை வழங்கியுள்ளது. இவ்வாறே இன்னும் 150 சிங்களவர்களுக்கு காணி வழங்குவதுக்கு நடவடிக்கை எடுக்கின்றது.

ஆனால் வளமான காணிகளில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தித் தமிழரின் இன விகிதாசாரத்தைக் குறைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அரச அமைச்சர்கள் ஆதரவு வழங்கியதனாலேயே இதை இவர்களால் மேற்கொள்ள முடிகின்றது.

அரசுடன் இயங்கும் கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் இதனைத் தடுக்க முன்வரவில்லை. நாங்கள் அரசகட்சியைச் சேர்ந்தவர்கள் அல்ல. ஆனாலும் எங்கள் மாவட்டத்தில் இவ்வாறான குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதை அனுமதிக்க முடியாது.

இந்தத் திட்டமிட்ட குடியேற்றம் எங்கள் தமிழ் இனத்துக்கு எதிராக அரசு மேற்கொள்ளும் சதித்திட்டமாகும். இந்த விடயமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவாக அரசின் கவனத்துக்குக் கொண்டுவந்து நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இவ்வாறான நடவடிக்கையில் அரசுடன் இருக்கும் அரசியல்வாதிகள் என்ன செய்துள்ளனர்? இந்தவிடயம் எமது மாவட்டத்தில் நடக்கின்றது என எப்போதாவது மக்களுக்கு சுட்டிக் காட்டினார்களா? அல்லது நடவடிக்கை எடுத்தார்களா? இல்லை. அவர்களால் அரசுக்கு எதிராகப் பேச முடியாது.

எனவே, தமிழ் மக்களுக்காகக் குரல்கொடுத்து அவர்கள் இந்த நாட்டில் சகல உரிமையுடனும் வாழவேண்டும் என்பதற்காக அரசின் அமைச்சுப் பதவிகளுக்கோ, ஆசை வார்த்தைகளுக்கோ, அவர்களால் வழங்கப்படும் கோடிக்கணக்கான நிதிகளுக்கோ சோரம் போகாது கொள்கைக்காக வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரே ஒரு கட்சி எங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகும்.

உங்கள் உறவுகள் இங்கு மாற்றுக் கட்சியில் போட்டியிடலாம். உங்கள் உறவு என்பதற்காகத் தமிழ் மக்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும் வகையிலான நிலையில் தமிழ்மக்களின் சின்னமான வீட்டுச் சின்னத்தை விடுத்து வேறு சின்னங்களுக்கு வாக்களிக்காதீர்கள்.

இன்று சில அரசியல்வாதிகள் நாங்கள் கிழக்கின் தமிழ்க்கட்சி, ஏனையவை வடக்கு மாகாணத்தையும் இணைத்த கட்சிகள். எமது கிழக்கின் தனித்துவத்தைப் பேணவேண்டும் எனக்கூறி உங்கள் முன்நிலையில் வந்துள்ளனர். எங்களைப் பொறுத்தவரையில் வடக்கு, கிழக்கு யாவும் எமது பாரம்பரிய தார்மீகப் பூமியாகும். இலங்கையில் எங்கு எங்கள் தமிழ் இனம் வாழ்ந்தாலும் அவர்கள் எங்கள் உறவுகளே.

எமக்கு வடக்கு, கிழக்கு என்ற பேதம் வேண்டாம். எமது தமிழ் இனம் என்ற பற்றுடன் உறுதியாக இருந்து எமது நோக்கத்தை நாம் நிறைவேற்ற வேண்டும் .

இந்தப் பிரதேசவாதம் எமது நோக்கத்தைச் சிதைத்துவிடும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இதனால் இவர்களின் ஆசை வார்த்தைகளுக்கு அடிமையாகி விடாதீர்கள். எதற்கும் துணிந்து நின்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள்- என்றார்.

# மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுத்திட்ட நிகழ்வு

அம்பாறை,மார்ச்16


அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தங்கவேலாயுதபுரம், தாமரக்குளம், கஞ்சிகுடியாறு ஆகிய மூன்று கிராமங்களிலும் முழுமையாக மீளக்குடியேறாத நிலையில் மக்கள் தங்களது அன்றாடத் தேவைகளை நிறைவேற்றுவதில் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இந்த மக்களது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காகக் கிழக்கு மாகாணசபையுடன் இணைந்து ஸ்நேக் புட்ஸ் லங்கா தனியார் நிறுவனம் நிலக்கடலை உற்பத்தி அபிவிருத்தித் திட்டத்தை அறிமுகப்படுத்தி வருகின்றது.

இது தொடர்பான ஆரம்பத் தெளிவுபடுத்தல் கூட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தங்கவேலாயுதபுரம் பாடசாலையில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (204)

## சுத்தமான குடிதண்ணீர்...



மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மழை வெள்ளத்தினால் பாதித்த குடிதண்ணீக் கிணறுகளை சுத்திகரித்துக் கொடுக்கும் பணியில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் ஈடுபட்டுள்ளனர்.(204)

# பள்ளிவாசல் ஒலிபெருக்கியில் பிரசாரம் செய்தோருக்கு அழைப்பாணை

அம்பாறை,மார்ச் 16

அக்கரைப்பற்று மாநளகர சபைத் தேர்தலில் போட்டியிடும் அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸிற்கு மாத்திரம் வாக்களிக்குமாறு அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனம் என்ற பெயரைப் பயன்படுத்தி அக்கரைப்பற்றுப் பிரதேச பள்ளிவாசல்களின் ஒலிபெருக்கிகள் மூலமாக வேண்டுகோள் விடுத்த மூன்று நபர்களை . நீதிமன்றில் ஆஜராகுமாறு அக்கரைப்பற்று நீதிவான் ரி. சரவணராஜா உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையொன்றினை சமர்ப்பிக்குமாறு அக்கரைப்பற்றுப் பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அக்கரைப்பற்று மாநகர சபைக்கான தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பாகப் போட்டியிடும் முதன்மை வேட்பாளரான அஷ்ஷெய்க் எஸ்.எல்.எம். ஹனீபா (மதனி) மற்றும் முஸ்லிம் காங்கிரஸின் அக்கரைப்பற்று அமைப்பாளர் யூ.எல். உவைஸ் ஆகியோர் மேற்படி சம்பவம் தொடர்பாக அக்கரைப்பற்றுப் பொலிஸில் முறைப்பாடொன்றை செய்திருந்தனர்.

எஸ்.எல்.எம். அலியார், ரி.எஸ். ஆதம்லெப்பை, ஏ.எல். அப்துல் ரஷிட் ஆகிய நபர்கள் அக்கரைப்பற்றுப் பள்ளிவாசல்களின் ஒலிபெருக்கிகள் மூலமாக அக்கரைப்பற்று அனைத்துப்பள்ளி வாசல்கள் சம்மேளனம் எனும் பெயரைப் பயன்படுத்தி ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னரும் தேசிய காங்கிரஸ் கட்சிக்கு வாக்களிக்குமாறு கூறுவதாகவும் பள்ளிவாசல்களில் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்படுவதாகவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

தொழுகைக்கான செல்லும் வாக்காளர்களிடம் தேசிய காங்கிரஸுக்கு வாக்களிக்குமாறு கட்டளையிடப்படுவதாகவும் இதனால் கருத்துச் சுதந்திரம் மீறப்படுவதாகவும் அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளன. (204)

# மஸ்ஜிதுகளின் சொத்துக்களை அரசியலுக்காக துஷ்பிரயோகம் செய்வது வெறுக்கத்தக்க செயல்

## ஜம்இய்யத்துல் உலமா சபை அறிக்கை

அம்பாறை, மார்ச் 16

மஸ்ஜிதுகளின் சொத்துக்களை அரசியலுக்காகத் துஷ்பிரயோகம் செய்வது இஸ்லாமிய ஷரீஆ அனுமதிக்காத - வெறுக்கத்தக்க செயலாகும் என அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா சபை விடுத்த விசேட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் எஸ். எச்.ஆதம்பாவா (மதனி) மற்றும் அஷ்ஷெய்க் அன்ஸார் பழீல் மௌலானா (நளீமி) ஆகியோர் கையொப்பமிட்டு மேற்படி அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:

தேர்தலில் வாக்குக் கேட்பது, வாக்களிப்பது, பிரசாரத்தில் ஈடுபடுவது போன்றவை ஒவ்வொருவரினதும் ஜனநாயக மனித உரிமையாகும்.

ஆனால் அவற்றுக்கு எதிராக வன்முறையைப் பிரயோகிக்கக்கூடாது என்பதை சகல கட்சிப் பொறுப்புதாரிகளும் கவனத்திற் கொண்டு அமைதி நிறைந்த சுமுகமான தேர்தலாக உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி முடிக்க ஒத்துழைப்பு வழங்கவும்.

உள்ளூராட்சித் தேர்தலில் களமிறங்கியுள்ள முஸ்லிம் வேட்பாளர்களும் கட்சித் தலைமைகளும் முக்கிய பொறுப்புதாரிகளும் பரஸ்பரம் தூஷித்தல், தனிமனித கண்ணியத்துக்கும் - கௌரவத்துக்கும் அவதூறு ஏற்படுத்துதல் போன்ற இஸ்லாம் தடைசெய்த மனித உரிமை மீறல்களில் ஈடுபடாமல் இருக்க வேண்டும்.

மேலும், ஜனநாயகத் தன்மையோடும், நாகரிக மனப்பாங்கோடும், நீதி - நியாய, ஒழுக்க விழுமியங்களை இயன்றவரை கடைப்பிடித்தும் தேர்தல் காலங்களில் நடக்க வேண்டும்.

முஸ்லிம் அரசியல் தலைமைகள் தேர்தல் காலங்களில் குறுகிய, சுயலாப அரசியல் நலனுக்காக மோதிக்கொள்வது வெட்கக் கேடானது.

மாற்று மத சமூகங்களுக்கு மத்தியில் எம்மை நாமே கேவலப்படுத்திக் கொள்கின்றமையானது கண்டிக்கத்தக்க ஒரு செயற்பாடாகும்.

இது தொடர்பில் சிவில் சமூக அமைப்புக்கள் விழிப்புடன் செயற்பட்டு உரிய வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகளை அந்தந்த இடங்களில் வழங்க முன்வரவேண்டும்.

பொதுச் சொத்துக்களை, அரச சொத்துகளை தமது சுயநல அரசியல் நலன்களுக்குப் பிரயோகம் செய்வதும் இஸ்லாமிய ஷரீஆ அனுமதிக்காத, வெறுக்கத்தக்க விடயங்களாகும்.

இதுபற்றிய இஸ்லாமிய விழிப்புணர்வை எதிர்வரும் குத்பாப் பிரசங்கங்களில் மேற்கொள்ளுங்கள்- இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு- கிழக்கில் தமிழ்க் கூட்டமைப்பு வெற்றிபெற பிரபா கணேசன் ஆதரவு

கொழும்பு, மார்ச் 16

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறவேண்டும் என்ற கருத்தை நான் வரவேற்கின்றேன். ஏனெனில், அந்த மாகாணங்களில் பெரும்பான்மையாக வாழும் தமிழ் மக்கள் தமது ஒற்றுமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூலமாகவே வெளிப்படுத்த முடியும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

-இவ்வாறு கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

வத்தளை நகர சபைத் தேர்தலில் போட்டியிடும் சந்திரகுமாரை ஆதரித்து சாக்கா தோட்டத்தில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின் பின் ஆளுந்தரப்பு அரசு மூலமாக அபிவிருத்திப்பணிகளை முன்னெடுப்போம்.

வத்தளை நகர சபையில் வாழும் மக்களுக்கு பல அடிப்படை வசதிகள் தேவைப்படுகின்றன. இந்தத் தோட்டத்து மக்கள் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சிச்சபைத் தேர்தல் மூலமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வை எதிர்பார்க்கவில்லை.

மாறாகத் தமது அடிப்படை வசதிகளையே எதிர்பார்க்கின்றார்கள்.

ஒரு சிலர் தென்னிலங்கையில் நடைபெறும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் மூலமாக நாட்டில் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண முயற்சிப்பது அவர்களது அரசியல் முதிர்ச்சியின்மையைக் காட்டுகின்றது. தென்னிலங்கையில் பல பகுதிகளில் குறிப்பாக வத்தளையில் பல அடிப்படை வசதிகளை எமது மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களிடம் தமிழ்த் தேசியத்தைத் தூண்டிவிட்டு வாக்குச் சேகரிக்கும் பணியில் நான் ஈடுபட விரும்பவில்லை.

வடக்கு, கிழக்கில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறவேண்டும் என்ற கருத்தை நான் வரவேற்கின்றேன்.

ஏனெனில், அந்த மாகாணங்களில் பெரும்பான்மையாக வாழும் தமிழ் மக்கள் தமது ஒற்றுமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூலமாகவே வெளிப்படுத்த முடியும் என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை.

வடக்கு, கிழக்கு நிலைவரத்தையும், தென்னிலங்கை நிலைவரத்தையும் ஒரே கோணத்தில் பார்க்கக் கூடிய சூழ்நிலை யுத்தத்திற்குப் பின்னரான இன்றைய காலகட்டத்தில் இல்லை- என்றார்.

## தாய்லாந்து சிறையில் ஈழ அகதிகள்; ஆஸி. அக்கறை

தாய்லாந்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகளுக்கு உதவுவது குறித்து ஆஸ்திரேலியா கவனம் செலுத்தி வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தாய்லாந்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை மீண்டும் தாய்நாட்டுக்கு அனுப்பி வைப்பதற்கு நிதி உதவிகளை வழங்குவது குறித்து ஆஸ்திரேலியா கவனம் செலுத்தி வருகிறது.

190 இலங்கையர்கள் தாய்லாந்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தாய்லாந்து குடிவரவு குடியகழ்வுச் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### சுவாமி வீதியுலா...



கொழும்பு, கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் நான்காம் நாள் திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றபோது சுவாமி வீதியுலா வருகின்றார். (204)

## இளைஞர்களின் கல்விக்கு முதலிடுவதன் மூலம் வறுமையையும் வேற்றுமையையும் தடுக்கலாம்

கொழும்பு,மார்ச் 16

இளைஞர், யுவதிகளின் கல்வி மற்றும் பயிற்சிக்காக அதிக முதலீட்டை செய்வதன் மூலம் வறுமையையும் வேற்றுமையையும் தடுக்க முடியும் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

யுனிசெவ் நிறுவனத்தால் 'இளைஞர்கள் - இடைவெளி அடங்கிய யுகம்' என்னும் நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில்:

எந்வொரு நாட்டிலும் பிரதான சக்தி இளைஞர்களின் சக்தியென நாம் நம்புகிறோம். இளைஞர் சமுதாயத்தை சகல இனங்களும் முதுகெலும்பாக வர்ணிப்பது முற்றிலும் சரியானது. ஏதேனும் ஒரு காரணத்தால் அது பலவீனமடைந்தால் அதனால் அனைத்து இனங்களும் வீழ்ச்சியடையும்.

இளைஞர் பருவம் வாழ்க்கையில் மிக முக்கியமானதாகும். வறுமையினாலும் முறையான கல்வி அறிவைப் பெற முடியாமையினாலும் நிராகரிக்கப்பட்ட இளைஞர்கள் அந்த வயதுக் காலக்கட்டத்துக்குரிய இடைநிலைக் கல்வியைப் பெறுவது மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. அவர்கள் உழைப்பு சுரண்டலுக்கும் வீட்டுப் பணிகளுக்கும் ஈடுபடுத்தப்படுகின்றனர்- என்றார். (204)

## அமைச்சருக்கு சார்பானோருக்கு நிதியுதவி; தேர்தல் நேரத்தில் இது சட்டவிரோதமானது

### குற்றம் சாட்டுகிறது மு.கா.

கொழும்பு, மார்ச் 16

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் வன்னி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் ஒருவரின் ஆதரவாளர்களூடாக அந்த அமைச்சருக்குச் சார்பானவர்களுக்கு மட்டும் 'வேலைக்கு உரிய பணம்' என்ற வகையில் நிதியுதவி வழங்கப்படும் என வவுனியா, மன்னார் மாவட்டங்களில் வாக்காளர்களுக்குக் கூறப்படுகிறது.

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

இதுபற்றி வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களின் அரச அதிபர்களுக்கு முறையிடத் தீர்மானித்துள்ளோம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் எம்.ரீ.ஹசனலி, வன்னி மாவட்ட நாடாளுமன்ற ஊறுப்பினர் முத்தலிப் பாவா பாரூக் ஆகியோர் தெரிவித்தனர்.

பிரஸ்தாப அமைச்சருக்குச் சார்பான வேட்பாளர்களுக்கு தலா பத்து லட்சம் ரூபா இதற்காக வழங்கப்படும் என்றும் அத்தொகை குறிப்பிட்ட அமைச்சருக்கு ஆதரவான வாக்காளர்களுக்கு மட்டுமே நாளொன்றுக்கு ஐந்நூறு ரூபா வீதம் பதினான்கு தினங்களுக்கு கணிப்பீடு செய்யப்பட்டு அவர்களது வங்கிக்கணக்கில் வைப்பீடு செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி வவுனியா, சின்னச்சிப்பிக்குளம் பள்ளிவாசலில் ஒலிபெருக்கிமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என செட்டிக்குளம் பிரதேசசபைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மீள் எழுச்சித் திட்டத்தின்கீழ் 'வேலைக்கு உரிய பணம்' என்ற அடிப்படையில் சிரமதானம் போன்ற பணிக்கு இந்தப்பணம் குறிப்பிட்ட அமைச்சருக்குச் சார்பான வேட்பாளர்கள் மூலம் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் சின்னச் சிப்பிக்குளம், மாங்குளம், சூடுவெந்தபுளவு, பாவற்குளம் ஆகிய கிராமங்களிலும், அவற்றை அண்மித்த தமிழ்க் கிராமங்களிலும், மன்னார் மாவட்டத்தின் சில கிராமங்களிலும் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இதுபற்றி செட்டிக்குளம் பிரதேச செயலாளரிடம் கேட்கப்பட்டபோது, தமக்கு இதுபற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலத்தில் இவ்வாறு நடந்துகொள்வது சட்டவிரோதமான செயல் எனக் குறிப்பிட்டு, இதுபற்றி உரிய ஆதாரங்களுடன் வவுனியா, மன்னார் மாவட்ட செயலாளர்களிடம் முறையிடுவதற்குத் தீர்மானித்துள்ளார் என மு.கா. செயலாளர் நாயகம் எம்.ரீ.ஹசனலி தெரிவித்துள்ளார். (சி)

## தேசிய நூதன சாலையிலுள்ள மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு

### அமைச்சர் வாசு உறுதி

தேசிய நூதனசாலையில் உள்ள மொழிப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படவுள்ளது என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார உறுதியளித்துள்ளார்.

அவர் நேற்றுமுன்தினம் முற்பகல் தேசிய நூதனசாலைக்கு சென்றிருந்தார்.

கடந்த காலங்களில் நூதன சாலைக்குச் சென்ற தமிழ் மக்களிடம் இருந்து கிடைத்த முறைப் பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காகவே அவர் அங்கு பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

மாதமொன்றுக்கு நூதனசாலையில் உள்ள அரும்பொருள்களைக் காண்பதற்காக 25 தொடக்கம் 30 சதவீத தமிழ் மக்கள் செல்கின்றனர். இதன்போது அரும்பொருள்கள் தொடர்பான விளக்கங்கள் தமிழில் இல்லாமை குறித்து அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர்.

அரும்பொருள்கள் தொடர்பான விவரங்கள் தெரிந்த அதிகாரிகள் அங்கு இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து உரிய முறையில் விரைவில் தீர்வு காணப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்த வாவிகள் நிர்மாணம் அவசியம்

கொழும்பு,மார்ச் 16

சிறிய மழைக்கும் வெள்ளக் காடாய் மாறிவரும் கொழும்பு நகரில் அதனைக் கட்டுப்படுத்த வாவிகள் அமைக்கப்பட்டு வெள்ள நீர் அந்த வாவிகளில் சென்று தேங்குவதற்கான வாய்க்கால் வசதிகள் அமைக்கப்பட வேண்டியது கட்டாயமென பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படை அதிகாரிகளைக் கொண்டு நடத்தப்பட்ட ஆய்வொன்றின் மூலம் இந்த வாவிகளின் அவசியம் உணரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இந்த ஆய்வின்போது மழைநீரை எடுத்துச் செல்லும் ஜலதாரை களின் கதவுகள் பெருமளவில் அடைக்கப்பட்டுக் கிடப்பதாகவும் பேரவாவியையும் களனி கங்கையையும் இணைக்கும் நிலத்தடிக் குழாய்த் தொகுதி முற்றாக அடைப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. கொழும்பு நகரை வெள்ளத்திலிருந்து பாதுகாக்க ஜலதாரைகள், கால்வாய்கள் போன்றவை மறுசீரமைக்கப்பட வேண்டுமெனவும் அதற்கு அரசு, எதிர்க்கட்சி, சிவில் அமைப்புக்கள், பொதுமக்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு அவசியமெனவும் பாதுகாப்புச் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (204-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விச்சாலைக் காட்சிகள்...



யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் மெய்வன்மைப் போட்டியில் கலந்து கொண்ட விருந்தினர்கள் அமர்ந்திருக்கின்றனர்.



கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியின்போது விருந்தினர்கள் வரவேற்கப்படுகின்றனர். (207)



சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப்போட்டியில் விருந்தினர்கள் அணிவகுப்பு மரியாதையை ஏற்கின்றனர். (313)



காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தின் இல்லமெய்வன்மைப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவனுக்குக் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள வடக்கு மாகாணப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.சிவநாதன் கேடயம் வழங்குகின்றார். (250)



புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் இடம்பெற்ற மாணவிகளின் உடற்பயிற்சி [illegible]

# எழுத்தாளனின் ஆளுமையை விருத்திசெய்ய பத்திரிகைகளும் நூல்களும் களம் அமைக்கின்றன

யாழ்ப்பாணம், மார்ச் 16

ஓர் எழுத்தாளனின் ஆளுமையை விருத்தி செய்வதற்குப் பத்திரிகைகளும் நூல் வெளியீடுகளும் களம் அமைத்துக் கொடுக்கின்றன என்று யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா தெரிவித்தார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ''இதோ என் முகவரி'' கவிதைத் தொகுப்பு நூல் அறிமுக விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

ஓர் எழுத்தாளன் பத்திரிகைகள் மூலமாகவோ அல்லது நூல் வெளியீடுகள் மூலமாகவோ சமூகத்துக்குப் பயனுள்ள தகவல்களை தனது எழுத்தாற்றல்மூலம் வெளிக்கொணர வேண்டியது அவசியமாகும். தகவல்களை சுருக்கமாக அனைவரும் விளங்கிக்கொள்ளக் கூடிய வகையில் எழுத வேண்டும்.

தற்போது பெருகிவரும் நவீன காலத்துக்கு இளம் சமுதாயத்தினர் உள்வாங்கப்பட்டுள்ளதால் பத்திரிகைகள், நூல்களை வாசிக்கும் ஆற்றல் குறைந்து விட்டது.

இலைமறை காய்களாக இருக்கும் எழுத்தாளர்களை வெளிப்படுத்துவதற்குப் பத்திரிகைகள் மகத்தான சேவைகளைச் செய்கின்றன. எழுத்தாளன் தனது உண்மைப் பெயரை வெளிப்படுத்த முடியாத சூழல் இருக்கின்றபோதும் சமூகத்துக்குத் தனது எழுத்துவன்மை பயனளிக்கின்றது என்பதை நினைத்துப் பெருமிதம் அடையவேண்டும் - என்றார்.

நவாலி ஹேமலதா ஞாபகார்த்த நிதியத்தின் ஆதரவில் செ. ரமேஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் சி.சிவனேஸ்வரன், ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஓய்வு பெற்ற அதிபர் க. சிவாஜி, நவாலி மகாவித்தியாலய அதிபர் இரா.வசந்தகுமார், வலிகாமம் வலய தொழில்நுட்பத் தகவல் தொடர்பாடல் உதவிக்கல்விப் பணிப்பாளர் து.லெனின் அறிவழகன், மானிப்பாய் ப.நோ.கூ.சங்கத்தின் பொதுமுகாமையாளர் சு.இராசேந்திரம், மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ. சங்கப் பொது முகாமையாளர் க. சற்குணலிங்கம் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், சமூக சேவையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-313)

# சுயதொழிலில் இளம் சமூகத்தினர் ஊக்குவிக்கப்பட வேண்டும்

யாழ்ப்பாணம்,மார்ச் 16

தற்கால இளைய சமுதாயத்தினர் சொந்தத் தொழில்களை மேற்கொள்வதற்கான திறமை கொண்டவர்கள். இவர்கள் சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கு ஊக்கவிக்கப்பட வேண்டியவர்கள் என்று ஐ.ஐ.எஸ். இன் பிரதம நிறைவேற்று அதிகாரி கு.விக்னேஸ் தெரிவித்தார்.

ஐ.ஐ.எஸ். இன் 15 ஆவது நிறுவனதினமும் பட்டமளிப்பு விழாவும் அண்மையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

கடந்த 15 ஆண்டுகால வரலாற்றில் குடாநாட்டு மாணவர்களின் உயர் கல்வி அபிவிருத்துக்கு ஐ.ஐ.எஸ். தனது பங்களிப்பை வழங்கியுள்ளது. எனினும் பட்டம் பெற்ற மாணவர்களுக்குத் தொழில் வாய்ப்புக்கள் அரிதாகவே கிடைக்கின்றன. இதனைப்பற்றி மாணவர்கள் சிந்திக்க வேண்டும். தொழில் வாய்ப்பைத் தாங்களாகவே தேடிக்கொள்ளத் தமது அறிவு வளத்தினைப் பயன்படுத்த வேண்டியது அவசியமாகும்.

இளைஞர்களிடம்தான் புதிதாகக் கண்டுபிடிக்கும் ஆர்வமும் ஆற்றலும் உள்ளன. தமது தேசத்தின் எதிர்காலத்தைச் சிறந்ததாக மாற்றுவதற்கான பொறுப்பும் இவர்களிடமே உள்ளது.

இதற்காக அவர்களை வெளி உலகில் நம்பிக்கையுடன் பிரவேசிப்பதற்கான ஊக்குவிப்புக்களை அனைவரும் வழங்க வேண்டும்.

ஐ.ஐ.எஸ். சிற்றி பல்கலைக்கழகமானது ஒவ்வொரு பாடநெறிகளை அறிமுகப்படுத்தும் போதும் தொழில் வாய்ப்பைப் பெறுவதற்கோ உயர் படிப்பை மேற்கொள்வதற்கோ உதவும் வகையில் தனது பாடத்திட்டங்களை அறிமுகம் செய்கின்றது. அதனை மாணவர்கள் பயனுள்ள முறையில் வளமாக்கிக் கொள்ள வேண்டும் - என்றார். (ம-313)

# சமூகத்தைக் கட்டி எழுப்புவதற்கு பெண்களின் பங்கும் அவசியம் தேவை

யாழ்ப்பாணம், மார்ச் 16

சிறந்த சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்குப் பெண்களின் பங்கும் அவசியம்தேவை என்று தெரிவித்தார் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் திருமதி சறோஜா சிவசந்திரன்.

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டிய நிகழ்வுகள் நல்லூர் தியாகி அறக் கொடை நிலையத்தில் இடம் பெற்றன.

இதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றுகையில் -

வாழ்க்கை போராட்டத்தின் மத்தியில்தான் அமைகிறது. அது பெண்களைப் பொறுத்த வரையில் கூடுதலான பங்கு வகிக்கிறது. வாழ்வாதார வசதிகள், குடும்பப்பொறுப்புக்கள்? சில குடும்பங்களில் பெண்களின் தலைமைத்துவம் போன்றன பெண்களே பங்கெடுக்கும் வகையில் அமைந்துள்ளன.

இந்த ஆண்டு நூறாவது மகளிர் தினமாகக் கொண்டாடப் [illegible] ஆண்டும் ஒரு மையப் பொருளை வைத்தே அனுஷ்டிக்கப்படும்.

அந்தவகையில் இந்த ஆண்டு ''பெண்களின் கல்வி, பயிற்சி, தொழில்நுட்ப வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் சம வாய்ப்பு மற்றும் பெண்கள் கௌரவமாகத் தொழில் வாய்ப்பைப் பெறுவதற்கான வழிமுறைகளும்'' என்னும் பொருளிலே அனுஷ்டிக்கப்படுகின்றது. இன்று பல குடும்பங்கள் போரினால் பாதிக்கப்பட்டு பெரும் இழப்புகளைச் சந்தித்துள்ளன.

இந்த நிலையில் பெண்களின் தலைமைத்துவமே காணப்படுகிறது.

போரினால் பாதிக்கப்பட்டு விதவையானோரின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்பவர்கள் யார் உள்ளனர், போரால் பாதிக்கப்பட்டு ஊனமானவர்களின் எதிர்காலத்தில் ஒவ்வொருவரும் அக்கறை கொள்ளவேண்டும்.

அவர்களுக்குச் சுய தொழில் இல்லை, பொருளாதார வசதிகள் இல்லை, அவர்கள் முன்னேற்றம் அற்ற நிலையில் காணப்படுகின்றனர்.

சர்வதேச மகளிர் தினம் ஒரு நாள் கொண்டாடப்படுவதில் அர்த்த மில்லை. சமூக விழுமியங்களைத் தளர்த்தி எறிந்து நீரோட்டம் போல மிகவும் வேகமாகப் பாய்ச்சல் நிலையிலே செல்லுதல் வேண்டும்.

பெண்கள் சுயதொழில் என்று செய்யும்போது அதனைச் சந்தைப் படுத்தல், முகாமைத்துவ வாய்ப்பூட்டல் போன்ற பல படிகளில் பெண்களின் நிலை உள்ளது. முகாமைத்துவம் முன்னேற்றம் அடைந்துள்ள வகையில் பெண்களின் பங்களிப்பு அரிதாகவே உள்ளது.

இன்று பல பிரதேசங்களிலும் பெண்களுக்கான சுயதொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது. கடற்றொழிலாளர் பயிற்சி, உணவு பதப்படுத்தல் பயிற்சி போன்ற பல பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன அதனை உரிய வகையில் தேடி அறிந்து பயிற்சிபெற வேண்டியது அவசியம்.

பொருளாதார விருத்திக்கும் வருமானத்துக்கும் ஏற்ப பொருளாதாரத்தை மேம்படுத்தி நெருக்கடியான வாழ்வில் இருந்து விடுபடப் பெண்கள் முன்வர வேண்டும் - என்றார். (ம-3121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
ஒன்றுக்கு மேற்பட்டவர்களின் உதவிகளைப் பெறும் நாள். அரசியல்வாதிகளுக்கு அலைச்சல் அதிகரிக்கும். பொறுப்பான வேலை ஒன்றை ஏற்றுச் செய்யலாம். சக ஊழியர்களுடன் கருத்துமோதல்கள் பிரச்சினைகள் உருவாகும். உறவினர் ஒருவரை உபசரிக்க கணிசமான பணத்தைச் செலவிடலாம். பயணங்கள் உற்சாகம் தருவதாக அமையும்.

**இடபம்:**
கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். தாய் வழி உறவுகளால் ஆதாயம் கிடைக்கலாம். நண்பர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு செல்வாக்கு அதிகரிக்கும். தொடங்கிய வேலைகள் துளிர் விட்டு வளரும் நாள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். உங்களை பயன்படுத்தி நண்பர்கள் சிலர் காரியம் சாதிக்கலாம்.

**மிதுனம்:**
மாற்று மதத்தினர் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். வழக்கமாகச் செய்யும் வேலை ஒன்றை இன்று செய்யமுடியாமல் போகலாம். பேராசைக ளைத் தவிர்க்க வேண்டும். ஆரோக்கியக் குறைவுகளால் அவதிப்படலாம். பிள்ளைகள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். சிலரை பரிகாசம் செய்து பேசுவீர்கள்.

**கடகம்:**
சந்தோஷமான செய்திகளைக் கேட்கும் நாள். எதிர்ப்புகள், போட்டிகளைத் தவிர்க்க எதிலும் எச்சரிக்கை அவசியம். சொந்த பந்தங்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். பெண்கள் வழியில் திடீர் செலவுகள் ஏற்படலாம். பல மணி நேரமாகும் என நினைத்த காரியம் ஒன்று சுலபமாக முடிவுக்கு வரும். திடீர் பணவரவுகளைப் பெறலாம்.

**சிங்கம்:**
விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும் நாள். வெளியுலகத் தொடர்புகளை அதிகரித்துக் கொள்வீர்கள். மற்றவர்கள் மத்தியில் பகட்டாக நடந்து கொள்ள முற்படுவீர்கள். சிலருக்கு கடன் கொடுக்கலாம் அல்லது சிலரிடம் கடன் வாங்கலாம். வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி:**
புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கலாம். கடன் பிரச்சினை ஒன்றை தீர்த்து வைக்க முற்படுவீர்கள். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். உடன் பிறப்புக்கள் உங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவர். மனைவி உடல் நலன் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். நீண்ட தூரப் பயணங்கள் செல்லலாம்.

**துலாம்:**
நாள் முழுவதும் பரபரப்பாக, உற்சாகமாகச் செயற்படுவீர்கள். தொழில் கூட்டாளிகளிடம் அனுசரணை அவசியம். குடும்ப பிரச்சினை ஒன்றை பெரிய மனிதர்களின் உதவியோடு தீர்த்துக் கொள்வீர்கள். புதிய வாகனங்கள் அல்லது பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் கைகூடி வரும். தொழில் ரீதியாக வரவேண்டிய பணவரவு ஒன்று வரும்.

**விருச்சிகம்:**
உங்களுக்கு வேண்டிய காரியத்தைச் சாதிப்பதற்காக மற்றொருவரை நச்சரிப்பீர்கள். சிலரிடம் நீண்ட நேரம் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். காலையில் வந்த பணவரவு ஒன்றுக்கு மாலையில் செலவு ஏற்படலாம். கடந்த கால இழப்பு ஒன்றை ஈடுகட்டும் வகையிலான சூழ்நிலை உருவாகும். உறவினர்கள் வகையில் அன்புத் தொல்லையுண்டு. சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம்.


**தனுசு:**
மற்றவர்கள் வேலைகளுக்காக அலைய நேரிடலாம். சில பொருள்களை கைமறதியாக வைத்து விட்டு தேடலாம். சிலர் உங்களிடம் உதவி கேட்டு தொந்தரவு கொடுக்கலாம்.
ஆடம்பரச் செலவுகளை தவிர்க்கவும். எதிர்பார்ப்பு ஒன்றில் ஏமாற்றம் ஏற்படும். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம்.

**மகரம்:**
புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும் நாள். தொழிலில் எதிர்பாராத மாற்றங்களைச் சந்திக்கலாம். அவசர செலவு ஒன்றை சமாளிக்க பொன், பொருள்களை அடகு வைக்கலாம். வெளியூர் பயணங்கள் செல்லும் சிலருக்கு உதவிகரமாக இருப்பீர்கள். மாலை நேரத்தில் உறவினர் அல்லது நண்பர் ஒருவரை எதிர்பாராமல் சந்திக்கலாம்

**கும்பம்:**
பெற்றோர் தொடர்பான விடயங்களில் வீண் பிடிவாதங்களைத் தவிர்க்க வேண்டும். திட்டமிட்ட காரியங்களை மட்டுமின்றி, திட்டமிடாத சில பணிகளையும் செய்யலாம். பெண்கள் வகையில் அனுகூலமான உதவி கிடைக்கும். உறவினர் ஒருவர் கேட்ட உதவியை செய்து பெருமை அடைவீர்கள். நண்பர்கள் சிலர் உங்களுக்காகச் செலவு செய்யலாம்.

**மீனம்:**
மன அமைதி குறையாமல் இருக்க எதிலும் பொறுமையுடன் செயற்பட வேண்டும். சகோதரிகள் வழியில் உருவான பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். மாமன், மைத்துனர்கள் மூலம் மறக்க முடியாத உதவிகள் கிடைக்கலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். திடீர் சந்திப்பு நிகழும்.

# தவறான கற்றலுக்கான வழிகாட்டல்




யாழ்ப்பாணச் சமூகம் கல்விக்கு முக்கியத்துவமளிக்கும் சமூகம். ''பிச்சை புகினும் கற்கை நன்றே'' என்ற முதுமொழிக்கு உதாரணம் காட்டுவதாயிருந்தால் யாழ்ப்பாணச் சமூகத்தைக் காட்டலாம்.

மின்சாரம் இல்லாத காலத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வீதி விளக்கின் கீழ் அமர்ந்திருந்து கல்வி கற்ற மாணவனின் புகைப்படம் சர்வதேச ரீதியில் பேசப்பட்ட ஒரு புகைப்படம்.

யாழ்ப்பாணத்தவர்கள் கல்வியின் மீது காட்டும் அதீத அக்கறையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி பணம் சம்பாதிப்பதிலும் பலர் ஈடுபட்டுள்ளனர்.

அறிவை விற்பனை செய்வதில் தவறு எதுவுமில்லை. ஆனால் கல்வியின் மீது மக்க ளுக்கு உள்ள ஆர்வத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தித் தவறான முறையில் வருங்காலச் சமுதாயத்தை வழி நடத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஒரு சில கல்வி சார்ந்தோர், ஒன்றுக்கும் உதவாத தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களைப் போட்டு வாட்டி எடுப்பது அனைவரும் அறிந்த விடயம்.

எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிக்கும் க.பொ.த. (சா/த), உயர்தரப் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களை விட தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கே (பச்சைப் பாலர்களுக்கு) யாழ்ப்பாணத்துப் பெற்றோர் அதிக தொந்தரவு கொடுக்கின்றனர்.

தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரை பல்வேறு பயிற்சிகளும், மாதிரி வினாத்தாள்களும் அச்சிட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

பெற்றோரும் இந்தப் பயிற்சிப் புத்தகங்களையும், மாதிரி வினாத் தாள்களையும் பணம் கொடுத்து வாங்கித் தமது பிள்ளைகளுக்குப் போதித்து வருகின்றனர்.

பல குடும்பங்கள் இந்தப் பயிற்சிப் புத்தகங்களைக்கொள்வனவு செய்வதற்கெனக் கணிசமான தொகையைச் செலவிட்டு வருகின்றன.

இவ்வாறு அச்சிட்டு விற்பனை செய்யப்படும் நூல்கள் பலவற்றில் பிழையான தகவல்கள், விளக்கங்கள் காணப்படுகின்றன.

ந. சந்திரகுமார் என்ற ஆசிரியரின் நூலே கூடுதலாக விற்பனை செய்யப்படுகின்றது. ஆனால் இவரது நூலிலேயே கூடுதலான தவறுகள் காணப்படுகின்றன.

இவரது நூலில் கணித பாடத்தில் இடம்பெற்ற பிழையான விளக்கமொன்றை கணிதபாட ஆசிரிய ஆலோசகர் ஒருவர் அண்மையில் உதயனில் சுட்டிக்காட்டியிருந்தார்.

ந. சந்திரகுமாரின் நூலில் காணப்படும் ஏனைய தவறுகளை இவர் சுட்டிக்காட்டவில்லை.

அவரது நூல்களில் காணப்படும் ஏனைய தவறுகளை இங்கே சுருக்கமாகப் பார்ப்போம். இங்கே சந்திரகுமாரின் நூல்களில் காணப்படும் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதன் நோக்கம் ஏனைய ஆசிரியர்களின் நூல்களின் விற்பனையை அதிகரிப்பதற்காக என்று தயவு செய்து யாரும் தவறாக எடைபோட்டு விட வேண்டாம்.

### தரம் ஒன்று சுற்றாடல்

பக்கம் 16 - மிக்ஸியின் படத்தைப்போட்டு அதற்கு மிளகாய் அரைப்பான் என விளக்கமளித்துள்ளார்.

இது எந்த அளவுக்குச் சரி என்று யாராவது தெரிந்தவர்கள் தான் கூறவேண்டும்.

பக்கம் 20 - Afternoon என்பதற்கு மதியம் என்று விள்க்கமளித்துள்ளார் Afternoon என்பதற்கு பிற்பகல் என்பதே சரியான பதம். மதியம் என்றால் noon என்றே பொருள்படும்.

பக்கம் 29 - marry Christmas என்று உள்ளது. merry Christmas என்பதே சரி.

பக்கம் 70 - குப்பைத் தொட்டியின் படத்தின் கீழ் dustpin என்று குறிப்பிடப்பட்டுள்ளது. dustbin என்பதே சரி. pin என்றால் ஊசி.

பக்கம் 72 - மகிழ்ச்சி - சந்தோசம் என இரு புகைப் படங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. உண்மையில் இரண்டும் ஒரே அர்த்தத்தையே குறிக்கின்றன. சந்தோஷம் என்பது வடமொழிச் சொல். மகிழ்ச்சி என்பது தமிழ்ச்சொல்.

### அடுத்து தமிழ் மொழித்திறன் விருத்தி தரம் ஒன்று செயல் நூல் புத்தம் புதிய பாடத்திட்டம் 2009


புதிய பாடத் திட்டம் என்பது சரி. புத்தம் புதிய பாடத் திட்டம் என்றால் என்ன? கல்வித் திணைக்கள அதிகாரிகளைத்தான் கேட்க வேண்டும்.

இதில் பக்கம் 33 இல் புதிர்களைச் செவிமடுத்துத் துலங்குதல் வினா 6 இல் ஒரு பெட்டியினுள் 10 மாபிள்குண்டுகள் உண்டு. 15 மாபிள் குண்டுகள் எத்தனை பெட்டியினுள் இருக்கும்? விடை 150

வினா 8 - ஆட்டுக்குட்டிக்கு எத்தனை கால்? விடை - ஆட்டுக்கு 4கால், குட்டிக்கு 4 கால் = 8கால். இதற்குப்பெயர் புதிரா?


அடுத்து 50 ஆம் பக்கத்தில் இடம்பெற்றுள்ள சித்திரக் கதை ஒன்றில் தமது பிணக்கைத் தீர்ப்பதற்காக கிராமத்தவர் இருவர் பஞ்சாயத்துத் தலைவரிடம் செல்வதாக சித்திரக் கதை கூறுகிறது.

இலங்கையில் எங்காவது ''பஞ்சாயத்து'' நிர்வாகம் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா? பஞ்சாயத்து என்றால் என்னவென்று பிள்ளைக்குப்புரிய வைக்கவேண்டும். இது இந்திய நூல்களின் மறுபதிப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 2 — சுற்றாடல் சார் செயற்பாடுகள்




**யாழ். குடாநாட்டு மக்கள் கல்வியில் அதீத அக்கறை கொண்டவர்கள்தான். இதற்காக வெளியிடப்படும் புத்தகங்கள் எண்ணில் அடங்காதவை. அதுவும் ஆரம்பப் பருவ மாணவர்களுக்காகவே அதிகளவில் புத்தங்கள் வெளிவருகின்றன. இவை தரமானவையா என்று ஆராய வேண்டியது கல்வியியலாளர்களின் கடமை.**

பக்கம் 101 இல் Is it a Moon - அது ஒரு சந்திரனா என்று உள்ளது. அப்படியானால் சந்திரன்கள் பல உள்ளனவா என்று ஒரு குழந்தை கேட்டால் சந்திரகுமார்தான் பதிலளிக்க வேண்டும்.

பக்கம் 108 இல் mason என்பது meason என்று அச்சிடப்பட்டுள்ளது. இதேபோல் He is a brick என உள்ளது.

தமிழ் மொழி தரம் இரண்டு
இலகு தமிழ் மொழி

பக்கம் 33 இல்
குழாய் நீர் water supply
நோய் - desease
பக்கம் 37 - மாடு - cattle
பக்கம் 38 - cenima
பக்கம் 45 - friend - நண்பி

குழாய் நீர் என்றால் waten supply என்பது பொருத்தமற்றது. water supply என்றால் நீர் விநியோகம் என்றே பொருள்.

மாடு என்றால் cow அல்லது ox என குறிப்பிட்டிருக்கலாம். cattle என்றால் மந்தை. cenima என்பது cinema என்று வரும். friend என்பது பொதுவான சொல் ஆண்பால் பெண் பால் இரண்டையும் குறிக்கும். நோய் என்றால் disease.

பக்கம் 71
ஒருமை - பன்மை
அது - அவைகள்
இது - இவைகள்

நாங்கள் படித்த காலத்தில் அது அவை, இது இவை என்றுதான் தமிழ்ப் பண்டிதர்கள் எமக்குப் போதித்தனர்.

புத்தம் புதிய பாடத் திட்டத்தில் அவைகள் இவைகள் என்ற சொற்கள் ஒரு வேளை அறிமுகம் செய்யப்பட்டுள்ளதோ தெரியாது.

பக்கம் 83 புதிர்- ஓர் ஆட்டுக்கு 3 கால்
இரண்டு ஆட்டுக்கு எத்தனை கால்கள்?
விடை - 7 கால்.

இது எனக்குப் புரியாத புதிராக உள்ளது. யாராவது கணித நிபுணர்கள் பதில் சரியென ஏற்றுக் கொண்டால் நாங்களும் ஏற்றுக் கொள்ளலாம்.

அடுத்து தரம் இரண்டு சுற்றாடல்
பக்கம் 22- பிராணிகள் பற்றிய தகவல்.

*காகம் - எனது பெயர் காகம் எனது உறவினர்கள் அண்டங் காகம், அரிசிக் காகம், மலைக்காகம், நீர்க் காகம். நான் மரங்களில் கூடு கட்டி வாழ்வேன். எனது கூட்டில் குயில் முட்டையிடும்.*

மலைக்காகம் என்றால் என்ன?. மலையில் வாழும் காகமா? அடுத்து நீர்க் காகமும் மரத்திலா கூடு கட்டி முட்டையிடும் என ஒரு சிறு பிள்ளை கேட்டால்? என்ன பதிலைக் கூறமுடியும்.

பக்கம் 5 - sand - துக்கம் என குறிப்பிடப் பட்டுள்ளது. sand என்றால் மணல். துக்கம் என்றால் sad.

பக்கம் 108 -
தாகம் - Thirty, கோபம் - Hungry
தாகம் என்றால் Thirsty. Hungry என்றால் பசி. கோபம் என்றால் Angry.

அடுத்தது மிக மோசமான தவறு. May I help you என்பதன் தமிழாக்கம் உங்களால் எனக்கு உதவ முடியுமா என்று தமிழ்ப்படுத்தியுள்ளார். May I help you என்பதன் பொருள் என்னவென்று தெரியாவிட்டால் கொழும்பில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்கு ஒரு முறை விஜயம் செய்தால் அறிந்து கொள்ளலாம்.

இதே கேள்வியை தரம் ஐந்து புதிய ஒரு கல்வி புலமை வழிகாட்டியில் 153 ஆம் பக்கத்தில் பார்க்கலாம்.

இங்கு Can I help you என்று கேட்டு, உங்களால் உதவமுடியுமா? என்று தமிழில் மொழி பெயர்த்துள்ளார். ஒரே தவறு இரண்டு இடத்தில்.

தரம் இரண்டு சுற்றாடல் புத்தகத்தின் 109 ஆம் பக்கத்தில் மறுபடியும் இதே தவறு இடம்பெற்றுள்ளது.

I am hungry - நான் கோபமாக இருக்கிறேன்.
I am Thirty- நான் தாகமாக இருக்கிறேன்.

அடுத்து தரம் ஐந்து புதிய ஒரு கல்விப் புலமை வழிகாட்டி பக்கம் 154

| ஆங்கிலம் | தமிழ் |
|---|---|
| I Can hear you | என்னால் உங்களை கேட்கமுடியும் |
| I Can come you now | இப்போது என்னால் வர முடியும் |
| Who is shouting | யார் சத்தமிட்டது |

பக்கம் 153 - I am coming to the class - நான் வகுப்பறைக்குச் செல்கிறேன்.

இங்கு கூறப்பட்டுள்ள வாக்கியங்கள் எவ்வளவு தூரம் சரியானவையென ஆங்கில விற்பன்னர்கள் தான் கூறவேண்டும்.

**ந. பரமேஸ்வரன்**

தரம் ஒன்று, இரண்டு நூல்களில் விட்ட சில தவறுகளை (Thirsty போன்றவற்றை) தரம் ஐந்து நூலில் ஆசிரியர் திருத்தியுள்ளார் போல் தெரிகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து கற்சுமி என்ற நிறுவனம் வெளியிட்டுள்ள பயிற்சிப் புத்தகத்தில் வீர சிவாஜியின் சித்திரக்கதை தொடராக இடம்பெற்றுள்ளது. வீர சிவாஜி என்ற மராட்டிய மன்னருக்கும் இலங்கைக்கும் என்ன தொடர்பு என்று எனக்குப் புரியவில்லை.

அண்டை நாட்டின் வரலாறு பற்றித் தெரிந்து கொள்ளக் கூடாதா என்று யாராவது கேட்டால் ஏற்றுக் கொள்ளலாம்.

ந.சந்திரகுமார் COE (Merit), Sp.Tnd. in Agri. (Gold medal) B.Ed. in Sc.(Hons.) Dip.in Th.

இவ்வளவு பட்டங்களையும் கொண்டுள்ள ஜனாதிபதி விருது பெற்ற ஒருவரைப் பற்றி எது வித பட்டமும் பெறாத ஒருவர் விமர்சிக்கலாமா என்ற கேள்வி எனக்குள் தானாகவே எழுகிறது.

இங்கு கூறப்பட்ட விடயங்கள் தொடர்பான கல்வியியலாளர்களின் கருத்துக்களும் விமர்சனங்களும் வரவேற்கப்படுகின்றன.

# அற்புதங்களின் ஆதாரம்



ஓர் ஊரை அண்மித்ததாய் ஓர் ஆறு ஓடிக்கொண்டு இருந்தது. அந்த ஆற்றுக்கு அடுத்த கரையில் ஒரு காடு. அந்தக் காட்டில் ஓர் ஆச்சிரமம் இருந்தது. அங்கு ஒரு குரு வசித்து வந்தார்.

அந்தக் கிராமத்தில் பால் விற்பனை செய்து கொண்டிருந்த ஓர் அம்மா ஆச்சிரமத்தில் இருக்கும் குருவுக்குத் தினமும் பால் கொண்டு போய்க் கொடுத்து வந்தார்.

ஒரு சமயம் அந்த ஆற்றில் வெள்ளம் அளவுக்கு அதிகமாக ஓடிக்கொண்டிருந்தது. அங்கு படகுப் போக்குவரத்து ஒழுங்கீனமாக இருந்ததால் இந்த அம்மாவால் சரியான நேரத்திற்கு ஆச்சிரமத்துக்கு வர முடியவில்லை. கொஞ்சம் தாமதம் ஏற்பட்டது.

அந்தக் குருவுக்குக் கோபம் வந்து விட்டது. 'வேளா வேளைக்கு ஒழுங்காக வருவதில்லையே! ஏன் இப்படி?' என்று கோபித்து விட்டார். அதற்கு "நான் என்ன செய்ய? தினமும் பொழுது விடிவதற்கு முன்னரே வீட்டை விட்டு வருகிறேன். இருந்தாலும் அந்த ஆற்றங்கரையில் வந்து காத்திருக்க வேண்டியிருக்கிறது. ஓடக்காரன் வந்து சேர்வதற்கு நீண்ட நேரம் ஆகிவிடுகிறது." என்றார் அந்த அம்மா.

"என்னம்மா நீ இப்படி சொல்கிறாய்? பகவானுடைய நாமத்தை உச்சரித்துக் கொண்டே பலரும் பிறவி என்கின்ற பெரிய கடலைத் தாண்டுகிறார்கள். நீ என்னவோ இந்தச் சின்ன ஆற்றைக் கடப்பதற்கு ஓடக்காரனை நம்பிக் கொண்டு இருக்கிறியே" என்றார்.

கள்ளங்கபடமில்லாத அந்த அம்மா இந்தப் பெரியவர் சொன்னதை அப்படியே நம்பியதால் ஆற்றைக் கடப்பதற்கு சுலபமான வழி அவர்களுக்குத் தெரிந்து விட்டது.

அடுத்த நாளிலிருந்து அந்தக் குருவுக்கு நேரத்துக்குப் பால் கிடைத்துக் கொண்டு வந்தது.

ஒரு நாள் அந்த அம்மாவைப் பார்த்துக் குரு "அம்மா! இப்போதெல்லாம் நீ நேரத்துக்குப் பால் கொண்டு வந்து கொடுக்கிறியே? அது எப்படி?" என்றார்.

"நீங்கள் தானே சுவாமி அதற்கு வழி சொல்லிக் கொடுத்தீர்கள்" என்றர் அந்த அம்மா.

"என்ன வழி சொல்லிக் கொடுத்தேன்?" என்றார் குரு.

"இப்போதெல்லாம் நான் அந்த ஓடக்காரனுக்காகக் காத்துக் கொண்டிருப்பதில்லை. பகவான் நாமத்தைச் சொல்லிக் கொண்டே ஆற்றைக் கடந்து வந்துவிடுகிறேன்" என்றார் அந்த அம்மா.

சுவாமி வழி சொல்லிக் கொடுத்தாரே தவிர எப்படி ஆண்டவன் பேரைச் சொல்லி ஆற்றின் மேலே நடக்க முடியும் என்கின்ற சந்தேகம் அவருக்கு.

"என்னைக் கொஞ்சம் அழைத்துக் கொண்டு போய் அந்த அதிசயத்தை நேரிலே காட்டு" என்றார் குரு.

சரியென்று அந்த அம்மா குருவுடன் ஆற்றங்கரையைப் போய்ச் சேர்ந்தார். ஆண்டவன் பேரைச் சொல்லிக் கொண்டே அந்த அம்மா கிடு கிடுவென்று சர்வசாதாரணமாகத் தண்ணீர் மேல் நடந்து போக ஆரம்பித்தார். கொஞ்சத்தூரம் போனதற்குப் பிறகு திரும்பி சுவாமியைப் பார்தார். அவர் காலை வைத்ததும் அது தண்ணீருக்குள் போனது. மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். " என்னை இது? நானும் பகவான் நாமத்தைத்தான் சொல்லிக் கொள்கிறேன். ஆனாலும் என்னால் தண்ணீர் மேல் நடக்க முடியவில்லையே" என்றார் குரு.

அதற்கு அந்த அம்மா "சுவாமி... என்ன இது! பகவான் நாமத்தை வாயால் சொல்கிறீர்கள். ஆனால் அதே நேரத்தில் துணி எங்கே நனைந்து விடுமோ என்கின்ற பயத்தில் அதைக் கையால் தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள். அப்படியென்றால் உங்களுக்குப் பகவானிடம் பரிபூரண நம்பிக்கை இல்லையா?" என்றார்.

அதற்குப் பிறகுதான் அந்த வெகுளிப் பெண்மணி சொன்ன வார்த்தையினுடைய தத்துவம் அந்தச் சுவாமிக்கு விளங்க ஆரம்பித்தது.

தீவிரமான நம்பிக்கை-பரிபூரண சரணாகதி இதுதான் அற்புதச் செயல்களுக்கு ஆதாரம் என்பதைப் புரிந்து கொள்வதற்காக இந்தக் கதையை இராம கிருஷ்ணர் சொல்லியிருந்தார்.

இந்தக் கதையைக் கேட்ட இந்தக் காலத்துக் குடும்பஸ்தர் ஒருத்தர் "எங்கள் குடும்பத்தில் சண்டை சச்சரவே இதுவரைக்கும் வந்ததில்லை; அதுக்குக் காரணம் நான் கடைப்பிடிக்கிற இதே தத்துவம் தான்" என்றார்.

அது என்ன தத்துவம் என்றால் "பரிபூரண சரணாகதி" என்றார் அவர்.

**கோ.சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரிந்துணர்வற்ற விவாகரத்தால் பெண்களுக்கு ஏற்படும் விளைவு

''கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்'' என்பதெல்லாம் பழைய பழமொழியாகவே போய்விட்டது. பெண்கள் தமது மனதுக்குப் பிடித்தால் மட்டும்தான் வாழ முடியும். இல்லையெனில் விவாக ரத்து என்ற நிலைதான் தொடர்ந்து கொண்டிருக்கும் காலமாகிவிட்டது.

இந்த விவாகரத்து வாழ்க்கையால் பாதிக்கப்படுவது இரு தரப்பினர் என்றாலும் இதனால் பெண்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகிவிடும். இவ்வாறான மனமுறிவுகள் எதனால் ஏற்படுகின்றன? ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காத தன்மை, அனுசரித்துப் போகும் நிலையிழந்து அகந்தையில் செயற்படுதல், ஒருவருக்கொருவர் அர்ப்பணிப்பு இல்லாமல் போதல் போன்ற செயற்பாடுகளால் மனமுறிவுகள் ஏற்படுகின்றன.

சோபியா

ஆனால் தற்போதைய மனமுறிவுகள் தன்னிச்சையாகச் செயற்பட முடியும் என்ற தன்னம்பிக்கைகளால் ஏற்படுகின்றது. சமுதாயத்தில் பெண்களின் நிலை உயர்வடைந்துள்ளதால் சர்வாதிகாரமான உறவு நிலையைப் பெண்கள் விரும்புவதில்லை. பிரிதலே சிறந்தது என முடிவு எடுக்கின்றார்கள்.

மனமுறிவுகள் ஏற்படுவதில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சமபங்கு உண்டு. ஆனால் விவாகரத்து எனும் நிலை வந்தவுடன் பெண்கள் மீதுதான் சமுதாயம் பழியைப் போடுகின்றது.

பெண் சரியில்லை. அவள் அப்படியாம், இப்படியாம் எனப் பல புராணக் கதைகளை உருவாக்கி விடுவார்கள். ஆண்களின் மீது குற்றஞ் சுமத்த முடியாமல் பெண்களின் நடத்தைகளில் குற்றம் கூறுவதில் என்ன நியாயம். திருமணம் செய்த பின் வேறொருவர் மீது கொண்ட காதலாலும் மனமுறிவுகள் ஏற்படுகின்றன. இத்தகைய மனமுறிவுகளின்போது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிச் சிந்திப்பது கிடையாது.



ஒருவருக்கு ஏற்படும் வேண்டாத ஆசைகள் அதிக பின் விளைவுகளைத் தரப்போகின்றன என்பதைப்பற்றி நாம் சிந்திப்பது அவசியம். இரண்டாம் திருமணத்திற்கு முடிவு செய்யும்போது அதன் பின்னர் பெண்கள் ஏற்றுக்கொள்ளவேண்டிய அவமானங்கள் சமூகத்தின் வேண்டத்தகாத வார்த்தைகள் அனைத்தும் நிம்மதியற்ற வாழ்க்கையைத் தரும்.

மனமுறிவு ஏற்பட்டபின் பிரிந்துவாழும் நிலையில் கணவனிடமோ மனைவியிடமோ புதுவித அன்பு ஏற்பட்டாலும் மற்றவர்கள் தவறாக நினைக்கக்கூடும் என்பதற்காகவே அன்பை மறந்து விவாகரத்துப் பெறுபவர்களும் இருக்கின்றார்கள்.

''திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர்'' என்று எமது முன்னோர்கள் சும்மாவா சொன்னார்கள். யோசித்துப் பாருங்கள் இதன் தார்ப்பரியம் தானாக விளங்கும்.

வாழ்க்கையை சரிவர அனுபவிப்பவர்கள் இவன்தான் அல்லது இவள்தான் என ஏழேழு ஜென்மத்துக்கும் மனைவியாக அல்லது கணவனாக வரவேண்டும் என்று நினைப்பார்கள்.

புரிந்துணர்வு இல்லாத மனமுறிவைப் பற்றி இருவரும் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும். பிரச்சினை ஏற்படுவதற்கான காரணம் என்ன? அதனை எவ்வாறு தீர்க்க முடியும்? என்றும் நிதானமாக யோசித்து முடிவு எடுக்க வேண்டும்.

''தாம் தூம்'' என்று கத்துவதாலோ இல்லை சண்டை போடுவதாலே எந்தப் பயனும் இல்லை.

விட்டுக் கொடுக்கும் தன்மையும் ஏந்த முடிவானாலும் கலந்தாலோசித்து முடிவு எடுப்பதும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதுமே சிறந்த மண வாழ்க்கையைத் தரும்.

## மீண்டும் உன் மகளாக...




நான் உனைக் கருவில் சுமந்தது
வெறும் பத்து மாதங்கள்தான்
நீ என்னைத் தாங்குகிறாயே
நல்ல தாயாக
உன் அன்பைச் சொல்ல- அம்மா
கவிதையில் வரிகள் போதாது
என் மூச்சுக் காற்றுக்கூட உன்னைத்
தாண்டியே வருகிறது
இந்த ஜென்மம் முடிந்துவிட்டால்
அடுத்த பிறவியில் நான்
பிறக்க வேண்டும்
தாயே உன் மகளாக...

நிலானி.

# சமூகத்தின் பார்வையில் தற்போதைய பெண்கள்

-அரிநயா



சிந்தனைகள் மறுக்கப்படுகின்றபோது வாழ்க்கை பற்றிய தேடுதல்களுக்கும், சுயதொழில் பற்றிச் சிந்திப்பதற்கும் முடியாமல் போகின்றனர். இவர்களுக்கு ஆக்கபூர்வமான ஆளுமைகள் இருந்தும் அவற்றை வெளிப்படுத்த முடியாத நிலையில் இருக்கின்றனர். இதனால் இவர்கள் தங்களது ஆற்றல்கள், திறமைகள், உணர்வுகள், விருப்பங்கள் போன்றவற்றை வெளிப்படுத்தத் தயங்குகின்றனர். எனவே நாளாந்தம் பெண்களுக்கு நடக்கும் பிரச்சினைகளைச் சமூகத்துக்கு உணர வைக்கவேண்டும்.

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, உனக்கேன் தனி வாழ்வு, இணைந்தே செயற்படு, ஒன்றிணைந்தே குரல் கொடு. ஓங்கிடும் உன்பலம், பலம் கொண்ட மாந்தர்க்குப் பூமியிலே பயன் உண்டு. ஓங்கியே வளர்வாய் நன்மைகள் உனக்குண்டு''

இவ்வாறு பல வார்த்தைகளால் போற்றப்படும் பெண்கள் தமது ஆற்றல்களை வெளிப்படுத்த முடியாமல் போவது ஏன்? பெண்களது ஆசைகள்,

பெண்கள் இவ்வாறு இருப்பதற்குக் காரணம் அவர்களுக்கு இருக்கும் கட்டுப்பாடுகளும் சமூகப் பார்வைகளுமே. இது பெண்களின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கின்றன. மேலும் பல பழமொழிகளைச் சொல்லிப் பெண்களை கட்டுப்படுத்தி வைக்கும் நிலைமைகளும் அன்று தொடக்கம் இன்றுவரை இருந்து வருகின்றது. அதாவது பெண்கள் எந்த வேலை செய்ய முற்பட்டாலும் ''பெட்டைக் கோழி கூவி பொழுது விடியுமா?'' ''பெண் புத்தி பின் புத்தி'' என்று பழமொழிகளைக் கூறி பெண்களை இரண்டாம் பட்சமாகச் சுட்டிக்காட்டுகின்றனர்.

சமுதாயத்தின் ஒரு பகுதியினர் பெண்களைச் சிலந்தி வலைக்கும், மற்றையவர்கள் ஆமைக்கும் ஒப் பிட்டுக் கூறி அவர்களது குற்றத்தைப் பெரிதாகவும் ஆண்களின் குற்றத்தைச் சர்வ சாதாரணமாகவும் பார்க்கின்றனர். எனவே இந்தச் சமுதாயத்துக்கு ஒரு புதிய மாற்றத்தைக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகள் சமுகத்தில் ஏன் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. சமூகம் பெண்கள் மீது கொண்டுள்ள கருத்துத்தான் என்ன? எமது சமுதாயம் முழுமையான திடமான ஒரு சமுதாயமாக வருவதற்குப் புரிந்துணர்வு அவசியம்.

வீடுகளிலும் வீதியிலும் வேலைத் தளங்களிலும் கிராமங்களிலும் நகரங்களிலும் சிறுவர் துஷ்பிரயோகம், பெண் அடிமைத்தனம், பாலியல் பலாத்காரம், பால்நிலை வேறுபாடு எனப் பல்வேறு பிரச்சினைகள் நாளாந் தம் கூடிக்கொண்டு வருவதை நாம் பார்த்தும், கேட்டும், அனுபவித்தும் வருகின்றோம். இது அனைவருக்கும் தெரிந்த விடயமே.

எனவே இவ்வாறான நிலைமைகள், போக்குகள், இன்றைய சமூகத்திலிருந்து விடுபடவேண்டும். அப்போதுதான் எமது பெண்களின் உணர்வுகளின் வெளிப்பாடுகள் வெளியில் வரும். இதற்குத் தடையாக உள்ள எமது பிரதேசசமூகப் பார்வைகளை எடுத்துக்காட்டி இவ்வாறான சமூகத்தின் பார்வையிலிருந்து பெண்கள் விடுபட முன் வரவேண்டும்.

# வழிமாறிப் போகும் பெண்களுக்கு மகளிர் தினம் எதற்கு...?

**2011** ஆம் ஆண்டாகிய இந்த ஆண்டில் 100 ஆவது மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. பெண்கள் அரசியல், சமூக, பொருளாதாரத்துறைகளில் அடைந்த முன்னேற்றங்களை வெளிப்படுத்துவதாகவும் சமத்துவமான உரிமைகளை வலியுறுத்துவதாகவும் இந்த மகளிர் தினம் குறிக்கின்றது.

தற்போதைய சூழ்நிலையில் பெண்களின் உரிமைகள் யாவும் சரிவரக் கிடைக்கப் பெற்றாலும் அடக்குமுறையினால் பெண்களை வதைக்கும் செயற்பாடுகள் தொடர்கின்றன. ஆனாலும் பெண்களுக்குக் கிடைத்த உரிமைகள் பறிபோவதற்கு சில பெண்களே காரணமாக இருப்பதும் வேதனை தரக்கூடிய விடயமாக உள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இளவயதில் பெண்கள் கர்ப்பம் தரித்து, பிறந்த சிசுவை சிறிதும் மனமிரக்கமின்றிக் கொலை செய்யும் சம்பவங்கள் அதிகரித்த வண்ணமே உள்ளன. இத்தகைய ஒருவர் செய்யும் தவறுகள் பெண்கள் இனத்திற்கே அவமானத்தை தேடித் தருகின்றன. இவ்வாறான தவறுகளைப் பெண்களே செய்து கொண்டு பெண் உரிமைகள் கிடைக்கவில்லை என்று சமுதாயத்தின் மீது பழி போடுவதில் என்ன நியாயம்?

தவறுகள் செய்த பின் வருந்தி எந்தப் பயனும் இல்லை. தவறுகளைச் செய்யும்போதே அதன் பாரதூரமான விளைவுகள் பற்றிக் கொஞ்சம் சிந்திக்க வேண்டும்.

பெண்களுக்கு உரிமைகள் கிடைக்க வேண்டும் என்று 100 ஆண்டுகளுக்கு முன்னர் பெண்கள் நடத்திய போராட்டத்திற்கு எந்தப் பயனும் இல்லாமற் போகப் பெண்கள் அனுமதிக்கக்கூடாது.

இன்று அதிகளவில் பெண்கள் தொழில்வாய்ப்புக்களையும் தலைமைத்துவமான பதவிகளையும் பெற்றிருக்கும் நிலையில் அவற்றைச் சரியான வழியில் கொண்டு செல்லவேண்டிய பொறுப்பு பெண்களின் கைகளில் தான் உள்ளது. தமது தொழில் மற்றும் வேறு விடயங்களில் சிறப்பாகத் திறமைகளை வெளிக்காட்டும் பெண்கள் தமது வாழ்க்கையில் ஏன் தவறிழைக்கின் றார்கள். குழந்தைகள் இன்றிக் கண்ணீர் வடிக்கும் பெண்களுக்கு மத்தியில் கடவுளால் கொடுக்கப்பட்ட வரப்பிரசாதமாகிய குழந்தைகளைக் குப்பைத் தொட்டியிலும், தெருக்களிலும் வீசுவதால் தமக்குரிய கௌரவத்தையே இழந்து வருகின்றனர். எனவே இனிவரும் காலங்களிலாவது பொறுமை யுடன் சிந்தித்து நாட்டின் குல விளக்குகளாகத் திகழ முன்வருவார்களா!

க.ஜீவன், மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுப் பெருமைமிக்க காரைநகர் பிரதேசம்

தொகுப்பு: டர்னிகன்



*(கடந்தவாரத் தொடர்ச்சி)*

**ப**ண்டைய வரலாற்றுப் பெருமைகள் பலவற்றைக்கொண்ட காரைநகர்ப் பிரதேசத்தில் பல்வேறு வகையிலும் சிறப்பான வளங்கள் நிறைந்த சேவைகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் சமூகமட்ட அமைப்புக்களின் சேவையில் 15 கிராம அபிவிருத்திச் சங்கங் களும் 5 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் 14 விளையாட்டுக் கழகங்களும் மூன்று இந்து இளைஞர் மன்றங்களும் இயங்குகின்றன. காரைநகர் பிரதேசத் தில் ஒரு பிரதான வீதியும் 92 உப வீதிகளும் அமைந்துள்ளன. இடம்பெயர்ந்து மீளக்குடியேறிய குடும்பங்களில் 17 அநாதைச்சிறுவர்களும் 85 விதவைகளும் உள்ளனர்.

காரைநகர் பிரதேசத்தில் வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இடங்களாகக் காரைநகர் சிவன்கோயில் (ஈழத்துச் சிதம்பரம்) கோவளம் வெளிச்சவீடு, கசூரினாக் கடற்கரை என்பவற்றைக் குறிப்பிடமுடியும்.

உதவி அரச அதிபர் பணிமனைக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கான வேலைகள் மதிப்பீடு செய்யப்பட்டு சேவைகள் தொடங்கப்பட்டுள்ளன. மொத்த மதிப் பீட்டுத் தொகை ரூபா 39.5 மில்லியன் ஆகும். 'ஸ்காப்' திட்டத்தின் கீழ் கட்டம் ஒன்று 22.2 பில்லியன் ரூபா செலவில் நடைபெற்றுள்ளது. மிகுதி வேலைகள் கட்டம் இரண்டில் பூர்த்தி செய்யப்பட உள்ளன.

பொன்னாலைப் பால வீதி இருமருங்கும் அகலமாக்கப்பட்டுள்ளதுடன் மேற்கு வீதி வைத்தியசாலை வரைக்கும் கிழக்கு வீதி உதவி அரச அதிபர் பணிமனை வரைக்கும் குறிப்பிட்டளவு தூரம் அகலமாக்கப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளது.

வங்கிச் சேவையைப் பொறுத்த மட்டில் இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, சமுர்த்தி வங்கி, கிராமிய வங்கி என்பன மக்களுக்கு சிறந்த சேவையாற்றி வருவதுடன் பல மில்லியன் ரூபாவைக் காரைநகர் மக்களுக்கு கடனாகவும் வழங்கியுள்ளது. மிக விரைவில் கொமர்ஷல் வங்கியும், விவசாய வங்கியும் இங்கு ஆரம்பிக்கப்பட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

காரைநகருக்கான தனியான பிரதேச சபையும் அதன் இரு உப அலுவலகங்களும் இயங்கி வருகின்றன.

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையுடன் இணைந்திருந்த காரைநகர், அமரர் தியாகராசா மகேஸ்வரனின் முயற்சியினால் 2004ஆம் ஆண்டு தனியான பிரதேச சபைக்குத் தனியான கட்டடம் அமைப்பதற்காக கடந்த ஒரு வருடங்களுக்கு முன்னர் வலந்தலையில் காணி கொள்வனவு செய்யப்பட்டு இரண்டு மில்லியன் ரூபா செலவில் அத்திபாரம் கட்டப்பட்ட போதிலும் கட்டடப் பணி கிடப்பில் போடப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சேவையில் ஒரு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும் அதன் 9 கிளைகளும் இயங்கி வருகின்றன. கூடுதலான தனியார் கடைகளும் காணப்படுகின்றன.

பாலர் கல்வியை வழங்குவதற்காக 15 முன்பள்ளிகளும் நவீன கற்றல் முறைகளுடன் கூடிய காரை கிட்ஸ் பார்க் பாலர் பாடசாலையும் இயங்குகின்றன.

இவற்றில் மொத்தமாக 356 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். மக்களின் வாசிப்புத் திறனை விருத்திசெய்ய பிரதேச சபையின் இரு நூலகங்களும் வியாவில் ஐயனார் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள கணபதீஸ்வரக் குருக்கள் நூலகமும் பேருதவி புரிகின்றன.

மேலும் புதிய நூலகம் ஒன்றினை காரைநகர் புதுவீதிச் சந்தியில் அமைப்பதற்கான ஏற்பாடுகளைப் புலம்பெயர் நாடுகளில் உள்ள காரைநகர் அமைப்புக்கள் மேற்கொண்டு வருகின்றன.

மக்கள் சமயநெறியைக் கைக்கொள்ள ஈழத்துச் சிதம்பரம் உள்ளிட்ட 63ஆலயங்கள் அமைந்துள்ளன. அவற்றுள் 13ஆலயங்களில் மஹோற்சவமும் 7 ஆலயங்களில் அலங்கார உற்சவமும் ஏனைய ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகளும் ஆண்டுதோறும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

காரைநகரில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்துடன் காரைநகர் பொலிஸ் உப அலுவலகம் ஒன்றும் இயங்கி வருகின்றது.

மக்களின் போக்குவரத்துக்குக் காரைநகரில் தனியான இலங்கைப் போக்குவரத்துச் சபைச்சாலை அமைக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து 18பஸ்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. அத்துடன் 20 இற்கு மேற்பட்ட மினி பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. இந்த பஸ் சேவையானது காரை நகரில் இருந்து கொழும்பு மற்றும் வவுனியா ஆகிய இடங்களுக்கு நேரடி சேவையை நடத்தி வருகின்றன.

குடி தண்ணீரைப் பொறுத்த வரையில் மல்லிகை, தங்கோடை, ஆலங்கன்றடி உள்ளிட்ட ஐந்தாறு கிணறுகளும் பிரித்தானிய காரை நலன் புரிச் சங்க குடிதண்ணீர் பவுஸரும் பேருதவி புரிகின்றன. மின்சார வசதிகளை ஏற்படுத்தும் செயற்திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

ஊரி, பிட்டியெல்லை, பாலாவோடை, கல்லற்தாழ்வு, வேரம்பிட்டி, மல்லிகை, மருதபுரம் போன்ற கிராமங்கள் இன்றும் மின்சார ஒளியைக் கண்டுகொள்ளவில்லை. காரைநகர் பிரதேச சபை பல மில்லியன் ரூபா செலவில் நவீன சந்தைக் கட்டடத் தொகுதியை அமைக்க நடவடிக்கை எடுத்தும் பொருத்தமான காணி கிடைக்காமையினால் அந்த முயற்சியை தொடர முடியாத நிலையில் உள்ளது.

காரைநகரின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க ஆரம்பிக்கப்பட்ட காரைநகர் அபிவிருத்திச் சபைக்கும் பல்வேறு இழுபறிகளின் மத்தியில் அண்மையில் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டபோதிலும் அதுவும் மந்த கதியிலேயே செயற்பட்டு வருகின்றது. காரை மத்தி மேம்பாட்டுத் கழகம் காரை மத்தியில் ஆரம்பித்த தனது சேவையை ஏனைய பிரதேசங்களுக்கும் விரிவாக்கம் செய்து வருகின்றது.

காரைநகர் விவசாயிகளின் நலன் கருதி கமநலசேவை நிலையமொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு காரைநகரின் சமூக, பொருளாதார, கல்விக் கட்டமைப்புக்கள் இயங்கி வருகின்றன.

இவற்றின் வளர்ச்சி மற்றும் செயற்பாடுகள் மூலம் காரைநகர்ப் பிரதேசம் அபிவிருத்திப் பாதையை நோக்கிச் செல்லும் என எதிர்பார்க்கலாம்.

*(வளரும்)*

# மக்கள் சேவையுடன் கூடிய வளர்ச்சி அனலைதீவு ப.நோ.கூ சங்கம்

தொகுப்பு:
**லக்ஸ்மன்**




*(கடந்தவாரத் தொடர்ச்சி)*

**அ**னலைதீவு ப.நே.கூ. சங்கம் அத்தியாவசியத் தேவைக்கான அனைத்துப் பொருள்களையும் யாழ்ப்பாணத்து விலைக்கே மக்கள் வாங்கிச் செல்லும் நிலைக்குச் சங்கம் செயற்படுகிறது. சங்கத்தின் பணியாளர்களும் இயன்ற வரை சங்கத்தின் வளர்ச்சிக்காகச் செயற்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில் பணியாளர்கள் கடமையாற்றுகின்றனர். சங்கம் தனியாக இயங்க ஆரம்பித்தது முதல் பொதுக் கூட்டத்தின் மூலம் இயக்குநர், பொதுச் சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் வரை - 14.08.2003ஆம் ஆண்டு வரை - ஊர்காவற்றுறை உதவி அரச அதிபராக இருந்த ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைவராக நியமனம் பெற்றிருந்தார்.

தேர்தல்கள் இடம்பெற்றதும் கே.இராமச்சந்திரன், எஸ்.கணபதிப்பிள்ளை (தற்போதைய தலைவரும் இவரே), வே.கிரிதரன் ஆகியோர் தலைவர்களாக இருந்துள்ளனர்.

பொது முகாமையாளர்களாக முத்துவேல், சிவப்பிரகாசம், பாஸ்கரன், கனகசபை, யோகேஸ்வரன் ஆகியோர் பணியாற்றியுள்ளனர்.

தற்போதைய பொதுமுகாமையாளர் க.பிரதீபன், ஊழியர்கள் என்று அதிகமானோர் இல்லாமையினால் எல்லா வேலைகளிலும் முகாமையாளர் தன்னையும் இணைத்துக் கொள்கின்றார்.

சங்கத்தின் பாவனைக்கென முன்னாள் யாழ்.அரச அதிபரால் இழுவைப் படகு ஒன்று வழங்கப்பட்டிருந்தது. அந்தப் படகைத் திருத்தியமைத்துச் சேவையில் ஈடுபடுத்தக்கூடியதாக இல்லை. அதனை விற்பனை செய்வது குறித்து உதவி ஆணையாளரிடம் (கூட்டுறவு) ஆலோசனை பெறப்படவுள்ளது.

சங்கம் மேலும் தனது சேவையை விஸ்தரிக்க புதியபடகும் ஒரு பார ஊர்தியும் இன்றியமையாத தேவை. மின்சார வசதிகளும் ஏற்படுத்தப்பட வேண்டும். அனலைத்தீவில் பனை, தென்னை வளங்கள் இருந்தபோதும் அவற்றின் மூலம் பெற க்கூடிய வருமானம் குறித்து ஈடுபாடு கிடையாது. இங்கு பனை, தென்னை அபிவிருத்திச் சங்கம் இருப்பதால் அத்துறை சார்ந்த உற்பத்திப் பொருள்களை எமது ப.நோ.கூ.சங்கம் சந்தைப்படுத்த மேற்கொள்ள முனைவது அந்தச் சங்கத்தைப் பலவீனப்படுத்துவதாக அமைந்துவிடும் என்கிறார் தலைவர் கணபதிப்பிள்ளை. இயக்குநர் சபை எல்லோருமே சங்க வளர்ச்சிக்காக முழு ஒத்துழைப்பையும் வழங்குகிறார்கள்.

அத்தியாவசியப் பொருள்களுடன் மட்டும் நிற்கவில்லை. விவசாயிகளின் தேவைகளையும் நிறைவு செய்வதில் கவனம் செலுத்தப்படுகின்றது. அனலைதீவுக்கான அபிவிருத்தி நடவடிக்கை வேலைத்திட்டங்கள் அனைத்தும் சங்கமே ஒப்பந்தம் செய்து அமுலாக்கி வருகிறது. ஒப்பந்த வேலைகள் நல்ல முறையில் செயற்படுத்தப்படுகின்றன.

அவ்வப்போது செயற்படுத்த வேண்டிய அபிவிருத்திகள் குறித்துத் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுடன் கலந்துரையாடப்படுகின்றது. அந்தப் பிரதேசத்தில் வாழும் 2750 உறுப்பினர்களைக்கொண்ட 624 குடும்பங்களும் தனியார் துறைகளை நடாது சங்கத்தின் மூலம் தமது தேவைகள் நல்ல முறையில் கிட்டும் என்ற நம்பிக்கையுடன் உள்ளனர்.

அந்த நம்பிக்கை குலையாதவாறு தமது சேவைகள் அமையவும் தீவுப்பகுதியில் தொடர்ந்தும் இலாபத்தில் ஓடிக்கொண்டிருக்கும் மக்களின் நிறுவனமாக அது வளரவேண்டும் என்பதுதான் அனைவரினதும் விருப்பமாகும்.

*(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றம்

புத்தூர் மேற்கு, புத்தூரை வசிப்பிடமாகக் கொண்ட பாஸ்கரன் அலக்ஸ்சன் ஆகிய நான் எனது பெயரை **பாஸ்கரன் வினித்** என மாற்றம் செய்துள்ளேன் எனவும் இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் பாஸ்கரன் வினித் என கையொப்பமிடுவேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்.

(39) **பாஸ்கரன் வினித்.**

## Short Period Success

சாவகச்சேரியில் அமைந்துள்ள Innovage (Multi national) கம்பனியில் வட, கிழக்கு மாகாணங்களில் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய கிளைகளுக்கு முகாமைத்துவத்துக்கான ஆள்சேர்ப்புக்கள் இடம்பெறுகின்றன. தாங்களும் O/L, A/L சித்திபெற்றவராயின் தொடர்பு கொள்ளலாம். சர்வதேச ரீதியான பயிற்சியுடன் உயர்வான சம்பளமும் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு:-
Udaya - 0717494735
Srikanth - 0770771377

## நல்லூர் கோட்ட மெய்வன்மைப் போட்டி

நல்லூர் கல்விக் கோட்ட மட்ட மெய்வன்மைப் போட்டிகள் இன்று காலை 8மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி நாகலிங்கம் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சிதம்பரப்பிள்ளை மாணிக்கராசா தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்து கொள்வார். (த-311)

## வீடு விற்பனைக்கு

வவுனியா, தோணிக்கல் பகுதியில் வீடு, நன்னீர் கிணற்றுடன் 4பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு:- 0776944355

## தவறிவிட்டது

செல்வபுரம், உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த கணேஸ் சந்திரமோகன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை [880071831V] பேர்சுடன் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்குத் தொடர்புகொள்ளவும்.

க.சந்திரமோகன்,
செல்வபுரம், உரும்பிராய் தெற்கு.
(39)

---

"Overseas Human Resource Consultants"
**Assidua International (Pvt) Ltd.**

GULF CONTRACTING CO. (W.L.L)
GULF HOUSING CONT.

# அசிதுவா சர்வதேச (தனியார்) லிமிடெட்
## கட்டாரில் உடனடி வேலைவாய்ப்பு

| பதவி வெற்றிடம் | எண்ணிக்கை | கட்டார் சம்பளம் |
|---|---|---|
| 1. Finishing Carpenter (பினிசிங் தைச்சு தொழிலாளிகள்) | 25 | 825+225 = 1050 |
| 2. Plumber (குழாய்கள் திருத்தினர்கள்) | 25 | 825+225 = 1050 |
| 3. Electrician (எலக்ரீசியன்) | 25 | 825+225 = 1050 |
| 4. Painter (வர்ணம் பூசுபவர்) | 50 | 825+225 = 1050 |
| 5. Mason (மேசன்) | 75 | 825+225 = 1050 |
| பதவி 1, 2, 3,4, 5 இக்கான அரசினால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் ரூபா 42, 966+ விமான ரிக்கெட் | | |
| 6. Helper (உதவியாளர்) | 100 | 625+225 = 850 |
| அரசினால் அனுமதிக்கப்பட்ட பணம் ரூபா 32, 550+ விமான ரிக்கட் | | |

வெளிநாட்டவரால் நேர்முகத் தேர்வு நடாத்தப்படும்.

முற்கூட்டியே பதிவுசெய்தல் கட்டாயம்


**தங்குமிடம், வைத்திய மற்றும் போக்குவரத்து வசதிகள் நிறுவனத்தினாலேயே செய்து கொடுக்கப்படும்.**

நாளொன்றிற்கு 8 மணிநேர வேலை. உணவு மற்றும் குளிர்பானங்கள் நிறுவனத்தினராலேயே வழங்கப்படும். இரண்டு வருடசேவைகால ஒப்பந்தம் (நீடிக்கும் வாய்ப்புண்டு) சேவைகால முடிவில் விமானப் பயணச் சீட்டு நிறுவனத்தினாலேயே பெற்றுக் கொடுக்கப்படும். ஏனைய சட்ட திட்டங்கள் மற்றும் நிபந்தனைகள்கட்டார் தொழிலாளர் சட்டத்துக்கு அமைவானது.

**அசிதுவா சர்வதேச (தனியார்) லிமிடெட்**
**149, காலி வீதி, தெகிவளை தெற்கு,**
**(ஆர்பிகோ சுப்ப சென்ரருக்கு அருகில்)**

தொ.பே.இல: 0112 735098, 0112 735100 E-mail: jobs@assiduaonline.com

---



# STUDY IN THE UK SPOT ADMISSION
## LONDON VICTORIA COLLEGE

"A" RATED COLLEGE IN THE HEART OF LONDON CITY

Excellent facilities at the heart of London city

COLLEGE OFFICIAL Mr.Graham Minshaw WILL BE CONDUCTING INTERVIEWS AND SPOT DECISIONS on

**17th March 2011**
**at St.John's School**
**from 4.30 p.m. to 6.30 p.m.**

London Victoria College
FROM POSIBILITY TO REALITY

**Book Your Seat- 0777300473**

நிபுணத்துவம் வாய்ந்த அறிவுரைகளும், வழிகாட்டல்களும் எங்களது லண்டனில் தகைமையும், பயிற்சியும் பெற்ற அலுவலர்களால் வழங்கப்படுவதுடன், லண்டன் அலுவலக அலுவலர்கள் உங்களை விமான நிலையத்தில் வைத்தே அழைத்துச் செல்வார்கள். இருப்பிடவசதியும் பகுதிநேர வேலைவாய்ப்புகள் பெறுவதற்கும் உதவுவார்கள்.

**Our Courses:**
- ★ Business & Management
- ★ Hospitality and Tourism Management
- ★ Accounting
- ★ Computing & IT
- ★ Administrative Management
- ★ English

**OUR SERVICES ARE ABSOLUTELY FREE**

(1223) (38-45)

**Colombo Office**
No. 329, 1st Floor,
Southern Wing,
Meewella Building,
Galle Road,
Colombo 4, SRI LANKA.
Tel. 0112 555 243
0777300473


**London office**
No.30 - 32 Southend,
Croydon CRO 1DN,
United Kingdom
Tel T. 0044 207 112 5999
F. 0044 208 688 5776
M. 0044 790 503 8050

**Chennai Advice Centre**
No.1, First Floor,
First Main Road,
Karpagam Gardens
Adyar, Chennai 600 020,
Tel: 044 24900541

KMS – was established in the year 2000 and we have offices in UK , Colombo and India.

---

# புதுக்கடைத் திறப்பு விழா
## Tharan Motors & Body Wash Interiors




இன்று (16.03.2011) புதன்கிழமை காலை 9 மணியில் இருந்து 10 மணிவரை உள்ள சுபவேளையில் எம்மால் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்த வைபவத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

★ இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

உரிமையாளர்
கிரிதரன் (கிரி)

யாழ்.வீதி,
மானிப்பாய். (1236) (28-20-23)

---

# Walk - in Interview
## 19-03-2011 (Saturday)

யாழ்.நகர், சவகச்சேரி, நெல்லியடியில் அமைந்துள்ள கிளைகளிற்கு கீழ்க்கண்ட பணியிடங்களிற்கான நேர்முகத்தேர்வு எதிர் வரும் சனிக்கிழமை 8 A.M - 2 P.M வரை யாழ்.நகர் அலுவலகத்தில் நடைபெறும்

- Student Relation officer - Female
- Trainee Instructor - Male / Female
- Computer Instructor - Male / Female
- Hardware Technician / Faculty - Male
- Assistant Lecturer ICT - Male / Female
- Assistant Lecturer (Tally,QB) - Male
- Lecturer for Multimedia Technology - Male / Female
- Lecturer - C,C++,Java,VB & Auto CAD - Male
- Lecturer - English Language - Male

The Applicant should possess 2 Passes in G.C.E. A/L, Recognized Computer Diploma, Fluency in English and ability to work as a team.மேல் குறிப்பிட்ட நகரங்களுக்கு அண்மையில் உள்ள விண்ணப்பதாரிகள் விரும்பத்தக்கது.

**ASIAN COMPUTER EDUCATION**
2G ,Stanley Road, Jaffna. T.P - 021-222-5677
E-mail : asianedu@dialogsl.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயாய் அலைந்து ஓடாய்த் தேய்ந்து...

## கோணல் பக்கங்கள்

ஓடுகாலி

'கோழி மேய்ச்சாலும் கோர்ண மெந்தில மேய்க்க வேணும்' என்று அரச உத்தியோகத்துக்கு ஆலாய்ப் பறப்பது நம்மவர்களின் இயல்பு. பணியிலிருந்து ஓய்வுபெற்றபின்னும் - வயதான காலத்தில் - காலாட்டிய படியே சீவியத்தை ஓட்டுவதற்கு 'பென்சன்' கிடைக்கும் என்பதாலேயே அரசவேலைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம். அதிலும் ஆசிரிய நியமனம் கிடைத்து விட்டால் கேட்கவே வேண்டாம். பொதுவாகவே எல்லா அரச உத்தியோகங்களிலும் பார்க்க ஆசிரியப்பணியில் மதிப்பும் அதிகம்; வேலைப் பளுவும் குறைவு. என்பனவே அதிகளவானோர் ஆசிரியப் பணியை விரும்பியதற்குக் காரணம். ஆனால் நிலைமை இப்போது அப்படியல்ல. எல்லாமே தலைகீழ். வீடுகளில் மாணவர்கள் படிக்கிறார்களோ இல்லையோ, ஆசிரியர்கள் விழுந்து, விழுந்து படிக்கிறார்கள் இப்போது. எல்லாம் 'ஈ-5' என்ற செயற்திட்டம் படுத்துகின்ற பாடு என்று அலுத்துக் கொள்கிறார்கள் ஆசிரியர்கள். ஆசிரிய வர்க்கத்தினரில் அதிகம் பாவம் செய்தவர்கள், குடாநாட்டி லிருந்து வன்னிப்பகுதிக்குச் சென்று , கல்விப் போதனையில் ஈடுபடுகின்ற ஆசிரியர்கள்தான். காலை 3 மணிக்கே தொடங்குகின்ற இவர்களது பாடுகள் , நள்ளிரவு தாண்டிய பின்னும் தொடர்கின்றன. ஏறக்குறைய 2 அல்லது 3 மணித்தியாலங்களாவது ஒருவழிப் பயணத்தில் தொலைக்க வேண்டியிருப்பதால், விடிகாலை 5 மணிக்கே பஸ்ஸேற வேண்டியுள்ளது. அதைப் பயணம் என்று சொல்வது கூட எவ்வளவுதூரம் சரியென்று தெரியவில்லை.பாவியர் போன இடமெல்லாம் பள்ளமும் திட்டியும் என்று சொல்வார்கள். அது இவர்களுக்கு நூற்றுக்கு நூறுவீதம் அச்சொட்டாகப் பொருந்தும். பள்ளங்களில் ஏறிக் குதித்து, பஸ்கள் பயணிக்கையில் உள்ளிருக்கும் ஆசிரியர்கள் உள்ளிட்ட பயணிகள் அனைவரும் பஸ்ஸின் மேற்பகுதியை முட்டி மோதி அதை உடைப்பது போலப் பாய்வது 'அலாதியான' ஒரு விடயம். அதனால் ஆசிரியர்களின் மண்டையோடுகள் எந்த இரும்பாலும் உடைக்க முடியாதளவுக்கு வலிமை பெற்றுவிட்டதாகவும் ஓர் ஆசிரியர் பெருமையோடு அடிபட்ட தலையைத் தடவியபடியே சொல்லிக்கொண்டார். பஸ்ஸின் குலுக்கலில் எலும்புகள் எல்லாம் பார்ட்ஸ், பார்ட்ஸாகக் கழன்றுபோக, தமது பாடசாலைக்குச் சென்று இறங்கும் ஆசிரியர்களைக் கண்ட மாணவர்களும் சக ஆசிரியர்களும் பேயைக் கண்டது போல ஓடாத குறையாக ஒரு பய முழி முழிப்பார்கள். பின்னே வன்னியின் வீதியெங்கும் மேலெழுகின்ற கிறவல் புழுதி ஆசிரியர்களோடு இரண்டறக் கலந்து- அவர்களது உடல்,உடை என்பவற்றோடு நீக்கமற ஐக்கியமாகி - அவர்களைச் செம்பாட்டுநிற மனிதர்களாக மாற்றிவிட்டால் பார்ப்பவர்கள் பயந்தோடத்தானே செய்வார்கள்? இந்தப் புழுதி மண்டலம் ஆசிரியர்களின் நாசிகளுக்கு போக்குக் காட்டிவிட்டு உள்ளே தம்பாட்டுக்கு புகுந்து விளையாடுவதால் பெரும்பாலான ஆசிரியர்கள் சுவாச நோய்களால் பாதிப்புறுவதாகவும் கூறப்படுகின்றது.

இவ்வளவு பாடுபட்டுச் சென்று, எல்லாப் பாடவேளைகளிலும் மாணவர்களுக்கு கல்வியை அள்ளி வழங்கி விட்டு, பாடசாலை முடிவடைந்ததும் ஆத்துப்பதைத்தபடி பஸ் புறப்பட முன்ன் அதனைப் பிடிப்பதற்காக ஓடுவார்களே ஓர் ஓட்டம். ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற உசைன் போல்ட் கூட அவ்வளவு வேகமாக ஓடியிருக்க முடியாது. அப்படி ஓடியும் பஸ்ஸைப் பிடிக்க முடியா விட்டால் அன்று நள்ளிரவு தாண்டிய பின்னர்தான் அவர்கள் வீடு திரும்ப முடியும்.சிலவேளைகளில் அதுவும் முடியாமல் பாடசாலையிலேயே அன்றைய நாளைக் கழிக்க வேண்டியதுதான். பெண் ஆசிரியர்கள்- அவர்களிலும் திருமணம் முடித்தவர்கள் - இதனால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். வீடுகளில் தமது குழந்தைகள் அழுதழுது கதைப்பதைத் தொலைபேசியில் கேட்பதைத் தவிர வேறெதுவும் செய்ய முடியாதவர்களாக தாமும் பதிலுக்கு கண்ணீர் விட்டபடி தொலைபேசியில் தான்ஆறுதல்சொல்ல வேண்டியிருக்கும்., அடுத்தநாள் பாடசாலை முடிவடைந்து, நேற்றையதினம் தன்னைக் காணாததால் அழுதழுது களைத்துப்போன பிள்ளையைத் தேற்றுவதற்கு ஓடிச் சென்றால் , பள்ளம் திட்டியான றோட்டில் பஸ் ஊர்ந்து செல்வதற்கிடையில் அந்தக் குழந்தை துயின்றிருக்கும்.சரி, காலை முதல் ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் அலைந்தவர்கள் இரவாவது ஆறுதல் கொள்ள முடிகிறதா என்றால் அதுவுமில்லை. கற்பிக்கின்ற பாடங்களுக்கான முன்னாயத்த வேலைத் திட்டங்களை எழுதி முடிப்பதற்கிடையில் , கடிகாரத்தின் முள் நள்ளிரவு கடந்து விட்டதைச் சொல்லியபடி அலறத் தொடங்கிவிடும். அதன்பின் ஒரு கோழித் தூக்கம் போடுவதற்கிடையில் மீண்டும் அதிகாலை 3 மணி வந்துவிடும். வாழ்க்கைச் சக்கரம் பழைய பல்லவியைப் பாடத் தொடங்கிவிடும். இவ்வாறான வன்னிப் பயணத்துக்கு நாளொன்றுக்கு 150 ரூபாவிலிருந்து 200 ரூபாவரையும், 4 தொடக்கம் 6 மணித்தியாலங்கள் வரையும் இந்த ஆசிரியர்கள் செலவிட வேண்டியுள்ளது. ஆனால் இதற்கென மேலதிக கொடுப்பனவுகள் எதுவும் கிடைப்பதில்லை. சரி, இப்படியான தேவை யற்ற அலைச் சல்களில் இருந்து தப்பித்துக் கொள்ளத் தாம் கற்பிக்கும் பாடசாலையில் தங்கவும் வழியில்லை. ஆசிரியர் தங்குமிட விடுதிகளோ அவற்றுக்கான வசதிகளோ இல்லையென்றும் கூறப்படுகின்றது. இந்த நிலையில் நாள் முழுவதும் நாயாய் அலைந்து, ஓடாய்த் தேய்ந்தபடியிருக்கும் இந்த ஆசிரியர்களுக்கு சுமையாக மாறியிருக்கும் முன்னாயத்த வேலைத் திட்டத்தில் ஒரு தளர்வை ஏற்படுத்திக் கொடுப்பதுடன், பயணத்துக்கான மேலதிக படிகள் ஏதாவதையும் வழங்கினால் ஓரளவுக்கேனும் தம்முடைய அழுத்தம் குறையும் என இவர்களில் பலர் ஒரு தீர்வினையும் முன்வைக்கின்றனர். ஆனால் அந்த யோசனைகள் உரியவர்களுக்கல்லவா வரவேண்டும். வருமா?

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தடுப்பு மருந்து போடப்பட்ட தரமான பிறிமா No.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் 24.03.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

| | |
|---|---|
| ஐட்டிபாம் சென்ரர், வட்டுக்கோட்டை | -0778996085 |
| சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு | -0776904590 |
| நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி | -0774656377 |
| முகுந்தன், பருத்தித்துறை | -0771392593 |
| துர்க்கா பாம், சுன்னாகம் | -0779346599 |

**நல்லூர்பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே.இல.021 222 6944

## வீதி சேதம்

கொழும்புத்துறை, மார்ச்.16

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் மாட்டீன் வீதிச் சந்திக்கும் முதலாம் குறுக்குச் சந்திக்கும் இடைப்பட்ட வீதிபடுமோசமாகச்சேதமடைந்து காணப்படுகின்றது. இந்த வீதியில் பெரிய குழிகள் நெருக்கமாகக் காணப்படுவதால் வாகனங்கள் மற்றும் சைக்கிள்களில் செல்லும் பயணிகள் விபத்துக்களையும் சிரமங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

தூர இடங்களுக்கான பஸ் சேவை மார்க்கமான இந்த வீதியில் யாழ்.சிவில் பாதுகாப்பு அலுவலகமும் இயங்கி வருவதுகுறிப்பிடத்தக்கது. (த-135)

**திருமண வாழ்த்து**

இன்று (16.03.2011) புதன்கிழமை திருமணபந்தத்தில் இணையும்



இருவரும் இல்லறம் என்னும் நல்லறத்தில்
இருமனம்ஒருமனமாய் இனிய நல்லேற்றங்கள்
நிறைவாய்ப் பெற்று பதினாறும் அடைந்தே
பல்லாண்டு பண்போடும்
புகழோடும் விளங்கிட
மங்களம் நிறை மனைமாட்சியில்
மாண்புடன் உறவுகள் அன்புடன் பேணிட
ஆல்போல் தழைத்து
அறுகுபோல் வேரூன்றி
அன்புப் பிணைப்பில் ஒருமனமாகி
செய்புலம் சேர்ந்த வான் நீர் போலக் கலந்தே ஒருயிராகி
வள்ளுவன் வாசுகி வாழ்ந்த
பெருவாழ்வை பாங்காய்ப் பெற்று
வளமுடன் வாழ்க! வாழ்க!! வாழ்க!!!

அப்புத்துரை - பரமேஸ்வரி–தங்கராசா - புஸ்பமலர்
தம்பதியரின் திருவளர் செல்வன் நிதீஸ்வரன் (குட்டி)
தம்பதியரின் கனிஸ்ட புதல்வி கணேஸ்வரி (சுமதி)

வாழ்த்தும்:
அன்புடன் அப்பா, அம்மா
சகோதர சகோதரிகள், உறவினர்கள்
பழம்வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.

(48,19,20)

**மாபெரும் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்**

15ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை
மார்ச் 2011

ஒழுங்கமைப்பாளர்: முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியம்
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

இடம்:- யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபம்
(Jaffna University Management Faculty Hall)

நேரம்:- 9.00am- 6.00pm

ஜெயா புத்தகசாலை
சகலவிதமான புத்தகங்களும் விசேட விலைக் கழிவுடன் விற்பனை செய்யப்படும்.

Medical, Children, Grammar, Dictionaries, English and Tamil Language Books will be on Display.

Presented by: Jeya Book Centre
91-99,U.G. Floor, People's Park Complex, Colombo- 11
Tel: 2438227 Fax: 2332939

(49,19,26)

சிவமயம்
**கரைச்சி புளியம் பொக்கனை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தர பொங்கல் விழாவை முன்னிட்டு**

**தண்டல் ஒழுங்குகள் பற்றிய அறிவித்தல்**

நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தர பொங்கல் விழா எதிர்வரும் 19.03.2011 சனிக்கிழமை வழமைபோலச் சிறப்பாக நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு உழவு இயந்திரங்களில் ஆலயச்சின்னம் பொறிக்கப்பட்ட பிரசுரங்களுடன் 13.03.2011 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 17.03.2011 வியாழன் வரை வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடுநகர், விசுவமடு, பிரமந்தனாறு, புன்னைநீராவி, மயில்லா கனபுரம், திருவையாறு போன்ற பகுதிகளுக்கு ஆலயத் தொண்டர்கள் வருகை தருவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ஆலய பரிபாலனசபை.

**கரைச்சி புளியம் பொக்கனை நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழாவை முன்னிட்டு**

**பக்தர்களுக்கான பாதுகாப்புப்பிரிவினரின் அறிவித்தல்**

நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தர பொங்கல் விழா எதிர்வரும் (19.03.2011) சனிக்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது. இவ்விழாவுக்கு வருகைதரும் பக்தர்கள் குறிப்பாக பெண்பக்தர்கள் தயவுசெய்து தங்கள் பாதுகாப்பு கருதி தங்க ஆபரணங்கள் அணிந்து வருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(49.20,23)

ஆலய பரிபாலனசபை.

வவுனியாவில் ஜப்பான் மோட்டர்சைக்கிள் விற்பனையின் முன்னோடியாகிய நாம் இப்போது
**கிளிநொச்சி** வந்துள்ளோம்



ஈடன் மோட்டர்ஸ்
Tel:0772737622
இல. 37C கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
eden Motors
JAPAN


**RMP தேவை**

பதிவு செய்யப்பட்டவைத்திய பயிற்சியாளர் [RMP][Registed Medical Practitioner] Medical clinic ஒன்றை நிர்வகித்து சேவையாற்ற RMP (ஓய்வு பெற்றவர் விரும்பத்தக்கது) ஒருவர் தேவை.
(யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)
தொடர்புக்கு: 0771183374, 021 2229288.

**German Swiss Deutsch**

ஜேர்மன் எம்பசிக்கான DEUTSCH COURSE ஜூன் மாத ஜேர்மன் எம்பசி பரீட்சைக்கான ஜேர்மன் DEUTSCH புதிய வகுப்புகள் ஆரம்பம். Jaffna College, 464,Hospital Road, Jaffna. T.P: 0778245031

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரான்ஸ் சுற்றுப்பயணத்தின் போது அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன், தலைநகர் பாரீஸ் லீபர்காட் விமான நிலையத்தை வந்தடைந்தபோது..........

# அணு உலையைக் குளிர்விப்பதற்கு கடல்நீரை அனுப்புவது ஆபத்தானது:

## அமெரிக்க நிபுணர்கள் கருத்து

ஜப்பானில் ஆழிப்பேரலை தாக்கியதில் பாதிக்கப்பட்டுள்ள அணு உலையின் வெப்பத் தைத் தணிக்க கடல் நீரை பயன்படுத்துவது ஆபத்தானது என்று அமெரிக்க நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஜப்பானில் இப்போது ஏற்பட்டுள்ள நிலைமையானது ரஷ்யாவின் செர்னோபிலில் ஏற்பட்ட அணு உலை விபத்து போன்றது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வீடியோ கொன்பரன்ஸ் மூலமான கூட்டத்தில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த அமெரிக்க நிபுணர்கள், புகுஷிமா பகுதியிலுள்ள அணு மின் நிலையத்தில் ஏற்பட்டுள்ள வெடிப்பு மிகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது. இங்குள்ள முதலாவது அணு உலையில் ஏற்பட்டுள்ள வெடிப்பு மிகவும் அபாயகரமானது.

இப்போதுள்ள சூழலில் உலையின் வெப்பத்தைக் குளிர்விக்க கடல்நீரை பயன் படுத்துவது தவறான முடிவு.

மின் நிலையத்தில் மின்னுற்பத்தி நிறுத்தப்பட்டு இப்பகுதி முழுவதும் இருளில் மூழ்கியுள்ளது. இதனால் குளிர்சாதன கருவிகள் இயங்காத நிலை ஏற்பட்டுள்ளது. இது மிகவும் துரதிருஷ்டமான சூழலாகும் என்று அவர்கள் குறிப்பிட்டனர். பொதுவாக விபத்து ஏற்பட்டால், அணுக் கதிர்வீச்சைத் தடுக்கவும், வெப்ப நிலை உயராமல் தடுக்கவும் நடவடிக்கை எடுப்பதற்காக டீசல் ஜெனரேட்டர் மூலம் குளிர்விப்பான்களை இயக்க முடியும்.

ஆனால் இப்போது அதற்கும் வழியில்லாத நிலை ஏற்பட்டுள்ளது. அணு உலை இயக்கம் நிறுத்தப்பட்டாலும், அதிலிருந்து வெளியாகும் வெப்பத்தைக் கட்டுப்படுத்துவதுதான் இப்போதுள்ள மிகப் பெரும் பிரச்சினையாகும். அணு உலை குளிர்விக்கப்படாவிடில் மூலப் பகுதியிலிருந்து வெளியாகும் வெப்பத்தால் அணு உலை யின் சுற்றுப் பகுதி உருகி அணுக் கதிர் வெளியேறும்.

செர்னோபில் அணு மின் நிலைய அணு உலை பாது காப்பு சுவர்களைவிட இது வலுவானதாக இருக்கும் என நம்பலாம். அதேசமயம் அமெரிக்காவின் மூன்று மைல் தீவிலிருந்த அணு மின் நிலைய சுவர்களை விட வலு குறைந்ததாக இருக்கலாம். இது எந்த அளவுக்கு உறுதியானது என்பதை இப் போதைக்குக் கூற முடியாது என்று அமெரிக்க அணுசக்தி கட்டுப்பாட்டு ஆணைய முன் னாள் உறுப்பினர் பீட்டர் பிராட் போர்ட் தெரிவித்தார்.

ஒருவேளை கட்டுப்படுத்த முடியாத அளவுக்குப் போனால் மணல், சிமெண்ட் ஆகியவற்றைப் போட்டு செர்னோபில் ஆலையை மூடியதைப் போல மூடிவிட வேண்டியதுதான் என்றும் அவர் குறிப்பிட்டார்.

1986இல் உக்ரைனிலுள்ள செர்னோபில் அணு உலையில் வெடிப்பு நிகழ்ந்தது. இதேபோல 1979ஆம் ஆண்டு அமெரிக்காவின் பென்ஸில் வேனியா மாகாணத்தின்மூன்று மைல் தீவிலுள்ள அணு உலையில் வெடிப்பு நிகழ்ந்தது.

இவ்விரு சம்பவங்களிலும் அணு உலைகளின் மூலப் பகுதிகள் வெப்பமடைந்தன. இவற்றால் இவை மூடப்பட்டன. இப்போதைய சூழலில் அணுக்கதிர் வீச்சு பரவாமல் தடுக்க வேண்டியது மிகவும் அவசியம் என அவர்கள் தெரிவித்தனர். (எ)

# பாக்.உளவு அமைப்பின் தலைவர் பதவி நீடிப்பு

இஸ்லாமாபாத், மார்ச் 15

பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐயின் தலைவராக இருக்கும் அகமது சவுஜா பாஷாவின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐயின் தலைவராக இருப்பவர் லெப்டினென்ட் ஜெனரல் அஹமது சவுஜா பாஷா. இவர், அடுத்த வாரத்தில் பணி ஓய்வு பெறுகிறார்.

இவரது பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது என பாதுகாப்புத் துறை அமைச்சர் அஹமது முக்தார் தெரிவித்துள்ளார். ஆனால், எவ்வளவு காலத்துக்கு என அவர் தெரிவிக்கவில்லை.

எனினும், 2013ஆம் ஆண்டுவரை, அவர் பதவியில் நீடிப்பார் எனப் பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# கிரவ்லி இராஜினாமா

அமெரிக்கத் தலைமை வெளியுறவு செய்தித் தொடர்பாளர் கிரவ்லி பதவியை இராஜினாமா செய்தார்.

விக்கிலீக்ஸ் இணையத்தளம் அமெரிக்க இராணுவத்தின் நடவடிக்கைகள் மோசமானவை; மிகுந்த கேலிக்குரியவை என சுட்டிக்காட்டி கிரவ்லியைக் குறித்தும் விமர்சித்திருந்தது. இதைத் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை தனது பதவியை அவர் இராஜினாமா செய்து விட்டார்.

இது குறித்து அவர் குறிப்பிடுகையில், "என் மீது குற்றஞ்சாட்டப்பட்டதைத் தொடர்ந்து அதற்குப் பொறுப்பேற்று நான் இராஜினாமா செய்கிறேன். இராஜிநாமா கடிதத்தை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரியிடம் கொடுத்து விட்டேன். கடிதத்தை அவர் வருத்தத்துடன் ஏற்றுக்கொண்டார் என்று தெரிவித்தார்.(த)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
09.04.1928

இறைவன் திருவடியில்
26.03.2010



அமரர் சிதம்பரப்பிள்ளை மகாதேவன்

முல்லைப்பிளவு, காரைநகர்
(ஓய்வுபெற்ற கணக்காய்வாளர்)

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் இருந்து
அமரர் ஆகிவிட்ட எங்கள் தெய்வமே அன்பெனும்
அமுதூட்டி பாசத்தால் பாதுகாத்து பண்பினால் வழிநடத்தி
வாழ்க்கைப் பாதைக்கு ஒளிவிளக்காய் திகழ்ந்த
எமதன்புத் தெய்வமே உடலால் நீங்கள் எம்மைவிட்டு
பிரிந்து ஓராண்டு சென்று விட்டாலும் இப்புவியில்
நாமுள்ள வரைக்கும் எம் உள்ளங்களில் உங்கள்
நினைவுகள் என்றும் அழியாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முல்லைப்பிளவு,
காரைநகர்.
(39-20-19)

முன்பள்ளி ஆசிரியைக்கான விண்ணப்பம்

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் தொண்டர் சபையால் நடத்தப்படுகின்ற முன்பள்ளி பாலர் கல்விச் சோலையில் ஆசிரியை ஒருவருக்கான வெற்றிடம் உள்ளது.
இந்த வேலைக்கான விண்ணப்பத்தைத் தகைமையுடையோரிடமிருந்து எதிர் பார்க்கிறோம்.
ஆங்கில அறிவும், ஆங்கிலத்தில் போதிக்கும் திறனும் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
விண்ணப்ப முடிவுத் திகதி: 27.03.2011
தங்களுடைய விண்ணப்பங்களை ஆலய செயலகத்தில் ஒப்படைக்கவும்.
செயலாளர்,
கும்பழாவளைப் பிள்ளையார் சேவையில் தொண்டர் சபை.
(39-19-20)

கண்ணீர் அஞ்சலி



ஈச்சமோட்டை ஸ்ரீஞானவைரவர் ஆலய நிர்வாக உறுப்பினர் சத்தியகுமாரின் (ரூபன்) மாமா
அமரர் முருகேசு சிவானந்தன்
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
நண்பர்கள்:
சி.சிவராஜேஸ்வரன், இ. பரராஜசிங்கம், ந.சிவபாதசுந்தரம், க.போகரட்ணம், து.தவபால், ப.சிவநாதன், க.பாலசுப்பிரமணியம்
(39-19-20)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி

"மரணம் நித்தியமாளிகையின் தங்கத்திறவுகோல்"

பிறப்பு 16.04.1933 இறப்பு 16.03.2010



பிறப்பு 12.01.1973 இறப்பு 05.02.1991



அந்தோனிப்பிள்ளை அருளப்பு
(சம்மாட்டி அருளப்பு)

அருளப்பு
றொபின்சன்

ஓ! தெய்வீக குருவே!! ஆறுதல் பெறுவதைவிட ஆறுதல் அளிக்கவும், பிறர் என்னைப் புரிந்துகொள்ள விரும்புவதைவிட பிறரைப் புரிந்துகொள்ளவும் பிறருடைய அன்பை அடைய ஆசிப்பதைவிட பிறருக்கு அன்பைஅளிக்கவும் எனக்கு அருள்வீராக.
தகவல்:
தொ.பே:0217902348
(39-23-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானில் கதிர்வீச்சு அதிகரிக்கும் அபாயம்; 4ஆம் எண் அணு உலை தீப்பிடித்து எரிகிறது

டோக்கியோ, மார்ச் 16


ஜப்பானில் நேற்று செவ்வாய்க் கிழமை நான்காவது பிரிவு அணு உலையில் வெடிப்பு ஏற்பட்டது. இதையடுத்து தீச்சுவாலை எழுந்தது.

சோதனை மேல் சோதனையாக 2ஆம் எண் அணு உலை வெடித்ததிலிருந்து கிளம்பிய அதிகளவு வெப்பம் மற்ற அணு உலை பிரிவுகளில் தாக்கியது. இதன் காரணமாக 4ஆவது பிரிவு அணு உலையில் வெடிப்பு ஏற்பட்டது. அதனை அடுத்து தீ பிடித்தது.

புகுஷிமா அணு மின் நிலையத்தில் மொத்தம் 6 அணு உலை பிரிவுகள் உள்ளன. இவற்றில் 4 பிரிவுகள் பாதுகாப்பு இல்லாதவையாக மாறிவிட்டன. மற்ற 2 அணு உலைகள் வெடிக்காமல் இருக்க ஜப்பான் நாட்டு நிபுணர்கள் போராடிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அந்த அணு உலைகளும் வெடித்துவிடும் என்று தெரிகிறது. இந்த 6 அணு உலைகளும் ஜப்பான் வடகிழக்குப் பகுதியின் மின் தேவையில் சுமார் 40 சதவீதத்தை பூர்த்தி செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

முதல் 2 அணு உலைகள் வெடித்த போது கதிர்வீச்சு அபாயம் அதிகம் இல்லை என்று ஜப்பான் அரசு கூறி வந்தது. ஆனால் 3ஆவதாக மேலும் ஓர் அணு உலை வெடித்து இருப்பதன் மூலம் கதிர்வீச்சு அளவு பல மடங்கு அதிகரித்து விட்டது என உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து ஜப்பான் பிரதமர் நயடோகான் ஒரு எச்சரிக்கை அறிவிப்பு வெளியிட்டுள்ளார். அதில் அவர் 3 அணு உலைகளிலிருந்து வெளியாகும் கதிர்வீச்சு அதிகரித்து வருகிறது. இது நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும்.



எனவே புகுஷிமா அணு உலை பகுதியிலிருந்து 20 கிலோ மீற்றர் சுற்றளவுக்குள் இருப்பவர்கள் வீட்டை விட்டு வெளியே வரவேண்டாம் என்று கூறியுள்ளார்.

அரசின் எச்சரிக்கை ஜப்பான் மக்களிடம் கடும் பீதியை ஏற்படுத்தி உள்ளது. தலைநகர் டோக்கியோவிலிருந்து புகுஷிமா மின்நிலைய அணு உலைகள் தென்மேற்கு திசையில் 250 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளன.

புகுஷிமா அணு உலை கதிர்வீச்சு டோக்கியோ வரை வந்துவிடுமோ என்று மக்கள் பயந்தபடி உள்ளனர். பூகம்ப பாதிப்புக்களை சமாளித்து விடலாம். கதிர்வீச்சை எப்படிஎதிர்கொள்வதுஎன்று ஜப்பான் மக்கள் கதி கலங்கி போயுள்ளனர்.

அணு உலைகளிலிருந்தும் கதிர்வீச்சு வெளியானபடி உள்ளது. அணு உலை கசிவைத் தடுத்துவிட்டாலும் கூட அணு மூலப்பொருளிலிருந்து வெளியாகும் கதிர்வீச்சுகளை நிபுணர்களால் தடுக்க இயலவில்லை.

மூலப்பொருளிலிருந்து வெளியாகும் காமா கதிர்கள் மிக, மிக பயங்கர ஆபத்தை ஏற்படுத்தும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. கதிர்வீச்சு அபாயம் தொடர்ந்து நீடிப்பதால் ஜப்பானின் வடகிழக்குப் பகுதியிலுள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

ஏற்கனவே 3.5 இலட்சம் பேர் பாதுகாப்பான பகுதிகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். சுமார் 1.80 லட்சம் பேர் தொலைதூரப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். ஜப்பானின் வடகிழக்குப் பகுதி முழுவதும் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. கடுமையான குடிதண்ணீர் தட்டுப்பாடும் நிலவுகிறது. 15 இலட்சம் பேர் குடிதண்ணீர் தட்டுப்பாட்டால் தவிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள்.

முகாம்களில் தங்கி இருப்பவர்களுக்கும் சரியான உணவு, உடைகள் கிடைக்கவில்லை. வடகிழக்குப் பகுதி நகரங்களில் சுமார் 6 இலட்சம் தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. இதனால் சேத மதிப்பு கணக்கிட முடியாதபடி உள்ளது.

## நேபாள நோட்டுக்களில் மன்னரின் படம் நீக்கம்

நேபாளத்தின் கரன்ஸி நோட்டுகளில் மன்னரின் படம் அகற்றப்பட்டு புதிய கரன்ஸிகள் புழக்கத்தில் விடப்பட்டன. நேபாளத்தின் கரன்ஸி நோட்டுகளில் ஷா எனும் மன்னர்களின் உருவப்படங்களை தாங்கிப் புழக்கத்தில் இருந்துவந்தன.

ஏறத்தாழ 239 ஆண்டுகளாக நேபாள நாட்டில் மன்னர் ஆட்சி நடந்து வந்ததையொட்டியே அந்நாட்டுக் கரன்ஸிகளில் மன்னர்களின் உருவப்படத்துடன் நேபாள ராஷ்டிரா வங்கி கரன்ஸிகளை வெளியிட்டு வந்தது.

தற்போது நேபாளில் மன்னர் ஆட்சி ஒழிக்கப்பட்டுவிட்டது. அதன்படி புதிய கரன்ஸிகள் புழக்கத்தில் விடப்பட்டன. இனி நாட்டிலுள்ள அனைத்து வங்கிகளிலும், நிதி நிறுவனங்களிலும் புதிய கரன்ஸிகள் புழக்கத்தில் இருக்கும் என நேபாள் மத்திய வங்கியும், நேபாள ராஷ்ட்ரிய வங்கியும் அறிவித்துள்ளது.

## ஆபிரிக்க, மத்திய கிழக்கு நாடுகளில் புரட்சிக்கு வித்திட்டது 'டுவீட்டரே'

சான்பிரான்ஸிஸ்கோ,மார்ச்16

அரசுக்கெதிராக மக்கள் கிளர்ச்சி, மன்னருக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி, ஜனாதிபதியை பதவி விலகக்கோரி மக்கள் கிளர்ச்சி என ஆபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளில் புரட்சிக்கு உந்துசக்தியாக விளங்கியது சமூக வலை தளமான 'டுவீட்டர்'.

இந்த சமூக வலைத்தளம் ஆரம்பமாகி தனது 5ஆவது ஆண்டை நிறைவு செய்கிறது. அமெரிக்காவின் சான்பிரான் ஸிஸ்கோவை தலைமையிடமாகக் கொண்டு கடந்த 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது 'டுவீட்டர்'.

உலகத் தலைவர்கள் தங்களது கருத்துகள், சிந்தனைகள் ஆகியவற்றை பரப்ப சிறந்த இணையதளமாக 'டுவீட்ட'ரை பயன்படுத்துகின்றனர். தற்போது 200 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் 'டுவீட்டரை' பயன்படுத்துகின்றனர் ஆய்வு கூறுகிறது.

தினமும் 140 மில்லியன் வாசகர்கள் 140 கேரக்டர்களில் குறுந்தகவல்களை 'டுவீட்ட'ரில் பயன்படுத்துகின்றனர். கடந்த 2010ஆம் ஆண்டு 25மில்லியன் மக்கள் டுவீட்டரை பயன்படுத்தியுள்ளனர். 100 மில்லியன் நிறுவனங்கள் 'டுவீட்டரில்' கணக்குத் தொடங்கியுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தொடங்கி, இந்தியாவில் பா.ஜ. தலைவர் சுஷ்மா சுவராஜ் என அரசியல் தலைவர்கள் பிளாக்குகள் வாயிலாகத் தங்களது கருத்துகளை வெளியிட 'டுவீட்டர்' சமூக வலைதளம் உதவுகிறது.

சான்பிரான்ஸிஸ்கோ நகரைச் சேர்ந்த ஜாக்-தூர்சே என்பவரின் மூளையில் உதித்தது 'டுவீட்டர்' என்ற சமூக வலைதளம். இதன் இணை நிறுவுநரும் இவரே. அமெரிக்காவின் ஒடியோ மாகாணத்தில் போடோகேஸ்டிங் நிறுவனத்தில் இவர் பணியாற்றிக்கொண்டிருந்தபோது, சக ஊழியர்களான பிஸ்ஸ்டோன், ஈவான் வில்லியம் ஆகியோர் கூட்டாகச் சேர்ந்து 'டுவீட்டர்' என வலைத் தளத்தை ஆரம்பித்தனர்.

பின்னர் இதனை கடந்த 2007ஆம் ஆண்டு டிவீட்டர் என பெயரிட்டனர். உலக நாடுகளில் டிவீட்டரின் சமூக வலைத் தளத்தின் வாயிலாக வெளிவரும் கருத்துக்களே எகிப்து, ஓமன், ஏமன், அல்ஜீரியா, டுனீஷியா, லிபியா ஆகிய நாடுகளில் அரசுக்கெதிராகப் புரட்சியை ஏற்படுத்தி ஆட்சி மாற்றம் ஏற்படக் காரணமாயின.

(த)

## ஜப்பான் பூகம்பத்தால் ஆசிய நிறுவனங்கள் பெரிதும் பாதிப்பு

சியோல்,மார்ச் 16

ஜப்பான் பூகம்பத்தால், 'சிப்' முதல் கப்பல் வரை தயாரிக்கும் பல்வேறு ஆசிய நிறுவனங்களின் உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கணினி 'சிப்' உள்ளிட்ட பல்வேறு மின்னணுப் பொருட்கள் உற்பத்தியில், உலகளவில் ஜப்பான் 14 சதவீதம் பங்களிக்கிறது.

பூகம்பத்துக்குப் பின்னர் ஜப்பானின் பல நிறுவனங்களில் உற்பத்தி நிறுத்தப்பட்டது.

டொயோட்டா கார் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், நாளை வரை தனது 12 நிறுவனங்களின் உற்பத்தியை நிறுத்தி வைக்கப்போவதாகத் தெரிவித்திருந்தது.

கடந்த ஜனவரியில் 2 லட்சத்து 34 ஆயிரத்து 45 வாகனங்களை டொயோட்டா உற்பத்தி செய்தது. ஒட்டுமொத்த ஜப்பானின் வாகன உற்பத்தியில் அது 38 சதவீத பங்களிப்பு கொடுக்கிறது.

பூகம்பத்துக்குப் பின்னர் பங்குச் சந்தையில் அந்நிறுவனத்தின் பங்குகளின் மதிப்பு 7.7 சதவீதம் சரிந்தது.

இந்த இருநாள் உற்பத்தி நிறுத்தத்தால், ஒட்டு மொத்த மாத உற்பத்தியில் 40 ஆயிரம் வாகனங்கள் குறையும். அதே போல், சோனி நிறுவனத்தின் பங்குகள் 9 சதவீதம் வரை சரிந்தன.

குறை கடத்திகளை (செமி கண்டக்டர்) தயாரிக்கும் 'ஹைனிக்ஸ் செமி கண்டக்டர்' நிறுவனம், பூகம்பத்தால், தனது தயாரிப்புகள் விற்பனை பாதிக்கப்படும் என்று கவலை தெரிவித்துள்ளது.

(த)

## ஆப்கானில் குண்டு தாக்குதல்; 36 பேர் பலி; 42 பேர் காயம்!

காபூல், மார்ச் 16

ஆப்கானிஸ்தான் குண்டூஸ் இராணுவ முகாமில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 36 பேர் பலியாயினர். 42 பேர் காயமடைந்தனர்.

தலிபான் தீவிரவாதிகள் பிடியிலிருந்த ஆப்கானிஸ்தான் தற்போது அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகள் கட்டுப்பாட்டில் உள்ளது.

இதைத் தொடர்ந்து அங்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்கதையாக நடந்து வருகின்றன. குண்டு வெடிப்பு மற்றும் தற்கொலைத் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன.

வடக்கு ஆப்கானிஸ்தானிலுள்ள குண்டூஸ் நகரில் இராணுவத்துக்கு ஆள் தேர்வு செய்யும் முகாம் கடந்த 4 நாள்களாக நடைபெற்று வருகின்றன. திங்கட்கிழமை இங்கு ஏராளமான இளைஞர்களும், அவர்களுடன் வந்தவர்களும் கூடி இருந்தனர்.

அப்போது கூட்டத்தில் திடீரென குண்டு வெடித்தது. இதனால் அப்பகுதி முழுவதும் பலமாக அதிர்ந்தது. குண்டு வெடித்த இடத்தில் கரும்புகையுடன் தீப்பிடித்து எரிந்தது.

இச்சம்பவத்தில் 36 பேர் அதே இடத்தில் உடல் சிதறி பலியானார்கள். அவர்களில் 4 குழந்தைகள் அடங்குவர். மேலும் பலியானவர்களில் பெண்களும் உள்ளனர்.

தகவல் அறிந்ததும் மீட்புப் படையினர் விரைந்து வந்தனர். இதில் 42 பேர் படுகாயமடைந்தனர். அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றனர்.

இந்த குண்டு வெடிப்பு சம்பவத்துக்குத் தலிபான் தீவிரவாதிகள் பொறுப்பேற்றுளளனர். இராணுவத்துக்கு ஆள் தேர்வு செய்யும் மையத்தில் மனித குண்டுத் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவித்துள்ளனர்.

தொடக்கத்தில் சாவு எண்ணிக்கை 33 ஆக இருந்தது. சிகிச்சைக்குப் பின் சாவு 36 ஆக உயர்ந்தது. சிகிச்சை பெறுபவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. எனவே இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

தீவிரவாதிகள் நடத்திய மனித குண்டுத் தாக்குதலுக்கு ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமித் கர்சாய் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதிகளை ஒடுக்க இளைஞர்கள் இராணுவத்தில் சேர்ந்து பணியாற்ற வேண்டும். தேசத்தை காக்க வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த 3 மாதத்துக்குள் இராணுவத்துக்கு ஆள் தேர்வு மையத்தில் நடந்த 2ஆவது தற்கொலைத் தாக்குதல் இது வாகும். கடந்த டிசம்பர் மாதம் நடந்த தாக்குதலில் பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட பலர் பலியானார்கள்.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னையில் களமிறங்க அஞ்சும் தி.மு.கவின் மூத்த தலைவர்கள்

சென்னை, மார்ச் 16

சென்னையில் பெரும்பாலான தொகுதிகள் தி.மு.க.வுக்குச் சாதகமாக இல்லை என் உளவுப் பிரிவு மூலம் தெரிந்து கொண்ட அக்கட்சியின் மூத்த தலைவர்கள், சென்னையில் போட்டியிடுவதைத் தவிர்த்து தங்களுக்குச் சாதகமான தொகுதிகளைத் தேர்வு செய்து போட்டியிடும் முடிவுக்கு வந்துவிட்டனர் எனக் கூறப்படுகிறது. தி.மு.க. தலைவர் கருணாநிதி சேப்பாக்கம் தொகுதியை விட்டுக் கொடுத்துவிட்டு தனது சொந்த மாவட்டமான திருவாரூரில் போட்டியிட ஏற்பாடுகள் இரகசியமாக நடக்கின்றன.

அதே போன்று, துறைமுகம் தொகுதியில் போட்டியிடும் அன்பழகன், காங்கிரஸ் கைவசம் வைத்துள்ள நாகை மாவட்டம் மயிலாடுதுறை தொகுதியைத் தேர்வு செய்துள்ளாராம். அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வத்தின் உறவினர் ஒருவரின் ஆதரவோடு அந்தத் தொகுதியில் எளிமையாக வெற்றி பெற்றுவிடலாம் என பன்னீர்செல்வம் ஆலோசனை கூறியுள்ளார்.

துணை முதல்வர் ஸ்டாலினும் ஆயிரம் விளக்கு தொகுதியை விட்டுக்கொடுத்து பாளையங்கோட்டைத் தொகுதிப் பக்கம் போய்விடலாம் எனத் திட்டமிட்டுள்ளார்.

ஆற்காடு வீராசாமி சென்னை புறநகர்ப் பகுதியில் இருந்து செங்கல்பட்டுத் தொகுதியைத் தேர்வுசெய்து வைத்துள்ளார்.

இப்படி தி.மு.கவின் மூத்த தலைகள் சென்னையை விட்டு வெளியேற முடிவெடுத்துள்ளதற்குக் காரணம், சென்னையில் தி.மு.க. கவுன்ஸிலர்களின் அடாவடி அதிகரித்து மக்கள் எரிச்சலில் இருப்பதால் முடிவு பாதகமாகி விடுமோ என்ற அச்சமே எனக் கூறப்படுகிறது. (201)

நேர்காணல்....



சென்னை கோயம்பேடு தே.மு.தி.க. அலுவலகத்தில் நடந்த இறுதி நேர்காணலில் கரூர் தொகுதியில் போட்டியிட விரும்பி மனுத் தாக்கல் செய்த திருநங்கை ரோஸ் வெங்கடேசனிடம் கட்சித் தலைவர் விஜயகாந்த் நேர்காணல் நடத்துகிறார்.

# விருப்பமனுத் தாக்கலில் முதலிடம் பிடித்தது தே.மு.தி.க.

### திகைப்பில் திராவிடக் கட்சிகள்

விருப்பமனுத் தாக்கல் விடயத்தில் திராவிடக் கட்சிகளைப் பின்னுக்குத்தள்ளி தே.மு.தி.கவினர் அதிக சதவீதத்தில் விருப்பமனுத் தாக்கல் செய்துள்ளது. பெரிய திராவிடக் கட்சிகளைத் திகைப்பில் ஆழ்த்தி .மு.க. - தி.மு.க. - தே.மு.தி.க. சார்பில் சட்டசபைத் தேர்தலில் போட்டியிட விருப்ப மனுக்கள் பெறப்பட்டன. அ.தி.மு.கவில் 12 ஆயிரத்து 200 பேர் மனு அளித்தனர். தி.மு.க. சார்பில் 15 ஆயிரம்விருப்ப மனுக்கள் பெறப்பட்டன. தே.மு.தி.க வில் 7,750 விருப்ப மனுக்கள் பெறப்பட்டன.

தே.மு.தி.க. 41 தொகுதிகளில் போட்டியிடுகிறது. ஒரு தொகுதிக்கு சராசரியாக 189 பேர் பணம் கட்டியுள்ளனர். தி.மு.கவில் ஒரு தொகுதிக்கு சராசரியாக 120 பேரும், அ.தி.மு.கவில் 85 பேரும் விருப்பமனுத் தாக்கல் செய்துள்ளனர். (201)

# மாற்றுத் திறனாளிகளுக்காக இறங்கி வந்தார் விஜயகாந்த்

சென்னை, மார்ச் 16

தே.மு.தி.கவில் போட்டியிட விருப்ப மனுச் செய்திருந்த 2 மாற்றுத்திறனாளிகளுக்காக முதல் மாடியில் இருந்து கீழே இறங்கிவந்து நேர்காணல் நடத்தினார் அக்கட்சியின் தலைவர் விஜயகாந்த்.

தே.மு.தி.க. சார்பில் தேர்தலில் போட்டியிட விருப்பமனு அளித்தவர்களிடம் கடந்த 11 ஆம் திகதி முதல் அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேர்காணல் நடந்து வருகிறது.

இந்த நிலையில் கடைசிக் கட்ட நேர்காணல் 78 தொகுதிகளுக்கு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் கரூர் மாவட்டத்துக்குட்பட்ட அரவக்குறிச்சி சட்டப்பேரவைத் தொகுதிக்கு 'பவர்டெக்ஸ்' செல்வராஜ் என்ற மாற்றுத்திறனாளியும் நீலகிரி மாவட்டம் குன்னூர் சட்டப்பேரவைத் தொகுதிக்கு சிவக்குமார் என்ற மாற்றுத் திறனாளியும் விருப்ப மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இதில், செல்வராஜ் தொழிலதிபராவார். சிவக்குமார் சட்டத்தரணி. இவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை தே.மு.தி.க. தலைமை அலுவலகத்தில் நடந்த நேர்காணலுக்கு வந்திருந்தனர்.

நேர்காணல் அலுவலகத்தின் முதல்மாடியில் நடந்தது. இவர்கள் வருகையை அறிந்த விஜயகாந்த் கீழே இறங்கிவந்து அவர்கள் இருவரிடமும் உரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (201)


## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் சுத்தம் செய்தது (1kg+430/=) கல்போட் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர்.
தொடர்பு: 0212226944.


## மரண அறிவித்தல்

### மரியாம்பிள்ளை ஜேம்ஸ்



கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை ஜேம்ஸ் 11.03. 2011 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை-செல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம்-பொன்மணி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற திரேஸ்மலரின் அன்புக் கணவரும் ரமேஷ்(ஜேர்மனி), றெயிலின் (ஜேர்மனி), சிராணி(பிரான்ஸ்), பவானி(ஜேர்மனி), மாலினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (17.03.2011) வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

அன்றைய தினம் காலை 6.00 மணிக்கு கொய்யாத்தோட்டத்தில் உள்ள கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

70, பழைய பூங்கா வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். (1221)

தகவல்:
ஜெ.சுவீற்றி (பேறாமகள்)

(20,23)


## சுகந்தா நேசிங் ஹோம்

395, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

பற்சிகிச்சை

எமது வைத்தியசாலையில் தினமும் மாலை 5 மணிக்கு சகல விதமான பற்சிகிச்சைகளும் நடைபெறுகின்றன என்பதை அறியத்தருகிறேன்.

தொலைபேசி இல: 021 222 7312.
பணிப்பாளர்

## காணிகள் விற்பனைக்கு

யாழ் நகரிலும் நகரை அண்மித்த பகுதிகளிலும் வீட்டுடன் கூடிய காணிகள், வெறும் காணிகள் மற்றும் உல்லாச விடுதி கட்டக்கூடிய கடற்கரையை அண்மித்த பகுதியில் உள்ள காணிகள் என்பன உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்பு:
0718373354, 021 222 9210

## சுகந்தா நேசிங் ஹோம்

395, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

எமது வைத்தியசாலையில் நோயாளரின் நன்மை கருதித் தினமும் காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 1.30 மணி வரை கொழும்பு தெகிவளையில் பல வருடங்களாக சேவையாற்றிய Dr.C.சிறீதேவா (MBBS, DCH, DFM, MCGP) பொதுநல வைத்திய நிபுணர் சேவை புரிவார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தொலைபேசி இல-021 222 7312

(20,23)
பணிப்பாளர்


## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 13 . 11 . 1917

மறைவு 16 . 02 . 2011

### திருமதி தையல்நாயகி செல்லப்பா

எமது அன்புத் தெய்வம் திருமதி தையல்நாயகி செல்லப்பா அவர்கள் கடந்த 16.02.2011 அன்று இறைவனடி சேர்ந்த செய்தியறிந்து எமக்கு ஆறுதல் அளித்தவர்கள், பல்வேறு வழிகளிலும் அனுதாபம் தெரிவித்தவர்கள், இறுதிக் கிரியையில் கலந்து கொண்டவர்கள், இற்றைவரை பல வழிகளிலும் உதவி புரிந்தவர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (17.03.2011) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அன்னதான மண்டபத்தில் 31ஆம் நாள் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நாளை இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

8ஆம் கட்டை, துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.
0213214480. (49,27,20)

குடும்பத்தினர்.


## புதுக்கடைத் திறப்பு விழா

## லக்ஷ்மி பவான் சைவ உணவகம்

நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் பங்குனி மாதம் 2 ஆம் நாள் இன்று (16.03.2011) புதன்கிழமை மு.ப 10-15 மணிக்கும் 11-15மணி வரை யுள்ள சுபவேளையில் பிள்ளையார் துணைகொண்டு கே.கே.எஸ். வீதி, உப்புமடச் சந்தி, கோண்டாவில் எனும் முகவரியில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

## லக்ஷ்மி பவான் சைவ உணவகம்

இங்கு அனைத்து வகையான காலை, மாலை, மதிய, சகல வகையான உணவுகளையும் சுகாதார முறைப்படியும் சுத்தமாகவும் சுவையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

* குறிப்பு:- ஓடர்கள் செய்து தரப்படும்.

கே.கே.எஸ். வீதி,
உப்புமடச்சந்தி,
கோண்டாவில்.

(19,24,28)

உரிமையாளர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலைச் சந்திக்க கருணாநிதி ஜெயலலிதா தயார் நீண்ட இழுபறிக்குப் பின் தொகுதிப் பங்கீடு முடிவுக்கு

சென்னை,மார்ச்16

சட்டசபை தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் தொடங்க, இன்னும் நான்கு நாள்களே உள்ள நிலையில், அ.தி.மு.க., - தி. மு.க., அணிகள், பலப் பரீட்சையில் ஈடுபட தயாராகி விட்டன.

நேற்றைய நிலவரப்படி, அ.தி.மு.க., 160 தொகுதிகளிலும், தி.மு.க., 120 தொகுதிகளிலும் போட்டியிடுவது உறுதியாகி உள்ளது.

தமிழக சட்டசபை பொது தேர்தலுக்கான மனு தாக்கல், எதிர்வரும் சனிக்கிழமை தொடங்குகிறது. மனுத் தாக்கலுக்கு நான்கு நாள்களே இருப்பதால், அரசியல் கட்சிகள் தொகுதிப் பங்கீடு, தொகுதிகளை அடையாளம் காணுதல், வேட்பாளர்களை முடிவு செய்தல், பிரசாரத் திட்டத்தை வகுத்தல் ஆகிய பணிகளில் சுறுசுறுப்படைந்துள்ளன.

தி.மு.க., கூட்டணியில் உள்ள அனைத்துக் கட்சிகளுக்கும் தொகுதிப் பங்கீடு முடிந்துவிட்டதால், நீண்ட பேரத்திற்குப் பின் அந்தக் கூட்டணிக்கு இறுதி வடிவம் கிடைத்துள்ளது. தி.மு.க., 120 தொகுதிகளில் போட்டியிடுவது உறுதி செய் யப்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டதை விட, 12 தொகுதிகளில் குறைவாக தி. மு.க., போட்டியிடுகிறது. அ.தி. மு.க., கூட்டணியில் இடம் பெற்றுள்ள, ம.தி.மு.க.,வுக்கு மட்டுமே இன்னும் தொகுதிப் பங்கீடு முடிவாகவில்லை.

அந்தக் கட்சிக்கு மிக சொற்ப எண்ணிக்கையில், வெறும் எட்டு தொகுதி ஒதுக்க, அ.தி.மு.க., முன்வருவதால், கூட்டணியில் அந்தக்கட்சி இருக்குமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

அதைத் தவிர்த்து, அ.தி.மு. க., கூட்டணியும் இறுதி வடிவம் பெற்று விட்டது.

அ.தி.மு.க., 160 தொகுதி களில் போட்டியிடுவது உறுதியாகி உள்ளது. அ.தி.மு.க., கடந்தமுறை, 188 தொகுதி களில் போட்டியிட்டது. ம.தி. மு.க., வுக்கு ஒரு வேளை அ.தி. மு.க., கூடுதல் தொகுதிகள் கொடுக்க முன் வந்தால், தன் பங்கில் இருந்துதான் கொடுக்க வேண்டியிருக்கும்.



அப்போது, அ.தி.மு.க., போட்டி யிடும் தொகுதிகள் எண்ணிக்கை குறையும். இந்த முறை இரு முனைப் போட்டி என்பதால், தேர்தல் களம் சூடுபிடிக்கும் என, அரசியல் வட்டாரத்தில் பர பரப்பாக எதிர்பார்க்கப்படுகிறது. (201)

உடன்பாடு......



நீண்ட இழுபறிக்குப் பின் அ.தி.மு.க. கூட்டணியில் கம்யூ னிஸ்ட் கட்சி தொகுதி உடன்பாடு கையெழுத்தானது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினருக்கு 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்டு ஒப்பந்தத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச்செயலாளர் தா.பாண்டியனும் அ.தி. மு.க.பொதுச்செயலர் ஜெயலலிதாவும் பரிமாறிக்கொள்கின்றனர்.

# ம.தி.மு.கவுக்கு 8 இடங்கள்; ஏற்பதற்கு வைகோ மறுப்பு

சென்னை,மார்ச்.16

அ.தி.மு.க. கூட்டணியில், கட்சிகளுக்கு இடஒதுக்கீடு ஓரளவுக்கு முடிந்துவிட்டது. ம.தி. மு.க.வுக்கு 8 இடங்கள் ஒதுக் கப்பட்டன.

அதை ஏற்றுக்கொள்ள வைகோ மறுத்துவிட்டார். 2006 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் ம.தி.மு.க., அ.தி.மு.க.வுடன்கூட்டணி வைத்துக்கொண்டு தேர்தலில் போட்டியிட்டது.



இதன்போது ம.தி.மு.க.வுக்கு 35 இடங்கள் ஒதுக்கப்பட்டன. இதற்கான ஒப்பந்தத்தில் அப்போது ஜெயலலிதாவும், வைகோவும் கையெழுத்திட்டனர். இந்தத் தேர்தலில் விஜயகாந்தின் தே.மு.தி.க.வுக்கு 41 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

கம்யூனிஸ்ட் கட்சியும் கூட்டணியில் சேர்ந்திருப்பதால், ம.தி.மு.க.வில் பழைய 35 இடங்கள் கிடைக்காவிட்டாலும், 22 இடங்கள், ஏன் குறைந்த பட்சம் 21 இடங்களாவது வேண்டும் என்று எதிர்பார்த்தனர்.

ஆனால், சில நாள்களுக்கு முன்பு ம.தி.மு.க.வுக்கு 6 இடங்கள் ஒதுக்கப்படுவதாக அ.தி. மு.க. சார்பில் அறிவிக்கப்பட்டது.

இதனைக்கேட்டு வைகோவும், கட்சி நிர்வாகிகளும் அதிர்ச்சியடைந்தனர். பின்னர் தங்கள் அதிருப்தியை அவர்கள் தெரிவித்தவுடன், 7 இடங்கள் தருவதாக அ.தி.மு.க. தரப்பில் கூறினார்கள். கூடுதல் இடங்கள் வேண்டுமென்று ம.தி.மு.க. வில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டது.

பின்பு நேற்று முன்தினம் மாலையில் ம.தி.மு.க.வுக்கு 8 இடங்கள் ஒதுக்குகிறோம் வந்து ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டுவிட்டு செல்லுங்கள் என்று அழைப்பு விடப்பட்டதாகவும், அதற்கு வைகோ மறுத்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையே, நேற்று முன் தினம் பிற்பகலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலும் தலைவர்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இதனையடுத்து ம.தி.மு.கவுடன் ஒப்பந்தம் செய்ய வைகோ வரப்போகிறார் என்று அதிகளவான பத்திரிகையாளர்கள் காத்திருந்தனர்.

எல்லோருக்கும் கடைசி இடத்தில் ம.தி.மு.க.வுக்கு இடம் கொடுத்தது வைகோவுக்கும், அவரது கட்சி நிர்வாகிகளுக்கும் மிகவும் அதிர்ச்சியும், வேதனையும் அளித்துள்ளது என்றும், அதனால் 8 இடங்களை ஏற்றுக் கொள்ள வைகோ மறுத்துவிட்டார் என்றும், ஆகவே ஒப்பந்தத்தில் கையெ ழுத்திட வரமாட்டார் என்றும் அவரது கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

அ.தி.மு.க.வுடன் ஒப்பந்தம் செய்து 8 இடங்களை வாங்கிக் கொள்ளாத பட்சத்தில், அடுத்து என்ன நடவடிக்கைகளை மேற்கொள்வது? என்பது குறித்து ஆராய ஓரிரு தினங்களில் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தை வைகோ கூட்டி முடிவு செய்வார் என்றும் ம.தி.மு.க. தொண்டர்கள் தெரிவித்தனர்.

# தி.மு.க.-காங்கிரஸ் தொகுதி உடன்பாடு நேற்று கைச்சாத்து

தமிழகத்தில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள சட்டசபைத் தேர்தலில் தி.மு.க. கூட்ட ணியில் காங்கிரஸ் கட்சி இடம் பெற்றுள்ளது.

தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சிக்கு 63 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

காங்கிரஸ் கட்சிக்கான தொகுதிகள் எவை என்பதற்கான உடன்பாடு நேற்று கையெழுத்தானது. இதில் தி.மு.க. தலைவர் கருணாநிதியும், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் தங்கபாலுவும் கையெழுத்திட்டனர்.

பின்னர் பேசிய தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் தங்கபாலு, காங்கிரஸ் கட்சி போட்டியிடும் 63 தொகுதிகள் எவை என்ற விவரம் பிற்பகல் அறிவிக்கப்படும் என்றார்.(201)

# தோமஸின் நியமனம் ரத்து பிரதீபா பாட்டீல் உத்தரவு



மத்திய ஊழல் கண்காணிப்பு தலைமை ஆணையராக பி.ஜே. தோமஸ் நியமிக்கப்பட்டதை ரத்து செய்து ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் உத்தரவிட்டுள்ளதாக ஜனாதிபதி மாளிகை செய்தித் தொடர்பாளர் வெளியிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

கேரளாவை சேர்ந்த பி.ஜே. தோமஸை பிரதமர், உள்துறை அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் அடங்கிய உயர் நிலைக் குழு மத்திய ஊழல் கண்காணிப்பு தலைமை ஆணையராகத் தேர்வு செய்தது.

கேரளா பாமாயில் இறக்கு மதி தொடர்பான ஊழல் வழக் கின் குற்றப்பத்திரிகையில் தோமஸ் பெயர் இருந்ததால், அவரது நியமனத்துக்கு எதிர்க் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்தன.

இந்த நியமனத்தை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், பி.ஜே. தோமஸுக்கு எதிரான ஊழல் வழக்கு குற்றப் பத்திரிகையை உயர்நிலைக்குழு பரிசீலிக்கவில்லை என்று கூறி அவரது நியமனத்தை ரத்து செய்து கடந்த 3ஆம் திகதி உத் தரவிட்டது.

ஆனால், மத்திய ஊழல் கண்காணிப்புத்தலைமை ஆணையரை நீக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்துக்கு இல்லை என் றும், குடியரசுத் தலைவரின் பரிந் துரையின் பேரில்தான் சிவிசியை நீக்க முடியும் என்றும் பி.ஜே.தோமஸ் தரப்பில் தெரி விக்கப்பட்டிருந்தது.

இந்த உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மறு ஆய்வு மனு தாக்கல் செய்யவும் அவர் திட்டமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காங்கிரஸில் இணைந்தார் பிரணாப் மகன்

கொல்கத்தா,மார்ச்16

மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜியின் மகன் அபிஜித் முகர்ஜி, காங்கிரஸ் கட்சியில் இணைந்துள்ளார். எனவே மேற்கு வங்கத்தில் நடைபெறும் சட்டசபைத் தேர்தலில், அவர் போட்டியிடலாம் என, காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிரபல பொதுத்துறை நிறுவனமான ஸ்டீல் அதாரிட்டி ஆப் இந்தியா (செயில்)வில் பொது மேலாளராகப் பணியாற்றியவர்தான் அபிஜித் முகர்ஜி. கடந்த பல ஆண்டுகளா கவே, அரசியலில் இறங்கலாமா, வேண்டாமா எனத் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தார். நேற்றுமுன்தினம் அதற்கு ஒரு முடிவுகட்டும் வகையில், தன்னை, காங்கிரஸ் கட்சியில் இணைத்துக் கொண்டார்.

(201)

# 'ஸ்பெக்ட்ரம்' ஊழல்; கலைஞர் ரி.வி. நிர்வாக இயக்குநரிடம் சி.பி.ஐ.விசாரணை




டில்லி, மார்ச்16

2ஜி 'ஸ்பெக்ட்ரம்' அலைவரிசை ஒதுக்கீடு பிரச்சினை தொடர்பாக கலைஞர் ரி.வி. நிர்வாக இயக்குநர் சரத் குமாரிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் ஏற்கனவே 2 முறை விசாரணை நடத்தி உள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன் தினம் அவரிடம் 3ஆவது முறையாக விசாரணை நடைபெற்றது. இந்த விசாரணைக்காக அவரை டில்லிக்கு வரும்படி சி.பி.ஐ. அதிகாரிகள் அழைத்திருந்தனர்.

அதை ஏற்று நேற்று முன்தினம் முற்பகல் 11 மணி அளவில் சரத்குமார் டில்லியில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்துக்கு சென்றார். அங்கு சி.பி.ஐ. அதிகாரிகளின் கேள்விகளுக்கு விளக்கம் அளித்தார்.

'ஸ்பெக்ட்ரம்' வழக்கில் மும்பையைச் சேர்ந்த டி.பி. ரியாலிட்டி அதிபர் பால்வா கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அவருடன் தொடர்புடைய சினியுக் நிறுவனத்திடம் இருந்து கலைஞர் டி.வி.க்கு கடனாகப் பெறப்பட்ட ரூ.214 கோடி பரிமாற்றம் பற்றி சரத்குமாரிடம் இந்த விசாரணை நடத்தப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(201)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் பத்மநாதன் (B.Sc. Hons)

(முன்னாள் மானிப்பாய் இந்துக் கல்லூரி பிரதி அதிபர், பிரபல பௌதிகவியல் ஆசிரியர் (யாழ்ப்பாணம், கொழும்பு) வெள்ளவத்தை சைவமங்கையர் வித்தியாலய பகுதிநேர பௌதிகவியல் ஆசிரியர்)



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பத்மநாதன் 12.03.2011 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மு.நாகலிங்கம் (முன்னாள் கல்விப் பணிப்பாளர்) - மனோன்மணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற இரத்தினஐயா - ஜெகதாம்பாள் தம்பதியரின் அன்பு மருமகனும் சந்திராதேவியின் (B.A, ஆசிரியை, சைவ மங்கையர் வித்தியாலயம், வெள்ளவத்தை) அன்புக் கணவரும் ரேவதியின் (ரேவதா, கனடா) வளர்ப்புத் தந்தையும் காலஞ்சென்ற பத்மாவதி மற்றும் கமலாவதி (பவா), இந்திராவதி (பாபு), கமல்நாதன், சோதிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் முத்தையா, செல்வரட்ணம், ஜெயராணி, நிர்மலா, இராமகிருஷ்ணன், வாசுதேவன், சியாமளாதேவி, சுமங்கலாதேவி, லம்போதரன், சுஜாதாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 19.03.2011 சனிக்கிழமை பொறளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 20.03.2011 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பொறளை ஜெயரத்ன மலர்சாலையில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*78 A, 37வது ஒழுங்கை, வெள்ளவத்தை.*

*தகவல்: திருமதி சந்திராதேவி பத்மநாதன் 0112 506206*

## காசிப்பிள்ளை நாகரத்தினம் (இராசனக்கா)



214, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காசிப்பிள்ளை நாகரத்தினம் (இராசனக்கா) 14.03.2011 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - செல்லமுத்து தம்பதியரின் இரண்டாவது மகளும் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் இரத்தினசிங்கம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற வைரமுத்து மற்றும் காசிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம், இந்திராணி, ஞானசேகரம் (சூரி) மற்றும் குணசேகரம் (மலை - லண்டன்), ஞானராணி, சற்குணராணி, வசந்தராணி, பத்மராணி, உதயராணி (இந்தியா), யோகராணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2011) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3.30 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்; உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*214, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 0772545370*

இரத்தினசிங்கம் (சகோதரன்), மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## செல்லத்துரை பாலேந்திரா

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், நீர்ப்பாசனத் திணைக்களம்)

அச்சுவேலி தெற்கு, சிவசக்திகோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பாலேந்திரா நேற்று (15.03.2011) செவ்வாய்க்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - செல்லப்பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - அருந்ததி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற விமலேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பகீரதி மற்றும் பத்மாவதி, சிவகணேசதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஈஸ்வரதாசன் (அரசினர் வைத்தியசாலை, அச்சுவேலி), ஞானேஸ்வரதாசன் (வவுனியா), மோகனதாசன் (சுவிஸ்), செல்வரதி (சுவிஸ்), அமுதா (கால்நடை வைத்திய அதிகாரி, திருநெல்வேலி) ஆகியோரின் அன்பு மாமனும் பஞ்சாட்சரநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) காலஞ்சென்றவர்களான சர்வேஸ்வரன் (வைத்திய ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்) காலஞ்சென்ற சபாநாதன் மற்றும் சண்முகநாதன் (நில அளவையாளர், கனடா), யோகநாதன் (கல்வி உதவிப்பணிப்பாளர், வவுனியா) காலஞ்சென்ற பறுவதாதேவி மற்றும் பராசக்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஸ்ரீராம கிருஷ்ணர், கைலாசபதி (சுவிஸ்), பூபாலசுந்தரம் (சுவிஸ்), ஜெகதீஸ்வரன் காலஞ்சென்ற பராசக்தி மற்றும் அருந்தவமலர் ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் பகீரதன் (சுவிஸ்), பிரபாகரன் (கால்நடை வைத்தியர், வட்டுக்கோட்டை), செல்வராணி (ஆசிரியர், ரம்பைக்குளம் மகளிர் கல்லூரி), சுதோசனா, புஸ்பா (சுவிஸ்), சஞ்சீவன் (தாதி, யாழ். போதனா வைத்தியசாலை), சாந்தினி (கனடா) ஆகியோரின் பெரியப்பாவும், பகீரதன், சௌமிதா, திவாகரன், கம்சிகா, சயந்தனா, சபாந்தினி, அனுஜன், சிந்துஜன், கமன்ஜா, பகீஷன், லக்ஷன், லாஷினி, பிரகீஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2011) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முழக்கன் மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவசக்தி கோயிலடி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.*

தகவல்: மருமகள் (அமுதா)

## வீடு விற்பனைக்கு

வளன்புரம், கொழும்புத்துறை பகுதியில் 1½ பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 0774175675.

## தவறிவிட்டது

இடு [illegible] உடையடை, முக்கிய படிவங்கடங்கிய கடித உறை, [illegible] நீர்ப்போத்தல் [illegible] 14.03.2011 அன்று பி.ப 1.30 - 3 மணிக்கு இடையில் [illegible] இந்துக்கல்லூரிக்கும் [illegible] இடையில் தவறிவிழுந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்புகொள்ளவும். அ.ர.நா.இராஜா, 44(16), பழம் வீதி, நல்லூர் [illegible] தொ.பே:- 0779172071

## ICT ஆசிரியர் தேவை

யாழ் பிரபல கல்வி நிறுவனத்துக்கு தரம் 10, 11 மாணவர்களுக்கு ICT கற்பிக்கக்கூடிய ஆசிரியர் தேவை.

தொடர்புகளுக்கு - 021 3207700

ICT ICT

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரான சிரேஷ்ட விரிவுரையாளர் Mrs.ஜெ.நந்தகுமார் அவர்களின் தந்தை

### K.விக்னராஜா

காலமான செய்திகேட்டு யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட விரிவுரையாளர்கள் சார்பாக எமது கண்ணீர் அஞ்சலியையும் அவரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

விஞ்ஞான பீட ஆசிரியர் சங்கம்,
யாழ். பல்கலைக்கழகம்.

# மரண அறிவித்தல்கள்

## சவரிமுத்து பிரான்சிஸ் சேவியர்

[ஓய்வுபெற்ற உப அதிபர், மாசியப்பிட்டி றோ.க.த.க. பாடசாலை]



குருநகர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மல்லாகம், குளமங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து பிரான்சிஸ் சேவியர் நேற்று (15.03.2011) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசப் சவரிமுத்து - ஞானம்மா தம்பதியரின் அன்பு மகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் திருமதி மேரி அனித்தாவின் அன்புத் தந்தையும் சிறிகரனின் மாமனாரும் ஆனந்தத்தின் சகோதரனும் சரோன், அபிசன், எட்சைலா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.03.2011) வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று புனித சவேரியர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் மல்லாகம் குளமங்கால் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மல்லாகம், குளமங்கால்.

தகவல்: குடும்பத்தினர்.

## செல்வி மனோகரன் கலைவாணி



கைதடி நுணாவில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி, உடுவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட மனோகரன் கலைவாணி கடந்த சனிக்கிழமை (12.03.2011) அகால மரணமடைந்தார்.

அன்னார் மனோகரன் - மனோரதி (ஆசிரியை) தம்பதிகளின் பாசமிகு மகளும் இராமசாமி - செல்லம்மா, மயில்வாகனம் - தையல்நாயகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் லலித்கரன் (சுவிஸ்), வனஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தனலக்சுமி (இந்தியா), கமலலக்சுமி (கனடா), குகதேவி, குணலக்சுமி (இந்தியா) அன்னலக்சுமி ஆகியோரின் அன்பு மருமகளும் மனோகரிதேவி, மனோராஜ் (பிரான்ஸ்) மனோராணி (பிரான்ஸ்), மனோரஞ்சனா (பிரான்ஸ்) மனோரஞ்சினி ஆகியோரின் பெறாமகளும் கீதன் (பிரான்ஸ்) கமலகுமாரன் (கனடா), செல்வகுமார் (கனடா), அகிலகுமார் (கனடா) கோகிலகுமாரி (பிரான்ஸ்), கஜலக்சுமி, இன்பகீதன் (லண்டன்), இன்பவதனி, பகீரதி (லண்டன்), வாசுகி (கொலண்ட்), ரஜீபன் (லண்டன்), சதீஸ்குமார் (கனடா), துஷாந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் பவளவதனி (பிரான்ஸ்), சீலன் (பிரான்ஸ்), ஜெயவதனி (கனடா), மதிவதனி (லண்டன்), அனுசியா (பிரான்ஸ்), அமலன் (பிரான்ஸ்), ஆதவன் (பிரான்ஸ்), காஞ்சனா (பிரான்ஸ்), ராஜ்குமார், தமயந்தி (பிரான்ஸ்), ஆனந்த் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2011) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் நல்லடக்கத்துக்காக கைதடி நுணாவில் குச்சுப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி நுணாவில் [illegible], சாவகச்சேரி. [illegible]

தகவல்: [illegible] (தந்தை)

## தவறிவிட்டது

J.C.B. BACKHO வாகனத்தின் முன் 'செல்' கடந்த ஐந்தாம் திகதி கண்டி வீதி பெற்றோல் நிலையத்துக்கும் கனகன்புளியடிச் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 0773144756

## தேவை

1.Material Engineer } அனுபவத்துக்கு
2.Pavement Engineer } முன்னுரிமை
3.Excavator Operator
4.Wheel Loader Operator
5. Dumper Driver (பாதுகாத்தலிலும் பழுதுபார்த்தலிலும் அனுபவம் அறிவு தேவை)
6.Draughtsman (பெண் விரும்பத்தக்கது - அலுவலக உதவியாளராகவும் செயற்படல்)

*தொடர்பு: மைக்கல் - 0778454272*

(Michael) China Railway

*விலாசம்: சிவன் றோட், உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.*

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
18 ★ 04 ★ 1937



மறைவு
14 ★ 02 ★ 2011

கடந்த 14.02.2011 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது தாயார்

### திருமதி தம்பையா நல்லம்மா

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (16.03.2011) புதன்கிழமை நடைபெறும். அத்தருணம் தாங்களும் அதில் கலந்து கொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

*மீசாலை மேற்கு, மீசாலை.*

த.தர்மேந்திரன் (மகன்).

# மரண அறிவித்தல்

## திருமதி ஜேட்றூட் ஜேம்ஸ்



யாழ்ப்பாணம், குருநகரைப் பிறப்பிடமாகவும் இல. 43/3, குருசோ வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜேட்றூட் ஜேம்ஸ் நேற்று (15.03.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கபிரியேல்பிள்ளை ஜேம்ஸ்ஸின் அன்பு மனைவியும் அமலசீலன் (ஓய்வுபெற்ற உப அதிபர், சென். ஜோன்ஸ் கல்லூரி), தர்மபாலன் (கனடா), மருதசீலி, மனோகரன், கிங்ஸ்பெரி, லில்லியற், அன்ரன்ஜோண்சன், இராஜேஸ்வரன் (நோர்வே), கிளமென்ரைன், தயாநிதி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும் மேரிஜோசவ்வின், அன்ரனியம்மா, இரேனியஸ், மேரிகிறேஸ், குணலக்ஷ்மி, காலஞ்சென்ற அற்புதநாதர் மற்றும் மெலிசம்மா, மரீனா (நோர்வே), பத்மகுமார், சிவகுமார் (நோர்வே) ஆகியோரின் மாமியாரும் பிலோமினா (மலேஷியா), காலஞ்சென்ற ஜொசபின் மற்றும் சந்திரன் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கபிரியேல்பிள்ளை பேக்மன்ஸ்ஸின் மைத்துனியும் Dr.விமல் அமலசீலன் (ஆஸ்திரேலியா), வளர்மதி, சாந்திமதி, யூலின் (கனடா), கொலின் (U.K), மேவின் (கனடா), மொறின் (கனடா), அமிர்தசீலன் (விவசாயத் திணைக்களம், கிளிநொச்சி), காலஞ்சென்றவர்களான நியூட்டன், மங்களேஸ்வரன் மற்றும் திலகஸ்ரீமதி, தயானந்தி, நிசாந்தன், நித்திகா, கீர்த்திகா, அனுசியா, கோபிநாத், சிறிநாத், அன்றுகிறேசியன் (பிரான்ஸ்), சத்தியன், சங்கரன் (ஜேர்மனி), சதீஸ்வரன், கயல்விழி, மங்களேஸ்வரன் (கட்டார்), எட்வின், சிந்துலோஜினி, சபேசன் ஸ்ரெபானி (நோர்வே), லௌறின் (நோர்வே), மிதுஷன் (நோர்வே), அமலினி, ஜஸ்மின், நிறேபன் (நோர்வே), லக்ஷனா (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (16.03.2011) புதன்கிழமை பி.ப. 3.30 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து யாழ். மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 43/3, குருசோவீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*

தகவல்: Mr.J.அமலசீலன் (மகன்). 0718798099, 021 3737453

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 16

இளவாலை புனித ஹென்றி யரசர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு யங் ஹென்றீசியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் பங்குகொள்ள வுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* பி.ப 3.45 மணி - மயிலங் காடு ஞானமுருகன் வி.க எதிர் கரவெட்டி நவசக்தி வி.க.
* பி.ப 4.45 மணி - அராலி ஐக்கிய வி.க எதிர் வதிரி பொம்மர்ஸ் வி.க. (ஐ-23)

## வியாங்கொடை பண்டாரநாயக்க அணியை 291 ஓட்டங்களால் வென்றது கொக்குவில் இந்து

யாழ்ப்பாணம், மார்ச் 16

வியாங்கொடை பண்டார நாயக்க மகாவித்தியாலய அணியை 291 ஓட்டங்களால் வெற்றி கொண்டது கொக்கு வில் இந்துக் கல்லூரி.

கடந்தவாரம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற 19 வயது பிரிவி னருக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இரண்டாவது சுற்று ஆட்டத்தில் வியாங்கொடை பண்டாரநா யக்க மகாவித்தியாலய அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கொக்குவில் இந்துக் கல் லூரி அணி முதலில் துடுப்பெடுத் தாடுவதாகத் தீர்மானித்தது.

கொக்குவில் இந்துக் கல் லூரி அணி 49.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 385 ஓட்டங்கள் பெற்றது.

பங்குசன் -100, சங்கீத்-54, சிலோசன் - 46, ஆதித்தன் -37, இராகுலன் -35, ஜானுஷன் -32 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் வியாங்கொடை பண்டாரநாயக்க மகா வித்தியா லய அணிவீரர்களான லக்சன் 3 விக்கெட்டுக்களையும், லாசற், தகமகே ஆகியோர் முறையே 2 விக்கெட்டுக்களையும் வீழ்த் தினர். 386 ஓட்டங்களைப் பெற் றால் வெற்றியென களம் இறங் கிய வியாங்கொடை பண்டார நாயக்க மகாவித்தியாலய அணி 15 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 94 ஓட்டங்கள் மட்டும் பெற்றது. களுவக்கலே 21, சாந்தீபா 27 ஓட்டங் களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி வீரர்களான சஜீந் தறன் 3 விக்கெட்டுக்களையும், பங்குசன் 4 விக்கெட்டுக்க ளையும் வீழ்த்தினர். (ஐ-23)

## கிண்ணத்தைக் கைப்பற்றியது மகா விஷ்ணு வி.கழகம்

தென்மராட்சிப் பிரதேச பதிவு செய்யப்பட்ட விளை யாட்டுக் கழகங்களின் பெண் கள்பிரிவின் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கோயிலாக் கண்டி ஸ்ரீ மகா விஷ்ணு வி.க. அணி சம்பியனாகியது. மட்டு வில் மோகனதாஸ் வி.க. மைதா னத்தில் நடைபெற்ற சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி யில் மட்டுவில் வளர்மதி வி.க. பெண்கள் அணியை வீழ்த்தி ஸ்ரீமகா விஷ்ணு அணி சம்பி யனாகியது.

ஆண்களுக்கான கரப்பந் தாட்ட இறுதிப் போட்டிக்கு மட்டுவில் மோகனதாஸ் வி.க. அணியும் கைதடி வளர்மதி வி.க. அணியும் இறுதிப் போட் டிக்கு தகுதி பெற்றுள்ளன. இறு திப் போட்டி பிரதேச விளை யாட்டு விழாவில் இடம் பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-207)

## கடல்சார் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 16

கொழும்புத்துறை சென் ஜோசப் வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவை யொட்டி ஏற்பாடாகியுள்ள விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான கடல் சார்ந்த போட்டிகள் நாளை வியாழக் கிழமை காலை 7 மணிக்கு பாஷையூர் கடற் பகுதியில் இடம் பெறவுள்ளது என்று வித்தியாலய அதிபர் பா. வின் சென்ற் தெரிவித்தார். (ஐ-23)

## ஸ்கந்தாவை வென்றது அருணோதயா

மருதனார்மடம், மார்ச்16

வலிகாமம் வலயப் பாடசாலை களிடையே சுன்னாகம் ஸ்கந்த வரோதயக் கல்லூரியில் நடை பெற்ற வலய மட்ட மென் பந்துத் துடுப்பாட்டப் போட்டி யில் அளவெட்டி அருணோ தயக் கல்லூரி முதலாம் இடத் தையும் சுன்னாகம் ஸ்கந்தவ ரோதயக் கல்லூரி இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண் டன. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

வலயமட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற இந்த அணிகள் மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற் கான தகுதியைப் பெற்றுள்ளன.

வலிகாமம் வலயத்தில் உள்ள நான்கு கோட்டங்களிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகள் வலயமட் டப் போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டன. வலய மட்ட ஆரம்பச் சுற்றுப் போட்டிகளில் பெற்ற புள்ளிகளின் அடிப்ப டையில் ஸ்கந்தா, அருணோ தயா, மகாஜனா, யூனியன் ஆகிய அணி கள் அரையிறுதிப் போட்டிக் குத் தெரிவுசெய்யப்பட்டன.

அரையிறுதிப்போட்டியில் தெரிவான ஸ்கந்தாவும் அரு ணோதயாவும் இறுதிப் போட்டி யில் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய அணியினர் 10 ஓவர்கள் நிறை வில் 7 விக்கெட்டுக்க ளை இழந்து 51 ஓட்டங் களைப் பெற்றுக் கொண்டனர். நிறோஜன் 3 சிக் சர்களுடன் 25 ஓட் டங்களைப் பெற் றார்.

அருணோதயா வின் பந்து வீச்சில் அகில்ராஜ் 3 விக் கெட்டுக்களையும் கிரேஸி 2 விக்கெட் டுக்களையும் கைப் பற்றினர்.

பதிலுக்கு 52 ஓட் டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங் கிய அருணோத யாக் கல்லூரி அணி யினர் 2 விக்கெட் டுக்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்து வலய மட்டச் சம் பியன் ஆகினர். 3ஆம் இடத் துக்கான போட்டியில் யூனி யன் கல்லூரியை வென்ற மகாஜனாக் கல்லூரி அணி யினர் வலய மட்டத்தில் 3ஆம் இடத்தைப் பெற்றுக் கொண் டனர். (ஐ-55)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.மாவட்டச் செயலக காணி மாவட்டப் பதிவகத்தில் கடமை யாற்றும் பொதுமுகாமைத்துவ உதவியாளர் திருமதி சிவாஜினி சிறீதர் அவர்களின் பாசமிகு தந்தை

**முருகேசு சிவானந்தன்**

அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆறாத்துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி சங்கம், யாழ்.மாவட்டச் செயலகம்.

(19,20) (சி/576519)

## கல்விமாணி B.Ed தேசிய நிறுவகம் தெரிவுப் பரீட்சை (தமிழ்-ஆங்கிலம் மொழி மூல) வழிகாட்டல்

செயலமர்வு-2011 பொது உளசார்பும், கல்வி சார் பொது அறிவும்

மேற்படி பரீட்சை 26.03.2011 அன்று நடை பெற வுள்ளது. அனேகரின் வேண்டுகோளுக்கிணங்கவும் எம் மண்ணிலிருந்து கூடுதலானோர் தெரிவாகவும் வழிகாட்டல் செயலமர்வு 19 ஆம், 20 ஆம் (சனி, ஞாயிறு) திகதிகளில் காலை 9.00 பிற்பகல் 3.00 மணி வரை யா/இந்து மகளிர் கல்லூரியில் தேசிய ரீதியிலான வளவாளர்களினால் மேற்கொள்ளப் படும். செயலமர்வில் பங்கு கொள்ள விரும்புவோர். 0779360607 என்ற T.Pயில் பதிவுகளை இன்றும், நாளையும் மேற்கொள்ள முடியும். பதிவு செய் யாதோர் செயலமர்வில் அனுமதிக்கப்படமாட் டார்கள்.

பா.தனபாலன் (பணிப்பாளர்)
ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்
528, பலாலி வீதி, திருநெல்வேலி.

(சி/576320) (19,20)


முதல் மாதத்திற்கு வட்டி இல்லாத




இன்றே அருகிலுள்ள NDB வங்கிக்கு வாருங்கள்.
அழையுங்கள் 011 2 44 88 88
வாழ்க்கையை நிதமும் மாற்றும்
NDB வங்கி



எமது சிகிச்சைகள்
புற்று நோய் தணிப்பு
தைராய்ட் பிரச்சினைகள்
ஈரல் கோளாறுகள்,
மஞ்சள் காமாலை,
மூட்டுவலி,முதுகுவலி,
ஒற்றைத் தலைவலி,
சுவாசப்பை கோளாறுகள்,
படுக்கைபுண் - நீரிழிவுப் புண்..
நோய் எதிர்ப்பு சக்தி குறைபாடு
நீக்குதல் பக்க விளைவுகள்
இல்லை. சிக்கனமான மூலிகை
மருத்துவம்

இனி இல்லை
நெஞ்சு வலி




இருதய நோயாளர்
எதிர்காலத்தில் நெஞ்சு வலி
இன்றி சுகமாக வாழலாம்.
எமது ஆயுர்வேத
மருந்தினால்
இரத்த ஓட்டம் சீர்பெறும்
வலியிலிருந்து உடல் நலம்
பெருவீர்கள்.

HOTLINE
0777 08310, 011 555 8442

A BOI APPROVED & ISO 9001-2008 QMS CERTIFIED COMPANY

FAIR PHARMA (PVT) LTD
Level5/ East Tower, 1 C, World Trade Centre, Col - 01
Phone - +94 11 5 617 897, 5 551 879, 5 558 442
Email - fairpharmacysrilanka@yahoo.com,
Web - fairpharmasrilanka.com

இலவச மருத்துவ ஆலோசனைகள்
மருதனார்மடம் 21.03.2011 ரோயல் சென்டர் மெடிக்கல் சென்டர் செட்டி வீதி
யாழ்ப்பாணம் 22.03.2011 கமலா டிஸ்பென்சரி 1207 K.K.S வீதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு LAPTOP

Dell 1540 Inspiron, Processor - Intel (R), Core (TM) 2Duo, CPU T6 500@2.1GHZ, RAM 2GB, System - Win (7)

**TP:- 0774743298**

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 733 திகதி 14-03-2011

வெற்றி எண்கள்

**02 40 43 46 T**

ஜக்பொட் பரிசு ரூ. 11,642,800/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 11,642,800/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 14 | 2,000/= | 28,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 426 | 1,000/= | 426,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 745 | 1,000/= | 745,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 17641 | 60/= | 1,058,460/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8416 | 40/= | 336,640/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 212577 | 20/= | 4,251,540/= |
| | | மொத்தம் | ரூ. 7,645,640/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கண்டி | 600897743-2-12 |
| கேகாலை | 600894664-9-39 |
| அம்பாறை | 600884480-2-02 |
| அநுராதபுரம் | 600898834-6-06 |
| இரத்தினபுரி | 600889425-3-33 |
| மாத்தளை | 600886455-0-40 |
| யாழ்ப்பாணம் | 600884757-5-25 |
| வவுனியா | 690200360-7-27 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,045,640/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட

**ரூ. 12,218,620/=**

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2011 மார்ச் 17 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

## City Hospital Lab Service

சிற்றி மருத்துவமனை ஆய்வுகூட சேவை

இல. 572 1/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

★ காது, மூக்கு, தொண்டை (ENT) சத்திரசிகிச்சை நிபுணர்
தினமும் காலை 6.30-8.00 மணி

★ பெண்நோயியல், மகப்பேற்று நிபுணர் (VOG)
தினமும் காலை 6.30-8.00 மணி

பதிவுகளை மேற்கொள்ள 0212221629 அழைக்கவும்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம்

இதழியல் டிப்ளோமா மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் பகுதி நேர (2008/2010) டிப்ளோமா பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்த இரண்டாவது அணி மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை எதிர் வரும் ஏப்ரல் 18 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. மாணவர்கள் 30.03.2011 க்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பித்து அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

*பதிவாளர்.*
*15.03.2011* (சி/576828)(31)

## மரண அறிவித்தல்



### திருமதி பாலசுந்தரம் பாலாம்பிகை

பண்டத்தரிப்பு, வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் செட்டி குறிச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசுந்தரம் பாலாம்பிகை நேற்று (15.03.2011) செவ்வாய்க் கிழமை அதிகாலை அகவை 94இல் இறையடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற க.பாலசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - இராசம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - நாகரத்தினம் தம்பதியரின் மருமகளும் பேரின்பதேவி (இன்பம்), காலஞ்சென்ற நித்தியானந்தன் மற்றும் சர்வானந்ததேவி (ரஜனி), சிவானந்தன் (சிவா), கௌரி, சுந்தரகுமாரி ஆகியோரின் அன்பு அன்னையும் காலஞ்சென்ற விவேகானந்தன் மற்றும் கமலாம்பிகை, நடேசபிள்ளை, சாரதாதேவி (ராதா), குருபாததாசர் (குஞ்சாம்பி), கார்த்திகைக்குமரன் ஆகியோரின் பாசமிகு மாமியும் காலஞ்சென்ற சிறீஸ் கந்தவேள் மற்றும் சிறீசங்கரன், சிறீகஜானன், சிறீபங்கஜா, சிறீதாட்சாயினி, சிறீஜனனி, சிறீபவானி, மிதிலன், வித்யா, டிலக்ஷி, ருஸ்யந்தன், நிவேதிகா, கார்த்திகா ஆகியோரின் அருமைமிகு பேர்த்தியும் சேரன், நிதிலன், ஸ்வாதி, சௌமியா, வருண், அஸ்வின், பிரவீனா, ஷயமி, ஹரிஸ், ஸ்ருதிகா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2011) புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு செட்டிக்குறிச்சியில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சம்பில்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
பா.சிவானந்தன் (சிவா) (மகன்.)
*செட்டிக்குறிச்சி, பண்டத்தரிப்பு.* (சி/576824)(31)

## Computer Express

Institute of Information Technology
No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
0774907444, 021 222 8250, 0777222422

விசேட கட்டணக்கழிவுடன் புதிய பிரிவுகள் ஆரம்பம்

- Diploma in Microsoft Office 1000/= 3 Months
- Diploma in Desktop Publishing 1000/= 4 Months
- Diploma in Web Page Designing 1000/= 3 Months
- Diploma in Graphic Designing 1000/= 4 Months
- Diploma in Hardware Engineering 1000/= 3 Months
- Diploma in Auto CAD 1000/= 3 Months
- Diploma in Computer Science 1000/= 4 Months
- Honors Diploma in Computer Science 1000/= 3 Months

25/03/2011க்கு முன் புதியவகை பதிவுகொள்ளுங்கள்.

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

Batch i - 16.03.2011 - 9AM or 3PM
Batch ii - 18.03.2011 - 9AM or 3PM
Batch iii - 19.03.2011 - 9AM or 2PM
Batch iv - 20.03.2011 - 9AM or 2PM

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Diploma in Graphic Designing (Monday to Friday 9Am to 3.30Pm)
Diploma in Video Editing
Diploma in Acc.Package.
Course Fee 1000/=

மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்...

கம்பனிக்கணக்குகளை உள்ளடக்கி முன்னணி Accounting Software களினூடாக
**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Book + MYOB
Tally Accounting Package
Tally Date மாற்றலாமா?? முடியும்.....
Course Fee - 1000/=
ஆரம்பம் : 19-03-2011 20-03-2011 2PM

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 37 ஸ்ரீ XXXX இலக்க (240) உழவு இயந்திரமும் பெட்டியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0750401340, 0778332329

## தவறிவிட்டது

சண்டிலிப்பாயில் இருந்து பருத்தித்துறைக்குப் போகும் வழியில் TV 7882 இலக்க மோட்டார் சைக்கிள் நம்பர் பிளேற் தவறிவிட்டது.
தொடர்பு: க.தங்கவேல், கம்பாலை வீதி, சண்டிலிப்பாய். தொ.பே.: 0774033626

## WORK PERMIT

இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ், கனடா விசா ஆலோசனை
தொடர்பு: 0777498419

## WORK PERMIT

டுபாய் (விமான நிலைய சுத்திகரிப்பாளர்), ஜோர்டான் (சுப்பர் மார்க்கற்), கட்டார் விசா ஆலோசனை
தொடர்பு: 0789120678

## கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் **798**
சீட்டிழுப்பு திகதி **14.03.2011**

எழுத்து **Z** — வெற்றி இலக்கங்கள் **06 27 36 42**

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 11,330,825.60 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 02 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 12 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 333 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 653 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 16469 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 9419 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 234693 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 37057 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 11,017,660.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு **ரூபா. 11,523,595.20**

வெற்றிப் பெறும் சீட்டுகள் மோதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

| இம்முறை மோட்டார் காருக்கான வெல்லப்படாத பார்கோட் இலக்கம் | 07980327322 | 07980351063 |
|---|---|---|

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர சேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk

## கண்ணீர் அஞ்சலி



மலராய் 01.03.1980

சருகாய் 14.03.2011

செல்வி
### ரேணுகா பிள்ளைநாயகம்

வந்ததோர் செய்தியது....
வாடியதே எம் வதனம்
சிந்தையிலே நிறைந்தவளே
சீக்கிரம் நீ சென்றதேனோ
நொந்து மனம் வாடுதம்மா
நொடிப்பொழுதில் ஏன் மறைந்தாய்.....

நமசிவாயம் நந்தன்
(லண்டன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்படாதது குறித்தும் அரச தரப்பின் கவனத்துக்குக் கொண்டு வரப்படும் எனவும் சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ள இந்தப் பேச்சுகளில் கூட்டமைப்பு எம்.பிக்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருடன் சட்டத்தரணி எஸ்.கனகேஸ்வரனும் கலந்துகொள்வார்.

அரச தரப்பில் பிரதமர் டி.எம். ஜயரட்ன, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், சிரேஷ்ட அமைச்சர் ரட்னசிறி விக்கிரமநாயக்க, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, சச்சின்வாஸ் குணவர்தன ஆகியோர் கலந்துகொள்வர். (ஒ-சி)

## மரண அறிவித்தல்



### கனகசபை விக்கினராஜா

(முன்னாள் பிரதம இலிகிதர், யாழ். மாநகர சபை)

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் தற்போது இரத்மலானையை வதிவிடமாகவும் கொண்டவரும் முன்னாள் யாழ். மாநகர சபை பிரதம இலிகிதருமான கனகசபை விக்கினராஜா 14.03.2011 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இமயவல்லியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கனகசபை - மங்கையர்க்கரசி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் - மனோன்மணி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற திருஞானசம்பந்தர் மற்றும் டாக்டர் மகேஸ்வரன், கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கைலாசநாதன், சோமநாதன், இரஞ்சநாதன், ஜெயராணி (சிரேஷ்ட விரிவுரையாளர், தாவரவியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்), ஜெயமாலினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், மகாதேவா, நித்தியகல்யாணி, டாக்டர் ஜெயரஞ்சிதம், காலஞ்சென்ற கதிர்காமநாதன், மற்றும் சிதம்பரநாதன், காலஞ்சென்றவர்களான இராமநாதன், லோகநாதன் மற்றும் இலங்கைநாதன், நல்லைநாதன் ஆகியோரின் மைத்துனரும் லலிதாதேவி, செல்வமனோகரி, சிவநயனி, நந்தகுமார், அறிவழகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கயிலி, மயூரா, பிரகாஸ், பிரணன், விசாகன் ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.03.2011) புதன்கிழமை காலை 8.00 மணி முதல் கல்கிசை மகிந்த மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2 மணிக்கு இறுதிக் கிரியைகள் ஆரம்பமாகி பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு. நந்தகுமார்
(கணினி முகாமையாளர், உதயன்)

(சி/57692) (35)

தொ.பே:-0772928853

## சைக்கிள்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டனர். ஏனைய 30 பேரும் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளனர் என்று யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை 7 மணிமுதல் 9 மணிவரையான நேரப்பகுதிக்குள் இந்த 80 பேரும் பிடிபட்டனர்.

மாணவர்கள் தவிர ஏனைய 30 பேரும் யாழ். பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டன.

(ஒ-4-15)

## நான்காவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிகள், திருத்தவேலை களையொட்டி நிறுத்தப்பட்டிருந்தன. எனினும், இன்னும் அணு எரிபொருள் இதன் உள்ளே சேகரிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஜப்பானிய பிரதமர் நெட்டோகான் தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், ''அணு கதிர்வீச்சால் பெரும் அனர்த்தங்கள் விளையக்கூடிய ஆபத்து உண்டு'' என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அணு கதிர்வீச்சு கசியும் அணு உலைகள் அமைந்துள்ள குடியிருப்புப் பகுதிகளில் உள்ள மக்கள், 20 கிலோ மீற்றர் (12 மைல்) தொலை வரை வெளியேறிவிடவேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அணு உலைகளுக்கு அப்பால் 20 கிலோ மீற்றருக்கும், 30 கிலோ மீற்றருக்கும் இடைப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள், தங்கள் வீடுகளிலிருந்து வெளியேறக்கூடாது. நடமாட்டத்தை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, ஜப்பானிய அமைச்சரவைப் பிரதம செயலாளர் யுகியோ எடானோ, ''மனித உடல் நலன்களைப் பாதிக்கும் கதிர்வீச்சு குறித்தே நாம் பேசுகின்றோம். அணு கதிர்வீச்சு வெளியாகும் அணு உலைகளுக்கு அப்பால் உள்ள குடியிருப்பாளர்களும் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

''வெளிப்புறங்களில் நடமாடாதீர்கள். வீடுகளுக்குள்ளேயே இருங்கள். ஜன்னல்களை மூடி வையுங்கள். காற்றோட்டத்துக்கு வழி செய்யாதீர்கள்'' என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அணு கதிர்வீச்சு ஏற்பட்டுள்ள 30 கிலோ மீற்றர் விஸ்தீரணத்துக்கு விமானங்கள் பறப்பதற்கும் ஜப்பான் தடை விதித்துள்ளது.

ஜப்பானில்சனிக்கிழமை அணுஉலைகள் ஒன்று மற்றும் இரண்டிலும் வெடிப்பு ஏற்பட்டது. இதையடுத்து, திங்கட்கிழமை பகுஹீமா அணு உலை மூன்றில் ஹைதரஜன் வெடிப்பு ஏற்பட்டது. இதன் தாக்கம் 40 கிலோ மீற்றர் (25 மைல்) வரை உணரப்பட்டது.

நேற்று செவ்வாய்க்கிழமை அணுஉலை நான்கில்ஏற்பட்ட வெடிப்பில் ஏற்படும் அணு கதிர்வீச்சு பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துமென நிபுணர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

(இ-எ)

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கான அமெரிக்க இராஜாங்கத் துணைச் செயலர் ரொபேர்ட் ஓ பிளேக்.

''போரின் இறுதி நாள்களில் நீதிக்குப் புறம்பான செயல்கள் இடம்பெற்றமை மற்றும் துஷ்பிரயோகங்கள் குறித்துக் கட்டாயம் விசாரிக்க வேண்டும். அவற்றை யார் செய்தார்கள் என்பது ஒரு விடயமே இல்லை. அவற்றுக்குக் காரணமானவர்கள் பொறுப்புச் சொல்லியே ஆகவேண்டும்'' என்றார் பிளேக்.

கடந்த 2ஆம் திகதியும் பிளேக் இவ்வாறானதொரு அழுத்தத்தை இலங்கைக்குக் கொடுத்திருந்தார். போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச நியமங்களுக்கு நிகராக விசாரணைகளை இலங்கை அரசு நடத்தவில்லை என்றால், அது சர்வதேச போர்க் குற்ற நீதிமன்றின் முன்பாக இழுத்து வரப்படும் அபாயம் உள்ளது என்று அவர் அப்போது எச்சரித்திருந்தார்.

### கொஹன்ன முன்னிலையில் பிளேக் கருத்து

நியூயோர்க்கில் நடைபெற்ற 'ஆசிய சமூகத்தில் சிறிலங்கா' என்ற கலந்துரையாடலில் உரையாற்றும் போதே பிளேக் நேற்றைய கருத்துக்களை வலியுறுத்தினார். ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கைத் தூதுவர் பாலித கோஹன்னவையும் உடன் வைத்துக் கொண்டே அவர் தனது கருத்துக்களை வெளிப்படையாகத் தெரிவித்தார்.

அங்கு கருத்துத் தெரிவித்த கொஹன்ன; கடந்த காலங்களில் நடந்தவை குறித்துக் கவனம் செலுத்தும் அதேவேளை எதிர்காலம் குறித்தும் பார்வையைச் செலுத்த வேண்டும் இல்லையேல் எதிலாவது போய் முட்டிக் கொள்ள வேண்டி வரும் - என்றார். (உ)

## தேர்தல்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று கொழும்பு, மஹா வலி கேந்திர நிலையத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

உள்ளூராட்சி சபைத் தேர்தல் மேடைகளில் ஜே.வி.பியும், ஐக்கிய தேசியக் கட்சியும் பல்வேறு குற்றச்சாட்டுகளை அரசு மீது சுமத்தியிருந்தன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இறுதித் தேர்தல் பிரசார மாநாடு 21 மாவட்டங்களில் சிறப்பாக நடைபெற்றது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இறுதி மாநாடுகளையும் ஏனைய கட்சிகளின் இறுதி மாநாடுகளையும் ஒப்பிடும்போது பெரும் வித்தியாசம் காணப்படுகிறது. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அரசு இப்போது மக்களுக்கு சுனாமியாகிவிட்டது எனக் கூறியுள்ளார். இது போன்ற விடயங்களை மக்கள் மத்தியில் கூறி மக்களின் வரவேற்பு கிடைக்கும் என்பது கேலிக்கூத்தாகும். - என்றார்.

(ஒ-சி)

## மரண அறிவித்தல்



### செல்வன் சண்முகநாதன் தபோவரன்

[மாணவன், யா/சாவகச்சேரி சக்திஅம்மன் வித்தியாலயம்]

கட்டுக்காணி வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த செல்வன் சண்முகநாதன் தபோவரன் (தபோ) நேற்று (15.03.2011) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் சண்முகநாதன் (சிவா) - சுமங்கலா (கலா) தம்பதியரின் ஏகபுத்திரனும், சுலக்சனாவின் (2010 A/L யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி) தம்பியும் காலஞ்சென்ற பூதப்பிள்ளை - கதிராசிப்பிள்ளை, காலஞ்சென்ற பரமகுரு மற்றும் நாகரத்தினம் (அக்காச்சி) ஆகியோரின் அருமைப் பேரனும் காசிநாதர், செல்வநாயகம், வயிரவநாதன் (London), வைத்தியநாதன், திருமதி சுபத்திரா பரமேஸ்வரன் (ராசாத்தி) ஆகியோரின் பெறாமகனும் செல்வஇலட்சுமி, சிவபாக்கியம், பரமேஸ்வரி, காலஞ்சென்ற நவரத்தினம் (சந்திரன்) மற்றும் கெங்கேஸ்வரன் (கெங்கா, Colombo), சதீஸ்குமார் (அப்பன், France) ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற சுந்தரம் (A.K.S), A.K. சபாரத்தினம், A.K.துரைரத்தினம், A.K.இராசையா (ராசு) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டுக்காணி வீதி,
சாவகச்சேரி.
T.P.: 0777465288,
0773164195

தகவல்:
பூதப்பிள்ளை சண்முகநான் (சிவா)
தகப்பன் ([illegible])

## உடுவில் தென்கிழக்கு கிராம அபிவிருத்தி சங்கம்
### பாராட்டி வாழ்த்துகின்றது



நீதி பரிபாலன சேவையில் 1:10:1979இல் இணைந்து கடமையாற்றி 1.8.1994 தொடக்கம் கிராம அலுவலராக கடமையாற்றி கடந்த பத்து வருடகாலமாக உடுவில் தென்கிழக்கு பிரதேசத்துக்கு அளப்பரிய சேவை புரிந்த கிராமசேவகர்

**சிவசம்பு பாலசுப்பிரமணியம்**

அவர்கள் 1.2.2011 இல் கிராம அலுவலர் தரம் I க்கு பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும்பல பதவி உயர்வு பெற்று நீடூழிவாழ வாழ்த்துகின்றோம்.

நிர்வாகிகள்:
உடுவில் தென்கிழக்கு கிராம அபிவிருத்திசங்கம்.
J/183, கற்பகபிள்ளையார் கோவிலடி, உடுவில்.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா தம்பிப்பிள்ளை

ஞானாசாரியர் வீதி, துன்னாலை மேற்கு கரவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற வல்லிபுரம் தம்பிப்பிள்ளை (முன்னாள் அதிபர், யா/ வேலாயுதம் மகாவித்தியாலயம்) அவர்களின் வாழ்க்கைத் துணைவி திருமதி செல்லம்மா தம்பிப்பிள்ளை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் Dr.கதிரவேற்பிள்ளை (கால்நடை வைத்தியர்), திருமதி மகேஸ்வரி மகேந்திரா (முன்னாள் உப அதிபர், யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்), திரு தங்கவேல் (குடிவரவு அலுவலர், ஆஸ்திரேலியா), திருஞானவேல் (கணினி நெறியாளர், U.K முன்னாள் அலுவலர் மத்திய வங்கி Sri Lanka), திருமதி தனேஸ்வரி அருள்ஞானசுந்தரம் (முன்னாள் ஆசிரியை, கொ/ பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி), திருமதி சிவனேஸ்வரி முத்துக்குமாரசாமி (விரிவுரையாளர், Defence Academy, Washington), செல்வி. இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருமதி மல்லிகா கதிரவேற்பிள்ளை, காலஞ்சென்ற சுப்பிரமணியம் மகேந்திரா (Attorney at - Law), Dr.பகீரதி தங்கவேல் (G.P. Australia), திருமதி கலாநிதி ஞானவேல் (முன்னாள் ஆசிரியை), திரு .கனகசுந்தரம், அருள்ஞானசுந்தரம் (Quantity Surveyor, Australia), திரு. தம்பித்துரை முத்துக்குமாரசாமி (Attorney at - Law, Amnesty International, Washington) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி சிவகாமி இராமலிங்கதேவர் (முன்னாள் ஆசிரியை, யாழ். ஞானாசாரியர் கல்லூரி) அவர்களின் அன்புச் சகோதரியும், காயத்ரி, சனாதனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.03.2011) வியாழக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 4 மணிக்கு துன்னாலை வேரோண்டை இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானாசாரியர் வீதி,
துன்னாலை மேற்கு, கரவெட்டி.
TP:-021 226 2067, 0777667136. (சி/576835) (35)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களி லும் தெளிவான வானிலை நிலவும் சாத்தியம் உள்ளது.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை ப யாழ்ப்பாணம்
பங்குனி 15, 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 7029.02↓
மிலங்கா(MPI) 6608.72↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1290.78Mn
பங்குகளின் அளவு(No.) 43.31Mn
வியாபாரம்(No.) 12777
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
லங்கெம் சிலோன் 63.50
குய்ஜெ 139.00
கிற்றஸ் 23.40
ஓன்னலி 293.40
சிற்றஸ் 75.10
குறைவு(Top 5 losers) - விலை Rs.
ஈ பி கிறியேசி 2810.00
கார்டியன் இன்வெஸ்ர்மன்ர் 1600.00
ரீ சேவிஸ் 810.00
பேருவளை 113.60
லங்கா அசோக் 2700.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

### நாடு முழுவதும் நேற்று நடைபெற்ற

# ஆசிரியர் சங்க அடையாள வேலை நிறுத்தத்தால் யாழ். பல்கலைக்கழக சகல பணிகளும் முடக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் நேற்றுக் கைக்கொண்ட அடையாள வேலை நிறுத்தம் காரணமாகப் பல்கலைக்கழக செயற்பாடுகள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்தன.

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் விடுத்த அழைப்பை அடுத்து அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த ஆசிரியர்கள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பான கூட்டம் ஒன்று நேற்று யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தின் பின் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த யாழ். பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத் தலைவர், பேராசிரியர் செ. இளங்குமரன்:-

சம்பள உயர்வு தொடர்பாக தமது கோரிக்கைகளை முன்வைத்து இன்று (நேற்று) அடையாள வேலை நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதாகவும், அரசு இதனைக் கருத்தில் எடுக்காது விடுமானால் தொடர்ச்சியாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட எண்ணியுள்ளோம் எனவும் விரிவுரையாளர்களுக்கான சம்பள உயர்வு கடந்த வரவு - செலவுத்திட்டத்தில் குறிப்பிடப் பட்டதைப் போன்று வழங்கப்பட வில்லை. இதுவரை காலமும் பல்கலைக்கழகங்களில் 5 வருடங்கள் சேவையாற்றிய விரிவுரையாளர்களுக்கு வாகன இறக்குமதிக்கான வரி விலக்களிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது இதற்கு வரி அறவிடப்படுகின்றது.

பெரும்பாலான ஆசிரியர்கள் வெளிநாடுகளில் அதிக நிதியைச் செலவுசெய்து தமது மேற்படிப்பைப் பெற்று திரும்பியுள்ளனர். இவர்களின் தகுதி நிலைக்கேற்ப அரசு சம்பளம் வழங்குவதில்லை-

பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டு வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள நிலையில் எமக்கான சம்பள உயர்வைக் கோரி நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்களின் ஆசிரியர் சங்கத்தின் இந்த அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு நாமும் ஆதரவு தெரிவித்து, இதனை முன்னேடுக்கின்றோம் - என்றும் அவர் கூறினார்.

இதேவேளை இலங்கையில் உள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களினதும் ஆசிரியர் சங்கத்தினர் தமக்கான சம்பள அதிகரிப்பைக் கோரி நேற்றைய தினம் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதற்கிடையில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தைச் செய்தியாக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் பல்கலைக் கழக நிர்வாகப் பிரிவினரால் தடுத்து நிறுத்தப்பட்டதாகவும், பின்னர் ஆசிரியர் சங்கத்தினர் பல்கலைக்கழகத்துக்கு வெளியில் வைத்தே ஊடகவியலாளர்களுக்கு தமது போராட்டம் தொடர்பான தகவல்களை வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-10-4-319)



பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்கள் தமது சம்பளத்தை உயர்த்துமாறு கோரி நேற்று நாடு முழுவதுமுள்ள பல்கலைக் கழகங்களின் முன்னால் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். கொழும்பு நாவல திறந்த பல்கலைக்கழகத்துக்கு முன்னால் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது....

# மாங்குளம் பாடசாலையிலிருந்து படையினர் நேற்று வெளியேறினர்

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட மாங்குளம் மகா வித்தியாலயம் நேற்று இராணுவத்தினரால் பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது என மாங்குளம் இராணுவப் பொறுப்பதிகாரி கேணல் தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாக மாங்குளம் மகா வித்தியாலயத்தில் இராணுவத்தினர் நிலை கொண்டிருந்தமை தெரிந்ததே. இந்நிலையில் நேற்று பாடசாலையை விட்டு இராணுவத்தினர் வெளியேறியதுடன் பாடசாலை நிர்வாகத்தினிடம் ஒப்படைக்கப்பட்டது.

குறித்த பாடசாலை கையளிக்கும் நிகழ்வில் வவுனியா நகர சபை உப தலைவர் எம்.எம்.ரதன், பாடசாலை அதிபர், துணுக்காய் வலயக் கல்வி அதிகாரிகள் உட்பட பொது மக்கள் கலந்துகொண்டனர்.

பாடசாலையை உரியவர்களிடம் கையளித்தமைக்காக அப்பிரதேச மக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் இராணுவத்தினருக்கு நன்றி தெரிவித்தனர். பாடசாலை வெகுவிரைவில் பழையபடி ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-சி)

## வரணி ஆலய வளாகத்தில் பூசகர் சடலம் மீட்பு

வரணியிலுள்ள ஆலய வளாகம் ஒன்றிலிருந்து தூக்கில் தொங்கிய நிலையில் ஆலயப் பூசகர் ஒருவரின் சடலத்தை கொடிகாமம் பொலிஸார் நேற்று முன்தினம் மீட்டுள்ளனர்.

சாவகச்சேரி வடக்கை சேர்ந்த குணானந்த சர்மா ஹரிகரசர்மா (வயது 22) என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

# மன்னாரில் ரூ.450 மில்லியன் செலவில் விரைவில் புதிய கைத்தொழில் பேட்டை

மன்னார், மார்ச் 16

மன்னார் மாவட்டத்தில் 450 மில்லியன் ரூபா செலவில் கைத்தொழில்ப் பேட்டை ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

- இவ்வாறு கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர மண்டபத்தில் தையல் பயிற்சிகளை நிறைவு செய்து கொண்ட 400 யுவதிகளுக்கு சான்றிதல் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

மன்னார் மாவட்டத்தில் ரூ. 10 கோடியும், வவுனியா வடக்கில் ரூ. 100 கோடியும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ரூ. 300 கோடியும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காகச் செலவிடப்பட்டுள்ளன.

இதேவேளை, மதவாச்சி- மடு முதற்கட்ட ரயில் பாதை மற்றும் மடு-தலைமன்னார் ரயில் பாதை புனரமைப்புக்கு 3ஆயிரத்து 500 மில்லியன்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதற்கான முதற்கட்ட பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

வன்னி மாவட்டத்தை கைத்தொழில்பேட்டைகளைக்கொண்ட கிராமங்களாக மாற்றும் திட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் 2ஆயிரம் யுவதிகள் வேலைவாய்ப்பைப் பெறவுள்ளனர். இவர்கள் மாதாந்த வருமானமாக 15 ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொள்வர்.

மன்னார் மாவட்டத்தில் 10 ஆயிரம் இளைஞர்- யுவதிகளும், முல்லைத்தீவில் 15 ஆயிரம் இளைஞர் - யுவதிகளும், வவுனியாவில் 7 ஆயிரம் இளைஞர்- யுவதிகளும் தொழிலை எதிர்பார்த்துள்ளனர் என்றும் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

அதேவேளை, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் அரசின் 10 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் தலைமன்னார் பிரதான பாதை 4கிலோ மீற்றர், ஓலைத்தொடுவாய் 5 கிலோ மீற்றர், தோட்ட வெளி- மீன்வாடி பாதை 3.65 கிலோமீற்றர், பேசாலை - வாயாடிப் பண்ணை 2 கிலோ மீற்றர், கரிசல் 2.8 கிலோ மீற்றர் பாதைகளையும் புனரமைப்பு செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கூறினார்.(ஓ-சி)

# நிகழ்வுகள்

**பாடசாலையில் கட்டடம் திறப்பு**

நவாலி, மார்ச் 16

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் கட்டடங்கள் திறப்பு விழாவும், மெய்வன்மைப் போட்டியும் இன்று பகல் 12.30 மணிக்கு பாடசாலை அதிபர் ரூ. சிவகடாற்சம் தலைமையில் நடைபெறும்.

விருந்தினர்களாக மாகாணக் கல்விப்பணிப்பாளர், வலயக் கல்விப்பணிப்பாளர் சண்டிலிப்பாய், கோட்டக்கல்விப் பணிப்பாளர், உலக உணவு ஸ்தாபன சிரேஷ்ட திட்டமிடல் அலுவலர், கட்டடத் திணைக்கள பொறியியலாளர், யுனிசெப் நிறுவன பொறியியலாளர், செஞ்சிலுவைச்சங்க மேலதிகப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொள்வர்.

**ஆன்மீகச் சொற்பொழிவு**

யாழ்ப்பாணம் - 16

கொக்குவில் சின்மயா மிஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமை வயாவிழான் மகாவித்தியாலயம், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் ஆன்மீகச் சொற்பொழிவுகளைக் கான பிரம்மச்சாரிய றூக்கிரத் சைதானியா சுவாமிகள் நிகழ்த்தவுள்ளார்.

வயாவிழான் மகாவித்தியாலயத்தில் காலை 8 மணிக்கு 'மனதை வெல்வோம், உலகை வெல்வோம்' எனும் தலைப்பிலும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் 'உன்னால் முடியும் நம்பு' எனும் தலைப்பிலும் -

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் வெற்றி [illegible] சொற்பொழிவுகள் இடம்பெறுவதால் [illegible] பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பிரம்மச்சாரி றூக்கிரத் சைதானியா சுவாமிகள் கேட்டுள்ளார். ( ஓ-313)

**முன்பள்ளி கட்டடத் திறப்பு விழா**

போரூட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட சிந்துபுரம் காந்திஜி முன்பள்ளிக் கட்டடத் திறப்பு விழா நாளை வியாழக்கிழமை பி.ப 3.30 மணிக்கு சிந்துபுரம் காந்திஜி சனசமூக நிலையத்தின் தலைவர் ப. சோழன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிழ்வில் விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், வலி மேற்கு சங்கானைப் பிரதேச செயலர் திருமதி தே. பாபு, 'போரூட்' நிறுவனத்தைச் சேர்ந்த செல்வி நந்தினி நாகராஜா, பிரதேச செயலர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோர் கலந்து கொள்வர்.

முன்பள்ளிக் கட்டடத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் திறந்துவைப்பார். (ஓ-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான் தாக்குதலை முறியடிக்க உதவி கோரிய இலங்கை

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தின்போது வான் பாதுகாப்பு முறைமையை பலப்படுத்துவதற்காக அமெரிக்காவிடம் இலங்கை உதவி கோரியதாக விக்கிலீக்ஸ் இணையத் தளம் தெரிவித்துள்ளது.

2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தை புலிகளின் விமானங்கள் தாக்கியதை இந்தியா வழங்கிய ராடர்கள் மூலம் தடுக்கமுடியாமல் போனதையடுத்து அமெரிக்காவிடம் உதவி கோரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2007 மார்ச் 30 ஆம் திகதி அப்போதைய அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஒபிளேக்கை அழைத்த பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, எதிர்காலத்தில் விடுதலைப்புலிகளின் வான் தாக்குதல்களுக்கு எதிராக எவ்வாறு வான் பாதுகாப்பைப் பலப்படுத்தலாம் என ஆராய்வதற்காக அமெரிக்க இராணுவக் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டும் என விருப்பம் தெரிவித்தாராம்.

கட்டுநாயக்க விமானப் படைத்தளத்தின் மீது தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானங்கள் தாக்குதல் நடத்திய சிலநாள்களில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

அவ்வேளையில் புலிகளின் விமானங்களை இந்திய ராடர்கள் கண்டறியத் தவறியதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. எனினும் இலங்கை அரசாங்க அதிகாரிகள் அதை மறுத்திருந்தனர்.

இந்த் நிலையில், இந்தியாவின் ராடர்கள் புலிகளின் வான் அச்சுறுத்தலை தடுக்க போதுமானவை அல்ல என அமெரிக்கத் தூதுவரிடம் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்ததாக 2007 ஏப்ரல் முதலாம் திகதி கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தினால் அனுப்பப்பட்ட இரகசிய கேபிள் குறிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(தமிழ்மிரர்)(ஒ-10)

## ரூ. 30 லட்சம் லஞ்சம் கோரும் அமைச்சர்

கொழும்பு பேலியகொட பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படுகின்ற நவீன மீன் விற்பனைக் கட்டடத் தொகுதியில் கடையொன்றைப் பெற்றுக் கொடுக்க இலங்கையின் மீன்பிடித்துறை அமைச்சர் ஒருவர் 30 லட்சம் ரூபாவை லஞ்சமாகப் பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு புறக்கோட்டை மீன் கடைக் கட்டடத் தொகுதியில் கடைகளை வைத்திருந்த உரிமையாளர்களும், பேலியகொடயில் புதிதாக அமையப் பெறும் கட்டடத் தொகுதியில் புதிய கடையொன்றைப் பெற்றுக் கொள்வதாயின் இவ்வாறு லஞ்சம் வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகப் பிரபல மீன் வர்த்தகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மீன்பிடித் திணைக்களத்தில் உயர்ப் பதவி வகிக்கும் அமைச்சரின் சகோதரர் மூலமே இந்த லஞ்சப் பணம் கைமாற்றப்படுகிறது.

புறக்கோட்டை சென்.ஜோன் மீன் கடை கட்டடத் தொகுதியை அங்கிருந்து அகற்றிவிட்டு பேலியகொட பிரதேசத்தில் அரசால் அமைக்கப்பட்டு வரும் புதிய மீன் வர்த்தகக் கட்டடத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் 90 வீதம் வரை தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

(பதிவு)(ஒ-10)

இணையச் செய்திகள்

## இலங்கை வான் பரப்பும் கண்காணிக்கப்படும்

ஜப்பானில் ஏற்பட்ட அணுக் கதிர்வீச்சுக் கசிவினால் இலங்கைக்கு ஆபத்து இல்லை என இலங்கை அணுசக்தி முகவரகம் வலியுறுத்தியுள்ளது.

எனினும் இலங்கை வான் பரப்பில் கதிர்வீச்சு பொருளிகள் எதுவும் காணப்படுகிறதா என்பதை அறிவதற்காக இன்று முதல் வான்பரப்பை காண்காணிக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இக்காண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என இலங்கை அணு சக்தி முகவரகத்தின் தலைவர் கலாநிதி விமலதர்ம அபேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

(தமிழ்மிரர்)(ஒ-10)

## 'வார உரைகல்' ஆசிரியர் கைது

காத்தான்குடியிலிருந்து வெளிவரும் வார உரைகல் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எம்.ஐ.றஹ்மத்துல்லா நேற்று காத்தான்குடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணியுடன் தேர்தல்பிரச்சார நடவடிக்கைகள் முடிவுற்ற போதிலும் இவ் வார உரைகல் பத்திரிகையில் காத்தான்குடி நகர சபைத் தேர்தலில்போட்டியிடும் சுயேச்சைக் குழுவொன்றுக்கு ஆதரவாக விளம்பரத்தை பிரசுரித்தமை காரணமாகவே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (தமிழ்மிரர்)(ஒ-10)

# புலிகள் மீதான தடையை எதிர்த்து கையெழுத்துப் போராட்டம் நடத்தலாம்

### சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு

விடுதலைப் புலிகள் இயக்கம் மீது இந்தியாவில் விதிக்கப்பட்டிருக்கும் தடையை எதிர்த்து கையெழுத்துப் போராட்டம் நடத்தலாம் என்று சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கருத்துரிமை இயக்கம் எனும் அமைப்பின் சார்பில் புகழேந்தி தங்கராஜ் என்பவர் சென்னை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின் போதே பிரஸ்தாப தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட இயக்கமொன்றுக்கு ஆதரவாக போராட்டம் நடாத்துவதோ, பிரச்சாரம் செய்வதோ குற்றம் இல்லையென்று பொடா சட்டத்தின் கீழான வழக்கொன்றில் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கக்கோரும் கையெழுத்து இயக்கம் நடாத்துவதில் தவறில்லை என்று சென்னை உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் அவ்வாறு கையெழுத்து இயக்கம் நடத்த தமிழ்நாடு காவல்துறை விடுத்திருந்த தடைஉத்தரவையும் நீதிமன்றம் இரத்துச் செய்துள்ளது. (தமிழ்வின்)(ஒ-10)




*ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனில் பங்குகொள்ளும் வகையில் நாடு கடந்த தமிழீழ அரசின் சார்பாக அதன் பிரதமர் வி.உருத்திரகுமார் ஐ.நாவுக்கான ஜப்பானிய உயர்ஸ்தானிகரூடாக ஜப்பானியப் பிரதமருக்கு நேற்றுமுன்தினம் மனு ஒன்றைக் கையளித்தபோது....*

*(தமிழ்வின்) (ஒ-10)*

## தனியார் துறையினருக்கும் விடுமுறை வழங்க வேண்டும்

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தினத்தன்று தனியார் துறை ஊழியர்களுக்கும் ஒருநாள் விடுமுறை வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது.

தற்போது வழங்கப்பட்டுள்ள 2 மணித்தியால விடுமுறை ஒருவர் கொழும்பு போன்ற இடங்களிலிருந்து தான் பதிவு செய்யப்பட்டுள்ள இடங்களுக்குச் சென்று வாக்களிக்க போதுமானதல்ல என ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கும் வாக்களிப்பதற்காக விடுமுறை வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

(தமிழ்மிரர்)(ஒ-10)

# இலங்கையின் கடலையும் மண்ணையும் கொள்ளையடிக்கும் அரச குடும்பம்

இலங்கையின் கடற்பரப்பில் இருந்து மணலையும் சட்டவிரோதமாக அகற்றி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் சட்டவிரோத வர்த்தகத்தில் அரசின் உயர் குடும்பம் ஈடுபட்டிருப்பதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

காணி அபிவிருத்தி மற்றும் சமநிலைப்படுத்தல் அதிகார சபையினால் கடலிலிருந்து அகழப்படும் மணலையே அவர்கள் அவ்வாறு திருட்டுத் தனமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருவதாக பிரஸ்தாப தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதிலும் வெளிநாடுகளில் ஒரு கியூப் மணல் 90 டொலர்கள் வரை விலைபோகும் நிலையில் அரச குடும்பம் அதனை 60 தொடக்கம் 70 டொலர்கள் வரையான குறைந்த விலைக்கே விற்பனை செய்வதாகவும் அத் தகவல் வட்டாரங்களிலிருந்து மேலும் தெரியவருகின்றது.

இதற்கு முன்பும் கிரிந்தை பிரதேசத்தில் இருந்து அவ்வாறு மணல் அகழ்வு செய்து ஏற்றுமதி செய்ய எடுக்கப்பட்ட முயற்சிகள் அப்பிரதேச மீனவர்களின் பலத்த எதிர்ப்பின் காரணமாக கைவிடப்பட்டிருந்தன. அவ்வாறு கடல் பிரதேசத்தில் மண் அகழப்படுவதால் மீன் வளம் குறைந்து விடும் அபாயம் இருப்பதாக சூழலியலாளர்கள் அபாய எச்சரிக்கை விடுத்துள்ளதையும் பொருட்படுத்தாது பெரும் குடும்பம் தமது பைகளை நிரப்பும் கைங்கரியத்தில்ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (தமிழ்வின்)

# கொழும்பு விடுதிகளில் கைதான 48 தமிழருக்கு விளக்கமறியல்

கொழும்பில் விடுதிகளில் தங்கியிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 48 தமிழர்களை எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

ஆண்கள், பெண்கள், சிறார்கள் உட்பட 52 பேரை கொழும்பு பிரதம நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி முன்னிலையில் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் ஆஜர்படுத்தினர்.

கொழும்பிலும் நீர்கொழும்பிலுமுள்ள விடுதிகளிலிருந்து இவர்கள் கைதுசெய்யப்பட்டதாகவும் இவர்கள் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்கு செல்ல முயன்றதாகக் கிடைத்த தகவலையடுத்தே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றதாகவும் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறார்கள் நால்வரையும் விடுதலை செய்த நீதிவான் ஏனையோரை எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(பதிவு)(ஒ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வான் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் படுகாயம்

தென்மராட்சி, மார்ச் - 16

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக ஹைஎஸ் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் படுகாயமடைந்தார். நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் வவுனியா மில் வீதியைச் சேர்ந்த நவரத்தினராசா கிருஷாந்த் (வயது 26) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

ஆபத்தான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இந்த இளைஞர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அன்புலன்ஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டார். பிரஸ்தாப இளைஞர் அணிந்திருந்த கெல்மட் கழன்று பறந்ததால் தலையில் பலத்த காயமேற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

## வீடு விற்பனைக்கு

நாவலர் வீதி, நல்லூருக்கு அருகில் அமைந்துள்ள 1½ பரப்புக் காணியுடன் சேர்ந்த சுற்றுமதிலுடன் புதிய வீடு சகல வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

(1209) (37) தொடர்புக்கு - T.P - 0777860456

## தேவை

சப்ளையர்கள், சமையலறை உதவியாளர்கள் தேவை.

தொடர்பு - லிங்கம் கிறீம் ஹவுஸ்,
119, கஸ்தூரியார் வீதி, யாழ். (1621) (37)

## ETUMON EDUCARE STUDY IN INDIA

மிகக்குறைந்த கட்டணத்தில் உங்கள் உயர்கல்வியைப் பெற்றிடுங்கள்

BSC - Bio Technology
Genetics
Micro Biology
Bio Chemistry
Nursing

BCA, BCom, BBM, BA. MSC, MBA.

தொடர்புகளுக்கு - சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்.
(Rtd.Principal Palaly Teachers Training College
Managing Director 'Etumon Educare!
T.P.NO - 0212226626, 0770690202

## CHEMISTRY CENTRE

500, பலாலி வீதி (ஆலடிச் சந்தி) கந்தர்மடம்

**ORGANIC**
Mon, Thurs 6 - 7 pm

**PHYSICAL**
Mon, Thurs 7 - 8 pm

By அன்பு

(1045) (37)

## மரண அறிவித்தல்கள்

### குணநாதசர்மா ஹரிகரசர்மா

சாவகச்சேரி வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குணநாதசர்மா, ஹரிகரசர்மா நேற்று முன்தினம் (14.03.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் குணநாதசர்மா - கமலபூபதி தம்பதயரின் அன்பு மகனும், கஜேந்திரசர்மா, கஜானந்தன், கஜாலினி, கௌசிகா, கம்சா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 15.03.2011 புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10 மணிக்கு வேம்பிராய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாவகச்சேரி வடக்கு, மீசாலை. T.P. 0776516614
தகவல் - குணநாதசர்மா (தந்தை)

### அம்பலவாணர் சண்முகநாதன்

சிறுப்பிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் சண்முகநாதன் நேற்று (15.03.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் மற்றும் குணவதியின் அன்பு மகனும், கோமதியின் அன்புக் கணவரும் டிலானி, கீர்த்திகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிதம்பரநாதன், புஷ்பநாதன், புனிதவதி, அருந்ததி, காலஞ்சென்ற விமலநாதன் ஆகியோரின் சகோதரனும் கலாரஜனி, ஜெயலட்சுமி, சிவலிங்கம் (G.M. நீர்வேலி M.P.C.S) சிறீதரன் (கல்வித் திணைக்களம், வேலணை), செல்வகுமார், சுமதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16.03.2011) புதன்கிழமை பி.ப. 2மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிந்துசிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி. (சி-576845) (37)
தகவல்; குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய மாணவன் செல்வன் சண்முகநாதன் தபோவரன் நேற்று (15.03.2011) செவ்வாய்க்கிழமை காலமானதையிட்டு அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
யா/சக்தி அம்மன் வித்தியாலயம்,
சாவகச்சேரி.

(576843) (37)

## மரண அறிவித்தல்கள்

### அம்பலவாணர் நடராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியர்)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் நடராஜா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) (15.03.2011) செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இணுவில் மேற்கு, சுன்னாகம்.
தகவல் - குடும்பத்தினர்.

### சிற்றம்பலம் துரைராசா



தொண்டமானாறு கெருடாவில் தெற்கு மாணபந்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி சிவன் கோயிலடியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சங்கீத பூஷணம் சிற்றம்பலம் துரைராசா (பகுதி நேர ஆங்கில ஆசிரியர் சிதம்பராக் கல்லூரி) (15.03.2011) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - தங்கச்சிப்பிள்ளையின் ஏக புத்திரனும் காலம் சென்றவர்களான வெற்றிவேலு - அன்னபூரணியம்மாவின் இளைய மருமகனும், சிவகாமியம்மையின் (திருநெல்வேலிக் குஞ்சக்கா) அன்புக் கணவரும், காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் திருமதி இராசரத்தினம் - சின்னத்தங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரரும், திருமதி க.சௌந்தரநாயகி, காலஞ்சென்ற வெ.சடாட்சரம் மற்றும் அ.தவமணி, வெ.விக்னேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் பரமேஸ்வரன் (கனடா), காலஞ்சென்ற புவனேஸ்வரன் மற்றும் யோகேஸ்வரன் (கனடா), இராஜேஸ்வரன் (கனடா), சத்தியேஸ்வரன் (கனடா), பாஸ்கரநாதன் (கனடா), விஜிதாம்பரநாதன் (கனடா), பாஸ்கரபவானி இரத்தினகாந்தி (கனடா), விஜயலதானி தெய்வேந்திரராஜா (கனடா), நித்தியவாணி, நித்தியவராகினி, செந்தூரன், அரவிந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பத்ம நாதன் (ஜேர்மனி), கணேசநாதன் (உடற்கல்விப் பணிப்பாளர், யாழ்.பல்கலைக்கழகம்), சயந்தநாதன் (கனடா), நரேந்திரநாதன் (ஆஸ்திரேலியா), கலைவாணி சிவதாசன் (ஆஸ்திரேலியா) விமலதாஸ் (திருநெல்வேலி) ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (15.03.2011) செவ்வாய்க்கிழமை அவரது திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

85, சிவன்கோயிலடி,
திருநெல்வேலி.
T.P - 0776057222 (1260) (37)

தகவல்:
சிவகாமியம்மை (குஞ்சு - மனைவி)
கணேசநாதன் (பெறாமகன்)
விமலதாஸ் (பெறாமகன்)
விஜயலதானி தெய்வேந்திரராசா (மருமகள்)

## கணனி விற்பனைக்கு

*Full Set Computers*

| | |
|---|---|
| PIV 1.7 GHZ | 15750/= |
| PIV 2.0 GHZ | 16750/= |
| PIV 2.4 GHZ | 18750/= |
| PIV 3.0 GHZ | 21750/= |

Core 2 Duo Laptop
Dlcore 3.06 GHZ
I Core 3 Laptop

Pen Drives
650 VA UPS
Colour Printers
Laser Printers

Three Years Warranty 7.2 MbpS Dungel 3G

162, Main Street, Jaffna.
TP. NO :- 021-222-1417 - 0750698608
Sky Computer System.

## மரண அறிவித்தல்

### திருமதி சோமசுந்தரம் புவனேஸ்வரி (கண்ணக்கா)



கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் புவனேஸ்வரி 14.03.2011 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சங்கீதபூஷணம் சண்முகப்பிரியா சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பஞ்சாட்சரம் மற்றும் மகேஸ்வரன், ஜெகதீஸ்வரி, புவனசுந்தரம், தட்சணாமூர்த்தி, காலஞ்சென்ற சோதிலிங்கம் மற்றும் ராஜேஸ்வரி, நகுலேஸ்வரி காலஞ்சென்ற திருக்கேதீஸ்வரன் மற்றும் கௌரி, குமரகுருபரன், முருகதாஸ் ஆகியோரின் அன்புத்தாயும் புவனேஸ்வரி, சுமித்திரா, குமாரசிங்கம், இராஜேஸ்வரி, நந்தினி, இந்திராணி, தேவராசா, விஜயகௌரி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், பொன்னம்மா, மனோன்மணி ஆகியோரின் மைத்துனியும் மகேஸ்வரி, காலஞ்சென்ற காந்திமதி மற்றும் நளாயினி, தையல்நாயகி ஆகியோரின் சகோதரியும் பாலமுரளி, பாலவேணி, பாலநந்தினி, பாலரூபன், பாலவிஜி, செந்தூரன், மயூரன், அனுஷா, தனுஷா, ஆரூரன், சயந்தன், கஸ்தூரி, துசாந், சண்முகப்பிரியா காலஞ்சென்ற நிசாந் மற்றும் வாசுகி, வாகீசன், நர்த்தனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிரதிக்சன், புவிதன், டனு, அபிஷாளினி, பிரவீன், தர்மிஷா, மிதுளன், ஜோன்சன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி,
தொ.பே: 021 222 6168 (48,20,23)
தகவல் : குடும்பத்தினர்

## யாழ் நகரில்

வரும் புதுவருடத்தை முன்னிட்டு

BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

To Study in UK(London), Canada, Australia,Newzealand Hot.... Hot courses for easy Student visa are open now

100% நல்ல சம்பளம்

FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT
FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)
FOUNDATION DIPLOMA IN MANAGEMENT

எங்கு சென்றாலும் நல்ல வேலை வாய்ப்பு

- இக் கற்கை நெறிகளின் Diploma & Degree பட்டப்படிப்பை 100% விசா உத்தரவாதத்துடன் நீங்கள் மேற்குறிப்பிட்ட நாடுகளில் கற்கலாம்.
- உங்களுக்கான விசா உத்தரவாதத்தினை இத்துறையில் பல வருட அனுபவமுள்ள எமது சட்டத்தரணிகள் உறுதிசெய்வார்கள்.

Qualification: G.C.E.[O/L] Plus IELTS 5.5

After G.C.E. A/L or O/L → 6 Months / 3 Months Foundation Diploma @ BCHS → 2½ Years Diploma & Degree குறைந்தது 3 வருடத்தில் நீங்கள் ஒரு பட்டதாரி தகுதியான வேலையுடன்

IELTS (International English Language Testing System)
(Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months
We Gurantee Minimum 6.5 Band upwards

Diploma in English [2 Months] Advanced Diploma In English [2 Months]

100 % பயிற்சி

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர்கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைக்கேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புகளும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புகள் உண்டு

100 % வெற்றி

புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.

பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் 100 % உறுதி.

SPONSOR/SETTLEMENT VISA - EXAMS

பிரித்தானியா அரசாங்கத்தினால் அங்கிகரிக்கப்பட்ட நிரந்தர வதிவிட விசாவை பெற்றுக் கொள்ளுவதற்கான ஆங்கிலப் பரீட்சை தொடர்பான ஆலோசனைகளும், அதற்கான பரீட்சைகளும் (A1, PTE, ESOL) எங்களால் வெற்றிகரமாக நடாத்தப்படுகிறது.

Duration : 2 Months

புதிய பிரிவு 15-04-2011

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913 0714299935

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
திகதி 15-04-2011 காலை : 10.00 மணி
16-04-2011 மாலை : 03.00 மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



ரன் வன் Run one

உங்கள் தங்க நகைகளை இலவசமாக மீட்பதற்கு இப்பொழுது பொன்னான வாய்ப்பு!

| | |
|---|---|
| மாதாந்தம் ரூ.10,000 வரை வெல்லுங்கள் | 3 மாதங்களுக்கு ஒரு தடவை ரூ.100,000 வரை வெல்லுங்கள் |

உங்கள் தங்க நகைகளுக்கு ஆகக் கூடிய கடனும் ஆகக் குறைந்த வட்டியும்!

24 K ரூ. 34,500/=

மாதாந்த வட்டி 1.16%

(011) 2374100

யூனியன் வங்கி

# யார் சுக்கிரனிலிருந்து வந்தாலும் அதிர்ஷ்டச் சக்கரம் சுழல்வது உங்கள் பக்கமே

HNB PATHUM VIMANA 2011

வாராந்த இலட்சாதிபதி சீட்டிழுப்பில் வாராந்தம் ரூ. 1 இலட்சத்தை வெல்லுங்கள்.
மாதாந்த மில்லியன் வெற்றியாளர் சீட்டிழுப்பில் மாதாந்தம் ரூ. 1 மில்லியனை வெல்லுங்கள்.

வாராந்த இலட்சாதிபதி மற்றும் மாதாந்த மில்லியன் வெற்றியாளர் சீட்டிழுப்புகளுக்குத் தகுதி பெற வேண்டுமாயின், சீட்டிழுப்பிற்கு முந்திய ஒரு கலண்டர் மாதத்திற்காவது உங்கள் சேமிப்பு, சிறுவர் சேமிப்பு அல்லது நடைமுறைக் கணக்கில் ரூ.10,000ஐ குறைந்தபட்ச மீதியாக வைத்திருங்கள்.




## மூவுலகையும் கவர்ந்திடும்

ஆனால் கிடைப்பது உங்களுக்கே




மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள HNB ... தொடர்புகொள்ளுங்கள் அல்லது HNB தலைமை அலுவலகம்
HNB டவர்ஸ், 479, ரிபீ ஜயா மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 2661974, 2661957/9 தொலைநகல்: 2664892
மின்னஞ்சல்: depmobilize@hnb.lk இணையத்தளம்: www.hnb.net

பிச் ரேட்டிங் AA- (lka) நிபந்தனைகளுக்கு உட்பட்டது

HNB உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீர்க் கல்லைக் கரைக்கும் அற்புத பானம் இளநீர்

(சென்றவாரத் தொடர்ச்சி)



தண்ணீர்த் தாகத்தை மட்டுமல்ல நோய்கள் ஏற்படாமல் தவிர்க்கவும் உதவுகிறது இளநீர்.இளநீரைத் தினமும் அருந்தி வந்தால் அது சிறுநீர்க் கல்லைக் கரைக்கும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பிலிப்பைன்ஸில் மண்வளங்கள் மற்றும் சுரங்கவியல் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையொன்றில் எழுபது மணித்தியாலங்கள் வரையில் தேங்காயின் நீரில் ஊறவிடப்படும்போது கனியப் படிவங்கள் சிறுசிறு துண்டுகளாக உடைந்து போவதோடு கரைந்தும் போகின்றன என்பது தெளிவான உண்மையாகும்.

இவற்றின் அடிப்படையிலேயே மருத்துவ நிபுணர் எப்பெமுயோ மெக்கலல்கிரே இளநீரைப் பயன்படுத்தி சிறுநீர்க் கற்களைக் கரைத்துவிடும் ஆராய்ச்சியில் தனது கவனத்தைச் செலுத்தி வெற்றி கண்டுள்ளார்.

பொதுவாக தீவு வாசிகளான பிலிப்பைன்ஸ் நாட்டவர்களின் அன்றாட உணவு வகைகளில் உப்புத்தன்மை அதிகம் கொண்டுள்ள உணவுகள் இணைந்து கொள்கின்றன. அதன் காரணமாகவே அவர்கள் மத்தியில் சிறுநீர்க்கல் உருவாகும் நிலைப்பாடும் அதிகரித்துக் காணப்படுகிறது. இந்த நோயாளர்களுக்கு சிறுநீர்க்கற்களைக் கரைப்பதற்கு மருத்துவர் மெக்கலல் கிரே நேரடியாக இளநீரை அருந்தக் கொடுப்பதில்லை.

உடன் பறிக்கப்பட்ட இளம் குரும்மையின் இளநீரை ஊசி மூலமாக மென்மையான நாளங்கள் ஊடாக சிறுநீர்ப்பைக்குள்ளும் சிறு நீரகத்துக்கும் செலுத்தி விடுகிறார். அவ்விதம் நாளொன்றுக்கு மூன்று முதல் ஐந்து இளநீர்கள் வரையில் சிகிச்சை வழங்கும் தினங்களில் அவர் பயன்படுத்திக் கொள்கிறார்.

இவரது இந்தச் சிகிச்சை முறை நூற்றுக்குத் தொண்ணூறு முதல் தொண்ணூற்று எட்டு வீதம் வரையில் வெற்றியளிக்கும் சிகிச்சை முறையாகியுள்ளது. இன்றைய அளவில் அவரது இந்தச் சிகிச்சையின் மூலம் சிறுநீர்க்கற்களை அகற்றிக் கொண்ட நோயாளர்களின் எண்ணிக்கை பெருமளவிலானதாகும். மருத்துவ நிபுணர் மெக்கலல்கிரே வழங்கும் விளக்கங்களுக்கு அமைய,எப்போதும் இளநீர் அருந்துவதை வழக்கமாக்கிக் கொள்வது சுகநலத்தைப் பேணிக்கொள்வதற்குரிய அறிவுபூர்வமான செயற்பாடொன்றேயாகிறது. இளம் குரும்பையான இளநீரிலுள்ள சிறுநீர்சார்ந்த குணாம்சங்கள் காரணமாக சிறுநீரை வடித்தல் போன்றே சிறுநீர்ப் வெளியேற்றமும் இலகுபடுத்தப்படுகிறது.

அதேபோன்று இந்த நிலைப்பாட்டின் காரணமாக சிறுநீர்க்கல்லை வளரச்செய்வதற்கு ஏதுக்களாக அமையும் கனியுப்புக்கள் சிறுநீரகங்களிலோ,சிறுநீர் பையினுள்ளே தங்காது வெளியேறி விடுகின்றன.

இவ்வளவுக்கும் மேலாக சுவீடன் நாட்டு விஞ்ஞானியொருவரான சன்டர் மார்க்ஸ் வெளிப்படுத்தியுள்ளமைக்கு அமைய,

இளநீரானது உடலில் தேய்மானமுறும் தசைப்படலங்களைப் புத்துயிரூட்டுவதற்கும் உடலின் இளமையை அபிவிருத்தி செய்வதற்கும் தேவையான இரசாயனத் திரவங்கள் செறிந்துள்ள அற்புதமான போஷாக்கு மிக்க பானமொன்றாகும்.

-சரா. (முற்றும்)

# கோழிகளுக்கு எளிதில் புரிந்துகொள்ளும் தன்மை உண்டு



கோழிகள் அதிக உணர் திறன் கொண்டவை. மிகுந்த பாசம் கொண்டவை. துயர் ஏற்படும் நேரத்தில் வருந்தும் குணம் கொண்டவை. இந்த வருத்தங்களை மாற்றங்கள் மூலம் வெளிப்படுத்துகின்றன.

இந்த விடயங்கள் தற்போது முதன் முறையாக விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளன. பறவைகளில் மற்றவைகளின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் இந்த ஆற்றல் இருப்பது இது சம்பந்தமாக ஆராய்ந்த விஞ்ஞானிகளை ஆச்சரியப்பட வைத்துள்ளது.

காரணம் பறவைகளால் மற்றவற்றின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியும் என்பது இப்போதுதான் முதற் தடவையாக ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் மனிதனுக்கு மட்டுமே உண்டு என்று ஆரம்பத்தில் நம்பப்பட்டது.

ஆனால் காலப்போக்கில் அது விலங்குகளுக்கும் உண்டு என்பது நிரூபிக்கப்பட்டது. தற்போது கோழிகளுக்கும் அது இருப்பது தெரியவந்துள்ளதால், அவற்றின் மூளையின் செயற்பாட்டைப் பற்றி மேலதிகமாக ஆராய்வதில் விஞ்ஞானிகள் ஆர்வம் கொண்டுள்ளனர்.

கோழிகளை வைத்துப் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வின் முடிவிலேயே இந்தத் தகவல்களை வெளியிடப்பட்டுள்ளன.

கோழிகள் இவ்வாறு ஒன்றின் துன்பத்தைக் கண்டு மற்றொன்று உணர்ச்சி வசப்படும்போது அதன் இருதயத் துடிப்பு அதிகரிக்கின்றது. கண்களில் உஷ்ணம் குறைகின்றது என்றெல்லாம் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

# புண்களைக் குணப்படுத்த சிரிப்பு



புண்களைக் குணப்படுத்துவதற்குத் தற்போது பயன்படும் தொழில் நுட்பத்தைக் காட்டிலும் சிரிப்பு வெகுவாக உதவுகிறது என லீட்ஸ் பல்கலைக்கழகக் குழு தெரிவித்துள்ளது.


புண்களைக் குணப்படுத்துவதற்கு இத்தகவல் ஆய்வு 5ஆண்டுகளில் 338 நோயாளிகளிடம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


இந்த ஆய்வினை மேற்கொண்ட குழுவின் முதன்மை ஆராய்ச்சியாளரான பேராசிரியர் அஸ்ட்ரியா நெல்சன் கூறியதாவது, காயமடைந்த நோயாளிகளுக்கு கால் முதல் இதயம் வரை இரத்த ஓட்டத்தைத் தூண்ட முயற்சித்தோம். இந்த முயற்சிக்கு புண் ஏற்பட்ட நோயாளியை நன்கு சிரிக்க அறிவுறுத்துகிறோம்.

இப்படிச் சிரிப்பதால் முக்கிய உடல் உறுப்புக்களுக்கு இரத்த ஓட்டம் வேகமாகச் செல்கிறது. புண்களும் விரைவாகக் குண மடைகின்றன - என்றார். இந்த ஆய்வின்போது 6 மாதம் அல்லது அதற்கு மேற்பட்ட காலங்களில் புண்கள் மாறாத நோயாளிகளிடம் கவனம் செலுத்தப்பட்டது.

புண்களுக்குத் துணி கட்டி வழக்கமான சிகிச்சைமுறை அளிக்கப்பட்டு அல்ட்ராசவுண்ட் சிகிச்சை அளிப்பதால் விரைவாகக் காயம் குணமடைவதை உணர முடியவில்லை என்றும் இந்த ஆய்வுக்குழு தெரிவித்துள்ளது.

# மலர்களும் மருத்துவங்களும்







### எருக்கலம் பூ

- குஷ்ர நோய்க்கும் எருக்கலம் பூ நல்லது. எருக்கலம் பூவை உலர்த்தி இடித்து வைத்துக்கொண்டு தேனுடன் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் ஆரம்ப நிலை குஷ்ர நோயைக் குணப்படுத்தலாம்.
- கழுத்து வலிக்கு நல்லெண்ணெய்யில் எருக்கலம் பூவைப் போட்டுக் காய்ச்சித் தலையில் தேய்த்துக் குளித்தால் கழுத்து வலி நீங்கும்.
- பசும்பாலில் எருக்கலம் பூவைப் போட்டுக் காய்ச்சி ஆஸ்த்துமா நோயாளிக்குக் கொடுத்து வந்தால் மூச்சுத் திணறல் நீங்கும்.

### பலாப் பூ

- பலாப் பூவைக் கசாயம் செய்து குடித்து வந்தால் பெண்களுக்கு மாதவிலக்கு ஒழுங்காக வரும்.
- பலாப் பூவைச் சுத்தம் செய்து வேக வைத்து வீக்கத்தில் கட்டி வந்தால் விரைவில் வீக்கம் குறையும்.

### காசித்தும்புப் பூ

- காசித்தும்புப் பூவைக் கசாயம் செய்து சாப்பிட்டால் உடலில் ஏற்படும் கொப்பளங்கள் குணமாகும்.
- காசித்தும்புச் சாறு பிழிந்து வெந்நீர்விட்டுக் கொப்பளம் வந்த இடத்தில் பூசி வந்தால் எரிச்சல் குணமாகும்.

### பருத்திப் பூ

- பருத்திப் பூவைச் சிறிதளவு சாப்பிட்டு வந்தால் ஜீரணம் சரியாகி உடல் சுத்தியும் உண்டாகும்.
- பருத்திப்பூவை அரைத்துக் களியை தீக்காயங்கள் மேல் பூசி வந்தால் எரிகாய எரிச்சல் நீங்கிக் கொப்பளங்களும் அமுங்கிவிடும்.
- பருத்திப் பூவைக் குடிதண்ணீரில் சேர்த்துக் கர்ப்பிணிமார்களுக்கு, பிரசவித்த தாய்மார்களுக்கும் கொடுப்பது ஆரோக்கியம் தரும்.
- ஊமத்தை விதையை அரைத்துக் குடித்துத் தற்கொலை செய்ய முயல்பவருக்கு பருத்திப் பூவைக் கசாயம் செய்து கொடுத்தால் விஷம் முறியும்.

### தூதுவளைப் பூ

- தூதுவளைப் பூவைப் பாலிற் காய்ச்சி ஆஸ்துமா நோயாளிக்குக் கொடுத்தால் ஆஸ்துமா நோய் குணமாகும்.
- தூதுவளைப் பூவைப் பாலிற்காய்ச்சிக் காலையிற் குடித்து வந்தால் உடல் சிறந்த ஆரோக்கியத்தைப் பெறும்.

-சோபி. (மலர்கள் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org